கல்கி

KALKI 3.7.94 ரூ. 3.00



உங்கள் குழந்தை நன்றாக எடை போடுவதற்கு சமவிகித ஊட்டச் சத்து அத்தியாவசியமானது.

குழந்தைகள் சும்மா எடை போட்டால் மட்டும் போதாது. அவர்கள் 'சரியான' முறையிலே எடை போட வேண்டும். குறைவாகவும் கூடாது. மிகவும் அதிகமாகவும் கூடாது. குழந்தைகள் 'சரியான' அளவில் எடை போட வேண்டுமானால் தசைகளையும், திசுக்களையும் வளர்ப்பதற்கும் ரத்த விருத்திக்கும் உதவக் கூடிய **புரோட்டீன்கள்** தேவை.

இந்த புரோட்டீன்களைப் பெறுவதற்குச் சிறந்த வழி **ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைத் தர** வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு **4 மாதங்கள் ஆன பிறகு** பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு உங்கள் குழந்தைக்குத் தேவைப்படுகிறது.

எனவேதான் தாய்மார்கள் **ஸெரிலாக்கைத்** தேர்ந்தெடுக்கின்றனர். ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவான ஸெரிலாக்கில் புரோட்டீன்கள் செறிந்துள்ள இரண்டு முக்கிய பொருட்களான பாலும் கோதுமையும் உள்ளன. கொழுப்புச் சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்களும் சம அளவில் கலந்துள்ளன. மேலும் இதற்கு வைட்டமின்கள் A, D, E, B-காம்ப்ளெக்ஸ் மற்றும் C பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, ஸெரிலாக் இப்போது நெஸ்லேயின் **புரட்சிகரமான புதிய Z-லைன் என்ஸைமேட்டிக் முறைப்படி** தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகிறது. ஸெரிலாக் மிக எளிதில் ஜீரணமாகிவிடுகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது. எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் ஸெரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு புரோட்டீன்கள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை 'சரியான' முறையிலே எடை போடுவதற்குத் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு இது.




உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்.

இலவசம். ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்

உங்கள் குழந்தையின் வயது/பிறக்கக் கூடிய தேதி, உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களை எமக்கு எழுதுக: ஸெரிலாக், தபால் பை எண் 21, புது தில்லி - 110 029.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே, தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.



• உள்ளே.... பண்ணை வீடு

மூணுக்கென்றால் ஓய்வெடுக்க ஹைதராபாத் போய் விடுகிறார் முதல்வர். நமக்கு ஒரு அல்ப(!) ஆசை. அப்படி என்னதான் இருக்கிறது அந்த திராட்சைத் தோட்டத்தில் என்று போய்ப் பார்த்துவிட!

ஹைதராபாத்திலிருந்து நாக்பூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், நகரிலிருந்து 16 கி.மீட்டரில் உள்ளது ஜூடிமாட்லா என்ற கிராமம். அந்தக் கிராம எல்லைக்குட்பட்டு நெடுஞ்சாலையிலேயே இருக்கிறது ஜெயின் திராட்சைத் தோட்டம். அதற்குக் கொஞ்சம் முன்னால் இருக்கும் பெட்ரோல் பங்கிலேயே "ஜெயலலிதா அம்மாகாரு தோட்டம்" என்று தகவல் சொல்லிவிடுகிறார்கள்.

ஜெ.யின் திராட்சைத் தோட்டத்துக்கு ஒரு விசிட்!


பதினைந்து ஏக்கர். சுற்றிலும் எட்டடி உயரக் கருங்கல் சுவர். அதன் மேல் கம்பி வேலி. உயரமான கறுப்புக் கதவுகள். நம் அதிர்ஷ்டம், ஒரு கதவு இலேசாகத் திறந்தே கிடந்தது! கொஞ்சம் படபடப்புடன் எட்டிப் பார்த்தோம். தோட்டத்தில் யாரையும் காணவில்லை. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தோம். அந்தச் சமயம் அரை டிரவுசர், கட் பனியன் சகிதம் தோட்டத்தின் நடுவிலிருந்து ஒருவர் வந்தார்.

'என்ன, ஏது என்று விசாரித்தால் என்ன சொல்வது?'

"எம்பா இங்கே கிரீன்பார்க் எஸ்டேட் எங்கே இருக்கு?" என்று தெலுங்கில் கேட்க,

அந்த ஆள் 'தெலுங்கு தெரியாது' என்று சைகையிலேயே சொல்ல... புரிந்துவிட்டது! வாவ்.. தமிழர்! சுத்தத் தமிழர்! ராமநாதபுரம், கரிசல்பட்டி! தோட்டத்தில் எட்டு பேர் இருக்கிறார்களாம். (பெயரெல்லாம் எதுக்கு?) சென்னையில் கட்டட வேலை பார்த்துக் கொண்டிருந்தார்களாம். அன்னாரின் கருணையால்

• வெளியே... கோட்டை வாசல்!



(இனைப்பற்று?) கலபமாக உள்ளே போய் விட முடிந்தது!

கேட்டிலிருந்து நுழைந்தவுடன் இடது பக்கம் நான்கைந்து அறைகள் - தொடர்ச்சியாகக் கட்டப்பட்ட, வேலையாட்கள் தங்குவதற்கான அறைகள். கேட்டுக்கு நேர் எதிரே 50 மீட்டர் தொலைவில், பண்ணை வீடு உருவாகிக் கொண்டிருக்கிறது. முதல் மாடி வரை கட்டி, தளம் போட்டு விட்டார்கள். (இங்குதான் சசிகலாவின் அண்ணன் ஜெயராமன் ஷாக்கடித்து இறந்து போனார்). பால்கனிக்குப் போட கறுப்பு க்ரில்கள் தயாராக இருக்கின்றன. இன்னமும் ஸானிட்டரி, பிளம்பிங், வண்ணப்பூச்சு வேலைகள் பாக்கி.

ஐந்து ஏக்கரில், விதையுடன் கூடிய பழங்களைத் தரும் திராட்சைக் கொடி; ஐந்து ஏக்கரில் விதையில்லாத பழங்களைத் தரும் திராட்சைக் கொடி. திராட்சை தவிர, ஐந்து பப்பாளி மரங்கள் (இன்னமும் காய்க்கவில்லை), மூன்று தென்னை மரங்கள், ஒரு மாமரம், ஒரு வேப்பமரம் மற்றும் வாழை மரங்கள்.

திராட்சைக் கொடி பந்தல்களுக்கு அடியில் நடந்தோம். நம் அதிர்ஷ்டம், ஸீஸன் முடிந்து போய் விட்டதாம். ஒரு பழத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை. திராட்சைக் கொடிகளைப் பராமரிக்க என்று தனியாக ஒரு மேஸ்திரி போட்டிருக்கிறார்களாம்!

ஜெ. ஹைதராபாத்துக்கு வந்தால் போலீஸ் படையே தோட்டத்தில் ஆஜராகி விடுமாம். ஜெயராமன் இறந்து போன பிறகு, நம்பிக்கையாகப் பார்த்துக் கொள்ள ஆட்கள் கிடைக்கவில்லையாம்!


நம்முடைய கவலையெல்லாம், "திராட்சைக் கொத்துக்கள் பழமாகவே மார்க்கெட்டுக்குப் போகுமா, அல்லது IMFL ஆக மாற புருவரிக்குப் போகுமா?" என்பதுதான்! கேட்டோம்.

"அது எப்படி சார் சொல்ல முடியும்? மார்க்கெட்டுக்குன்னு வாங்கிட்டுப் போற வங்க கூட அப்பால அதையே புருவரிக்கு விற்று விடலாமில்லையா!" என்று பதில் கிடைத்தது.

கம்பன் வீட்டுக் கட்டுத் தறி மட்டும்தான் கவி பாடுமா என்ன!

- **தில்லப்பா**

படங்கள் : **ராஜன்**





அடுத்த இதழில்...

மணிக் கொடி

பொன்விழா நாவல்
போட்டியில் பரிசுபெற்ற

ஜோதிர்லதா கிரிஜா

எழுதிய
சரித்திரத் தொடர் ஆரம்பம்!


●● ரயில் டிரைவரோடு
ஒரு பயணம்!
ஸ்பெஷல் ரிப்போர்ட்

31.7.94 கல்கி
குவைத் சிறப்பிதழ்

கல்கி
7.8.94 ஆண்டு மலர்
சினிமா
சிறப்பிதழ்

கவர் ஸ்டோரி

கொள்ளையர்



அன்று இரவு படுக்கப் போகும் போது 'ஒரு மறக்க முடியாத கொடுமையான அனுபவம்' தனக்காகக் காத்திருக்கிறது என்பதை கொஞ்சம் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார் டாக்டர் ராமநாதன். பொன்னேரி ரெட்ஹில்ஸ் சாலையில் உள்ள கிருஷ்ணா நகரில் டாக்டருக்கு வீடு. வீட்டை ஒட்டினாற் போலவே நர்ஸிங் ஹோம். அன்று ஒரு வேலையாகச் சென்னைக்குச் சென்று வரும் போதே மிகவும் லேட்டாகி விட்டது. படுத்தவுடன் தூக்கம் கண்களைத் தாக்க அதற்கு அடிபணிந்து போனார்.

திடீரென்று கதவை யாரோ இடிப்பது போல சப்தம் கேட்கவே எழுந்தார். கடிகாரத்தில் மணி பார்த்தார். 2.55. லைட்டைப் போட்டு ஹாலுக்கு வந்தார். அங்கே துணியால் முகத்தை மூடிய படி கையில் உருட்டுக் கட்டைகளுடன் ஏழு பேர். உள்ளேயிருந்து வந்த ராமநாதனைக் கொள்ளையர்கள் பாய்ந்து அமுக்கினர். கத்தி முனையில் அவரையும், அவர் மனைவி விஜயா மற்றும் மூன்று மகள்களையும் பாத்ரூமுக்குள் தள்ளினர்.

விஜயா அணிந்திருந்த நகைகள் அனைத்தையும் பறித்துக் கொண்டனர். பாத்ரூம் கதவைத் தாளிட்டு விட்டு, பீரோவைத்திறந்து மற்ற நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டனர்.

டாக்டரை மேலும் மிரட்டி நர்ஸிங் ஹோமையும் திறக்கச் சொல்லி, முந்தைய நாள்தான் பிரசவித்திருந்த குமாரி என்ற பெண்ணைப் பயமுறுத்தி, அவள் கழுத்திலிருந்த ஆறு பவுன் சங்கிலியைப் பிடுங்கிக் கொண்டனர். பின்னர் நர்ஸிங் ஹோமிலேயே டாக்டரை வைத்துப் பூட்டி விட்டு, இருட்டில் மறைந்து விட்டனர்.

எல்லாம் அரை மணிக்குள் முடிந்து விட்டது. அப்புறம் போலீஸ் விசாரணை, மோப்ப நாய் என்று வழக்கமான விஷயங்கள்!

மேலே சொன்ன சம்பவத்துக்கு முன்னர் பொன்னேரி பக்கத்தில் சோழவரத்தில் டாக்டர் சூர்ய பிரசாத் என்பவர் வீட்டில்

புகுந்து 15 பவுன் நகையை அபேஸ் செய்து கொண்டு சென்று விட்டனர். அங்கேயும் இதே நிலைதான்!

சென்னையின் சுற்று வட்டாரங்களில் மீண்டும் கொள்ளைக்காரர்களின் லீலை ஆரம்பமாகி விட்டது. 'சட்டம் ஒழுங்கு கெட்டுப் போச்சு' என்ற எதிர்க்கட்சிகளும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

புறநகர்களில் இவற்றால் மக்கள் கதி கலங்கி இருக்கிறார்கள். கொஞ்சம் ஆர்வமுள்ள இளைஞர்கள் இரவு நேரங்களில் முறை வைத்துக் கொண்டு, தங்கள் பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் இறங்கியிருக்கின்றனர்.


கொள்ளையர்கள் வெய்யில் காலத்தைத் தங்கள் லீலைாக எண்ணிச் செயல்படுகிறார்கள். ஏனென்றால் அப்போதுதான் காற்றுக்காக ஜன்னல் கதவுகளை மக்கள் திறந்து வைத்திருப்பார்கள். சில வீடுகளில் தைரியமாக(!) கதவைத் திறந்து வைத்திருப்பவர்களும் உண்டு.


கையில் உருட்டுக் கட்டை, கோடாரி, கத்தி சகிதம் ஒருவர் இருவராக இல்லாமல், ஒரு கும்பலாகவே வருகிறார்கள். தேவைப் பட்டால் மட்டுமே தாக்குகிறார்கள். அவர்கள் கேட்டபடி, பீரோ சாவிகளைக் கொடுத்து விட்டுப் பேசாமல் இருந்தால் மேலே கையை வைப்பதில்லை. நெடுஞ்சாலை மற்றும் தனித்திருக்கும் வீடுகளைத்தான் பெரும்பாலும் அவர்கள் தேர்ந் தெடுக்கிறார்கள். வந்த சுவடே தெரியாமல்,

மரநிழலில் ஒதுங்கவா மாருதி ஜிப்ஸிகள்?

நகரில் குற்றங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் ரோந்து சுற்ற ஒன்னேகால் கோடி ரூபாய் செலவில் 39 மாருதி ஜிப்ஸி ஜீப்புகளை நகர போலீஸ் வாங்கியிருக்கிறது. ஒவ்வொரு ஜீப்பிலும் ஒரு சப்- இன்ஸ்பெக்டரும், இரண்டு கான்ஸ்டபிள்களும் இருப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது சப்-இன்ஸ்பெக்டர்கள் மிஸ்ஸிங்காக இருக்கிறார்கள். வெய்யிலுக்கு சௌகரியமாக ஏதாவது ஒரு மரத்தடியில் நிறுத்தி விட்டு ஜோவிய புத்தகங்களை படித்துக் கொண்டிருக்கிறார்கள் பல கான்ஸ்டபிள்கள். இவர்களை இன்னும் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்கச் செய்யலாமே!

எங்கேயாவது ஒரு 'கிரைம்' நடக்கிறது என்றால் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து காவலர்கள் புறப்பட்டுப் போகு முன்னர் ரோந்து சுற்றிக் கொண்டிருப்பவர்கள் முதலில் அந்த இடத்தை அடைந்து விடலாம் என்பதே நோக்கம். அது நிறைவேறுகிறதாகக் காணோமே!





நகரம் சென்னை

சில கொள்ளைக் கும்பல்கள்:

சென்னையின் சுற்றுப் புறங்களில் கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாகக் கொள்ளைகளில் ஈடுபட்டு வரும் குடும்பங்களில் முக்கியமானவை, டெல்லி சான்ஸி கும்பல், ஆந்திர ஸ்டுவர்ட்புரம் கொள்ளைக்காரர்கள், திருவண்ணாமலைக் குறவர்கள், மற்றும் கேப்மாரிகள் என்றழைக்கப்படும் தோகமலைக் குறவர்கள்.

எல்லா கொள்ளைக் கும்பல்களுக்கும் சில விஷயங்களில் பொதுவான ஒற்றுமைகள் உள்ளன. அமாவாசை, அதை ஒட்டிய மூன்று நான்கு தினங்களைத் தான் அவர்கள் கொள்ளையடிக்கத் தேர்ந்தெடுக்கின்றனர். பல கி.மீ. தூரம் சலிக்காமல், வேகமாக நடக்கும் ஆற்றல் பெற்றவர்கள். கொள்ளையடிப்பதற்கு முன், நைட் ஷோ சினிமாவுக்குச் செல்கின்றனர். பிறகு கொள்ளைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வீட்டிற்கு நடந்தே வருகின்றனர். வழியில் போலீஸ் சந்தேகப்பட்டு விசாரித்தால், பாதி டிக்கெட்டைக் காண்பித்து நழுவி வந்து விடுகின்றனர். கொள்ளையடித்து முடித்தவுடன், எல்லோரும் ஒன்றாகச் செல்வதில்லை. தனித் தனியாகப் பிரிந்து சென்று, பின்னர் சந்திக்கின்றனர். கூடிய மட்டும் ரயிலில் ரிசர்வ் செய்யப்படாத பெட்டிகளிலோ அல்லது லாரிகளிலோ பயணம் செய்கின்றனர். யாராவது ஒருவர் போலீஸில் மாட்டிக் கொண்டு சிறை புக நேரிட்டால் அவரது குடும்பத்தை மற்றவர்கள் கவனித்துக் கொள்கின்றனர். கொலை செய்யும் அளவுக்கு இவர்கள் துணிவதில்லை.

கடந்த 1983–84ல் புறநகர்களில் கொள்ளைகளில் ஈடுபட்டார்கள் சான்ஸி கொள்ளைக்காரர்கள். கதவை உடைப்பது, பூட்டைத் திறப்பது, கத்தியைப் குறி பார்த்து வீசுவது என்று எல்லா டெக்னிக்கையும் கற்றுத் தேர்ந்தவர்கள். கொள்ளையடிக்கும்போது, பெண்கள் சேலை மீது கூட விரல் படாமல் கட்டுப்பாடாக இருப்பவர்கள். கொள்ளையடித்த நகைகளைப் பெரும்பாலும் பனாரஸ் அல்லது மீரட்டில் சென்றுதான் விற்பார்களாம்.

ஆந்திராவில் சிராளாவுக்கு அருகில் உள்ளது ஸ்டுவர்ட்புரம். கடந்த ஐந்து வருடங்களாய், சென்னையின் சுற்றுப் புறங்களில், சரமாரியாகத் தங்கள் கைவரிசைகளைக் காண்பித்திருக்கிறார்கள், ஸ்டுவர்ட்புரம் கொள்ளை

அவர்கள் மறையும் வித்தைதான் ஆச்சரியமான விஷயம்!

"என் நாய்களுக்கு பிஸ்கட்டையும், இறைச்சியையும் போட்டு அடக்கி விட்டார்கள். சென்னையிலிருந்து வரும் போது, முதல் நாள் கொள்ளை நடந்த சோழவரம் வீட்டை பார்த்துக் கொண்டு தான் வந்தேன். அன்று இரவு என் வீட்டைக் கொள்ளையர்கள் தாக்குவார்கள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை" என்றார் டாக்டர் ராமநாதன்.

சோழவரம், பொன்னேரி, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் என்று கொள்ளைகள் எல்லாம் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்ட கிழக்குப் பகுதியின் போலீஸ் எல்லைக்குள்ளேயே நடந்திருக்கின்றன. மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் சைலேந்திரபாபுவுக்கு இப்போதெல்லாம் ராத் தூக்கம் போய் விட்டது.

"நான் இங்கு வந்து நான்கு மாதங்கள்தான் ஆகின்றன. மூன்று மாதங்களுக்கு முன்னரே ஆந்திரக் கொள்ளைக்காரர்கள் வசிக்கும் ஸ்டுவர்ட்புரம் பகுதிக்கு (பார்க்க: பெட்டிச் செய்தி) அதிகாரிகளை அனுப்பி சில குறிப் பிட்ட ஆட்களைக் கண்காணிக்கச் சொன் னேன். இப்போது கொள்ளைகளில் ஈடுபட் டிருப்பது கென்னடை கிருஷ்ணையா என்ப வனது கோஷ்டி தான். தனி போலீஸ் குழு மீண்டும் ஆந்திராவுக்குப் போயிருக்கிறது.

"முன்பு குற்றப் பரம்பரை சட்டம் என்று ஒன்று இருந்தது. பல தெரிந்த கிரிமினல்கள் விடுதலையாகி வெளியே வந்தவுடன் போலீஸ் நிலையம் சென்று தினமும் கையெழுத்துப் போட்டு வருவார்கள். இந்த முறை காரணமாக கிரிமினல்களைக் கண்காணிப்பது போலீசுக்கு எளிதாக இருந்தது. ஆனால் இப்போது 'டிராக்' விட்டுப் போய் அவர்களை மீண்டும் கண்டு பிடிப்பதில் சிக்கல் ஏற்படுகிறது" என்கிறார் சைலேந்திரபாபு.

போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருக்கிறது. இரவு விடிய விடிய போலீஸார் ரோந்துப் பணியில் இறங்கியிருக்கிறார்கள். சைலேந்திர பாபுவும், இரவு முதல் காலை வரை ரவுண்ட்ஸில்

சில தகவல்கள்



யர்கள். கையில் உருட்டுக் கட்டை, டார்ச் லைட் சகிதம் நடமாடுவார்கள். உள்ளே மூன்று நான்கு பேர் காரியத்தில் கண்ணாக இருக்கும் போது, வெளியே இரண்டு பேர் நோட்டம் விட்டுக் கொண்டிருப்பார்கள். இடுப்பில் அரை நிக்கர் தான். முகத்தைத் துணியால் மூடி இருப்பார்கள். ஒரு வீட்டைக் கொள்ளை யடிக்கும் முன் பகலில் சப்பாத்திக் கல் விற்பவர்களாக வந்து மோப்பம் பிடித்து விட்டுப் போவார்கள். ரொம்பவும் தவிர்க்க முடியா விட்டால்தான் கொலைகளில் இறங்குவார்கள். இவர்கள் ஸ்டுவர்ட்புரத்தி லிருந்து கிளம்புவதற்கு முன்னர் சாமிக்குப் படையல் வைத்து, வயிறு முட்ட பன்றி மாமிசம் சாப்பிட்டு, சகுனங்கள் சரியாக இருந்தால் மட்டுமே புறப்படுவார்களாம்!

கேப்மாரிகள் என்றழைக்கப்படும் தோகமலைக் குறவர்கள் பாசி மணி ஊசி யெல்லாம் விற்பவர்கள் அல்ல. நம்மைப் போல் பேண்ட், ஷர்ட், போட்டுக் கொண் டிருப்பவர்கள்தான். வங்கிகள் மற்றும் தபாலாபீஸுகள் தான் இவர்களுக்குத் தோதான இடங்கள். ஏனென்றால் அங்கே தான் ரொக்கமாகக் கிடைக்கிறதாம். திரு வண்ணாமலைக் குறவர்கள் போதை தலைக் கேறும் வரை குடித்து விட்டுத்தான் தொழிலுக் குக் கிளம்புவார்கள். கதவை உடைத்து உள்ளே நுழைந்தவுடன் முதலில் ஆண்களைக் கட்டிப் போட்டு விடுகின்றனர். கையில் கிடைக்கும் மதிப்புள்ள பொருட்கள் எதையும் விட்டு வைப்பதில்லை இவர்கள். பெண்களை ஆயுள் உள்ள வரை மறக்க முடியாத வகையில் சீண்டிவிட்டுப் போவதை போனஸாகச் செய்பவர்கள். எட்டு வருடங்களுக்கு முன்னர் செங்கல்பட்டு பகுதிகளில் இவர்கள் அடித்த கொட்டத்தைப் பற்றி போலீஸ் நண்பர்களே கதை கதையாகச் சொல்கிறார்கள்.

இருக்கிறார். அப்படி யொரு ரவுண்டின் போது நம்மையும் உடனழைத்துக் கொண்டு போனார் அவர்.

இரவு பதி னொன்றரை மணி வாக்கில் அவருடன் ஜீப்பில் கிளம்பி னோம். யந்திரத் துப் பாக்கி ஏந்திய போலீஸ் ஒரு வேனில் பின் தொடர்ந்தனர். பரங்கிமலை அலு வலகத்தில் கிளம்பி, நேரு சிலையில் இடது புறமாகத் திரும்பி, நூறடி ரோடில் விரைந்தது ஜீப். வழி யில் சந்தேகப்படும் நபர்களைப் பிடித்து எஸ்.பி. உத்தரவின் பேரில் அதிரடிச் சோதனை. சிலர் வேனில் ஏற்றப்பட்டனர். மாவட்டம் முழுவதும் இருந்த போலீஸ்காரர்களை போலீஸ் ஒயர் லெஸ்ஸில் விரட்டிய படியே இருந்தார் எஸ்.பி. ரோந்து மையத்தில் தூங்கிக் கொண்டிருந்த இரு போலீஸ்காரர் களுக்குக் கடுமையான எச்சரிக்கை கொடுத்து, மறுநாள் கண்ட்ரோல் அறைக்கு வரச் சொன் னார்.


• சைலேந்திர பாபு
செங்கல்பட்டு மாவட்ட
எஸ்.பி.


பொன்னேரி வரை சென்று மீண்டும் ஜீப், பரங்கிமலைக்குத் திரும்பிய போது ஆவின் பால் நிலையங்கள் சுறுசுறுப்பாகி இருந்தன. அத்தனை நேரமும் மனிதர் ஒரு டீயோ, பச்சைத் தண்ணீரோ குடிக்காமல் இமைகளைச் சிறிதும் மூடாமல் சுற்றுப் புறங்களை உற்றுப் பார்த்தபடியே வந்தார்!

"புறநகர்ப் பகுதியில் நாற்பது லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். போதிய வாகன வசதிகள் இருந்த போதிலும் போலீஸ் எண் ணிக்கை 1,000தான். மேலும் 17000 சிறிய பெரிய தொழிற் சாலைகள் இருக்கின்றன. அங்கு பல பிரச்னைகள். தவிர, பாதுகாப்பு, கோர்ட்டு டியூடி என்று பல வேலைகள். இத் தனை சிரமங்களுக்கும் நடுவில்தான் ஆட் களை ஒருங்கிணைத்து ரோந்து வேலைகள் செய்து வருகிறோம்!"

- ப்ரியன்

அட்டை வண்ணப்படம் : **யோகா**

நடிப்பு :
நரசிம்மன், திருமதி மீனா நரசிம்மன்



பிரதமர்
ஜனதா தளத்திலிருந்து பிரிந்த 54 எம்பிக்கள்
ஹையா...! தொப்பி பொருந்தினமாதிரி அந்த கோட்டும் பொருந்திடுச்சுன்னா ஜாலியா இருக்கும்....
என்னோட வாங்கு... நான் வாங்கித் தர்றேன் 69....
அ.தி.மு.க
தமிழக மக்கள்
ஐயையா, சறுக்குறாங்களே.. சறுக்குறாங்களே...



கல்கி



1994
ஜூலை 3
பவ
ஆனி 19
மலர் : 52
இதழ் : 49

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

இட ஒதுக்கீட்டிலிருந்து அரசியலை ஒதுக்குங்கள்!

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி – அதாவது சட்டப்படி– 'இந்த ஆண்டு ஐம்பது சதம் ஒதுக்கீடுதான்' என்று அண்ணா பல்கலைக் கழகம் அறிவித்த பிறகே தூக்கி வாரிப் போட்டது போல் விழித்துக் கொண்டார்கள் தமிழகத் தலைவர்கள். ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொண்டும் "லபோ திபோ" என்று அடித்துக் கொண்டும் பிற்படுத்தப் பட்டவர்களுக் காகப் போராடப் பொங்கி எழுந்தார்கள்.

"மறியல்" என்று கருணாநிதி அறிவித்தாரோ இல்லையோ, ஜெயலலி தாவுக்குக் கிலி பிடித்துக் கொண்டது. 'இந்த மனுஷன் மறியல் பண்ணி மக்களிடம் அனுதாபத்தைத் தட்டிக் கொண்டு போய் விட்டால் என்ன பண்ணுவது?' என்ற கவலை ஆட்கொள்ள, மு.க.அறிவித்த மறியல் தினத் தன்றே 'அரசு ஆதரவில் முழு கதவடைப்பு' என்று அறிவித்தவரே கிராட்சைத் தோட்டத்திலிருந்து ஓடோடி வந்தார்! அரசு சார்பில் விடுமுறை விட்டு, ரயில், பஸ் போக்கு வரத்தையும் நிறுத்தி வைத்து, பிறகு "கத வடைப்பு பூரண வெற்றி" என்று கூறுவது அபத்தம் என்று யாருமே எண்ணிப் பார்ப்பதில்லை. எத்தனை கோடி உற்பத்தி நஷ்டம்; தமிழகத்துக்கு எவ்வளவு இழப்பு; எத்தனை மக்களின் காரியங்களுக்கு இதனால் தடங் கல் ஏற்பட்டது என்பதெல்லாம் பற்றி யாருக்கும் கவலை இல்லை! அரசு ஊழியர்கள் வீட்டிலே வீடியோ பார்க்கலாம்; அன்றாடங் காய்ச்சிகள் வயிற்றில் ஈரத்துணி விரிக்கலாம்! அரசியல் வாதிகளுக்கு என்ன போச்சு! அவர்கள் கவலையெல்லாம், 'எதிர்த் தரப்பினருக்குப் புகழ் சேரக்கூடாது; எல்லாப் பாராட்டும் நமக்கே வந்து சேரவேண்டும்!'

இப்படி நெகடிவ்வாக சிந்திப்பதற்குப் பதில், "முன்னாள் முதல்வரே, தி.மு.க. தலைவரே! எமது அரசின் நோக்கமும் 69 சதம் இட ஒதுக்கீடு தானே? எனவே வருக! வந்து கோட்டை முன் மறியல் நடத்துக! ஆனால் அமைதியாக நடக்கட்டும். தொண்டர்களுக்கும் சொல்லி வையுங்கள். போலீஸ் பாதுகாப்புத் தருகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். நானே காரியா லயம் விட்டு வெளியே வந்து உம்மை வரவேற்கிறேன்; உமது கோரிக் கைகளை ஏற்கிறேன். பிறகு இருவருமாகச் சேர்ந்து மத்திய அரசை வற் புறுத்துவோம்" என்று கூறியிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்! ஜனநாயகப் பண்பு என்பது இதுதானே?

ஆனால் 'தான்' என்ற எண்ணம் முன் நிற்கும் போது இந்தப் பண்புகள் மறந்து போக, 'அரசு சார்பில் பந்த்' என்று அறிவிக்கப்படுகிறது. கருணாநிதி மறியலை திங்கட் கிழமைக்கு ஒத்திப் போடுகிறார். சட்ட ஒழுங்கு சீர்குலையும் என்று காரணம் காட்டி பல்லாயிரக் கணக்கான எதிர்க் கட்சியினர் சிறையில் தள்ளப்படுகின்றனர். போக்கு வரத்து ஸ்தம் பித்ததும் சிக்னல் விளக்குகள் நொறுங்கியதும்தாம் மிச்ச லாபம்! நரசிம்மராவ் மௌனம்!

அப்படியே அவர் மௌனம் கலைந்து, தமிழக சட்ட மன்றத்தின் 69 சதம் ஒதுக்கீடு தீர்மானத்துக்கு ஜனாதிபதி ஒப்புதலைப் பெற்றுத் தந்தாலும் ஏழை எளியோருக்கா ஒதுக்கீடான இடங்கள் கிடைத்து விடப் போகின்றன? அதிலும் பொருளாதாரத்திலும் கல்வியிலும் ஏற்கெனவே மேம்பட்ட மேல் தட்டு மக்கள்தாம் அதிகப்பலன் அடையப் போகிறார்கள். இதைப் பிற்படுத்தப்பட்டோரில் ஏழைபாழைகளே தட்டிக் கேட்க முடியாத நிலை!

இப்போது நீதிமன்ற உத்தரவைச் சுற்றி வளைக்க, "கல்வி நிலையங்களில் இடங்களை அதிகரிப்போம்" என்கிறது அரசு. 'இதற்கேற்ப பத்தே நாட்களில் வசதிகளைப் பெருக்குவது நடக்கிற காரியமா? பணத்துக்கு எங்கே போவது?' என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, 'அதிகரிக்கப்பட்ட நிலையில் உள்ள மொத்த இடங்களில் 69 சதவீத ஒதுக்கீடு வேண்டும்' என்று எதிர்க் கட்சியினர் கூப்பாடு போடாமலா இருப்பார்கள்? அரைவேக்காடு திட்டங்கள் பிரச்னையைத் தீர்க்காது; போராட்டங்களைத்தான் வளர்க்கும்.

இட ஒதுக்கீடு பிரச்னையை அணுகுமுன்னர், தலைவர்கள் அரசியலை ஒதுக்கி வைக்க வேண்டும். அவ்வாறு செய்யாத வரை, பிற்படுத்தப்பட்ட மக்களிடம் இவர்களுக்கு மெய்யான அக்கறை இல்லை என்பது தெளிவு. வோட்டுப் பிடிக்க வேண்டும்; அல்லது தங்கள் ஆட்சி நிலைக்க வேண் டும் என்ற கவலைதான்!



ஜெய்ஹிந்த்

சேஷன் மாதிரி ஒன்மேன் ஷோ காட்டியிருக்கிறார் அர்ஜுன். அவரது துணிச்சலுக்கும் தொழில்நுட்ப சாதனைகளுக்கும் முதற்கண் சாஷ்டாங்க நமஸ்காரம் செலுத்தி விட்டு ஆரம்பிக்கலாம்.

கதைக் கரு என்ன? தேசபக்தி மிக்க போலீஸ் அதிகாரி - தீவிரவாத ஒழிப்பு. தெரிந்த விஷயம் என்றாலும் தேவையானதுதான்.

அப்புறம் சென்டிமெண்ட்ஸ். அம்மா - பிள்ளை சென்டிமெண்ட், அண்ணன் - தம்பி சென்டிமெண்ட், தாலி, பூ மகத்துவம் இன்னபிற சாபக் கேடு சமாசாரங்கள். லோ, புறங்கையால் ஒதுக்கி விடலாம்.

காதலி இல்லாமலா? ஆடைக் குறைப்புக்கு அஞ்சாத ரஞ்சிதாவுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இதற்கு மேலும் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது என்று கோபமாகக் கடிதம் எழுதக் காத்திருக்கும் அரவக்குறிச்சிப்பட்டி, அரகண்டநல்லூர், ஐயாறு இன்னபிற இடங்கள் வாழ் கடிதர்கள் கவனத்திற்கு :

காட்சி அமைப்புகளால் வித்தியாசமாக அசத்தியே தீருவது என்று முடிவெடுத்தபின் பிரும்மாண்டத்துக்குப் பஞ்சம் என்ன?

எங்கோ ஒரு தீவில் உட்கார்ந்து கொண்டு தமிழ்நாட்டில் (அனிமேஷன்) பில்டிங்குகளை அழித்துத் தள்ளும் தீவிரவாதிகளைத் தேடி, துணைக்கு நான்கு ஆயுள் கைதிகளோடு (இது வேறெங்கோ கேட்ட - பார்த்த மாதிரி இல்லை?) கிளம்புகிறாரே, அர்ஜுன் - அங்கு பிடிக்கிறது ஆயிரம் டிகிரி சூடு!

திடீர் திடீரென்று காற்றில் பறந்து வந்து தாக்கும் கலப்பைகளுக்கு ஒரு '3-D effect' கொடுத்து, நரம்புகளைச் சுண்டிப் பார்க்கிறார்கள் பாருங்கள், வாரே வா!

எல்லாவற்றிலும் பர்ஃபெக்ஷன் பார்க்கும் அர்ஜுன், மூன்று விஷயங்களில் கோட்டை விட்டிருக்கிறார்.

1. இசை - இல்லாமல் இருந்தாலே சிறப்பாக இருந்திருக்கும் என நினைக்கச் செய்யும்படியான சித்திரவதை.

2. நெளியவைக்கும் நீள நீள வசனங்கள். வசனகர்த்தா முன்னாளில் டி.வி. எதிரொலியில் பதில் சொல்பவராக இருந்திருப்பாரோ?

3. அந்த வில்லன் - ஒரு அப்பாவியைப் பிடித்து ரவுடி வேஷம் போட்டாற்போல - ஒரு மிடுக்கு வேண்டாமோ?

உருப்படியான ஒரு கருத்தைச் சொல்ல நினைத்ததை அவசியம் பாராட்ட வேண்டும். அதைச் சொல்லத் தெரியாமல் தவித்திருப்பதைப் பார்த்து பெருமூச்சு விடவும் வேண்டும்!

- ஆர்.பி.ஆர்.

Kalki Shopping Page

LEENA

DRESSES & DESIGNERS



Exclusive
Churidars
Midies & Tops
Nighties

LEENA SHOE PARADISE

Dealers in

Bata, Action, (Sports Shoes)
Phoenix, Rex, Premier,
Anchor Sox etc.

42, Ranganathan Street,
Golden Plaza, Shop No. 6 & 11,
T. Nagar,
Madras - 600 017.



STEP IN FOR
Raymond's
DIGJAM
SUITINGS & SHIRTINGS

NEWLOOK TAILORS

WE ACCEPT CREDIT CARDS

Opp. : T. Nagar Bus Terminus
Madras - 17 Phone : 44 34 46
NO BRANCHES
We specialise in Bridegroom's dress to make the bride proud.

மங்கள கரமான உயர்ரக மதுரை
சுங்குடி புடைவை எங்கே
கிடைக்கும் என்று என் மேல்நாட்டு
மருமகள்கிட்டே கேட்டேன்? அவ
ராமச்சந்திரா சாரீஸ்லே
கிடைக்கும்னு சொல்லிட்டா!



புத்தம் புதிய டிசைன்களில்
உயர்ரக மதுரை சுங்குடி புடவைகளுக்கு

RAMACHANDRA SAREES

(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)

37-B, Arya Gowder Road, Postal Colony Bus Stop
West Mambalam, Madras - 33.

வழங்குவோர் : ராமசந்திரா சாரீஸ், 20-B பழைய குயவர்பாளையம் ரோடு, மதுரை - 9.

எங்களிடம் இப்பொழுது தரமான வெங்கடகிரி புடவைகளும், பெங்கால் (அ) கல்கத்தா காட்டன் புடவைகளும் கிடைக்கும்

Kalki Shopping Page

Kalki Shopping Page

Kalki Shopping Page



வசந்தியின் வண்டிக்கு வரவேற்புச் சொல்லுவோம்!

எழும்பூர் ஸ்டேஷன்.

''என்னப்பா ஆட்டோ, வர்றயா?'' என்று கேட்கிறார் பயணி.

ஆட்டோவுக்கு மறுபுறம் காக்கி சீருடையில் முதுகு மட்டும் தெரியும்படி நின்று கொண்டிருக்கும் டிரைவர், "எங்கே ஸார் போகணும்; வாங்க ஸார்" என்று பணிவாகச் சொல்ல பயணிக்கு ஏக அதிர்ச்சி!

காரணம், அந்தப் பணிவான குரலுக்குரிய ஆட்டோ டிரைவர் ஒரு பெண்!

"ஏம்மா... நீங்கதான்..." என்று தயங்கியவாறே பயணி கேட்க "ஆமாம் ஸார், உட்காருங்க" என்கிறார் டிரைவர். கொஞ்சம் ஆச்சர்யத்துடனும், வெட்கத்துடனும், பயணி ஏறி உட்கார்ந்து ''மவுண்ட் ரோடு" என்று சொல்கிறார். ஆட்டோ சாலையில் சீறிப் பாய்கிறது.

சேலம் மாவட்டம் வெள்ளைக்கல் பட்டியைச் சேர்ந்தவர் வசந்தி. ப்ளஸ் டூ வரை படிப்பு. தூரத்துச் சொந்தக்காரரான ராமமூர்த்தி, வசந்தியின் ஊரிலேயே தையல் கடை வைத்திருந்தார். கண்களின் சந்திப்பு பெற்றோரின் எதிர்ப்பையும் மீறிக் கல்யாணத்தில் முடிந்தது.

வசந்தியின் வீட்டில், "வீட்டை விட்டுப் போய் விடு" என்று பெற்றோர்கள் துரத்தி விட்டனர். ("எனக்குக் கருமாதி பண்ணிட்டாங்க"). கணவர் ராமமூர்த்தியுடன் எதோ ஒரு தைரியத்தில் சென்னைக்கு வந்து விட்டார். அப்புறம்? வசந்தியே தொடர்கிறார்:

"அண்ணா நகரில் வந்து ஓர் இடத்தில் தங்கினோம். என் வீட்டுக்காரருக்கு டெய்லரிங், கட்டட வேலைகள் தவிர, ஆட்டோவும் ஓட்டத் தெரியும். வாடகை ஆட்டோ ஓட்ட ஆரம்பித்தார் அவர். தினமும் மதிய வேளைகளில் சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வருவார். அப்போது நான் சும்மா இல்லாமல் ஆட்டோ ஓட்டப் பழகிக் கொண்டேன்.

"ஒரு நாள் அப்படித்தான் எங்கள் ஏரியாவில் ரவுண்ட் அடித்துக் கொண்டு இருந்தேன். ஒரு பெண், "ஏம்மா அவசரமா ப்ளூ ஸ்டார் வரைக்கும் போகணும்" என்றார். "நான் டிரைவர் இல்லேங்க. சும்மா ப்ராக்டீஸ் பண்ணிட்டிருக்கேன்" என்றேன். "ரொம்ப அவசரம்மா" என்று அந்தப் பெண்மணி வற்புறுத்தவே, அவரைக் கொண்டு போய் இறக்கி விட்டேன். அதுதான் என் முதல் சவாரி. இப்போது கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிவிட்டது! பிறகு முறைப்படி லைசென்ஸ் எடுத்துக் கொண்டேன்" என்கிறார் வசந்தி.

"மற்ற ஆட்டோக்காரர்களின் ரீஆக்ஷன் என்ன?"

"முதலில் பிரமிப்புதான். 'பொம்பளையா ஓட்டுது!' என்று வந்து பார்த்து விட்டுப் போவார்கள். இப்போ அதெல்லாம் போய், அவர்களுள் ஒருவாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள். தோழமையுடன் கை ஆட்டுகிறார்கள்; சிரிக்கிறார்கள்."

"பயணிகளாலோ அல்லது சக டிரைவர்

களாலோ ஏதேனும் தொந்தரவுகள்?"

"சக டிரைவர்கள் ரொம்பவும் ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள். ஆட்டோ மக்கர் செய்தால், 'என்னம்மா?' என்று கேட்டு, சரி செய்து விட்டுப் போகிறார்கள். பல சமயங்களில், என் வண்டிக்குச் சவாரியை அனுப்பியும் வைக்கிறார்கள். பொது ஜனங்கள் யாரும் மோசமாக நடந்து கொள்வதில்லை. அப்படி யாராவது நடக்க முயற்சி செய்தா நடு ரோட்டிலேயே வண்டியை நிறுத்தி விட்டு சப்தம் போடுவேன்! ஆனால் நானும் ஆட்களை ஸ்டடி பண்ணித்தான் வண்டியில் ஏற்றுவேன். மீட்டருக்கு மேலே கேட்பது கிடையாது. அவர்களாகவே கொடுத்தால் வாங்கிக் கொள்வேன்."

வசந்திக்கு இரண்டு ஆண் குழந்தைகள். காலையில் அவர்களை ஸ்கூலுக்கு அனுப்பி விட்டு, வண்டியை எடுத்துக் கொண்டு முகப்பேர் கிழக்கில் இருக்கும் வீட்டிலிருந்து நேராக எக்மோர் சென்று விடுகிறார். "மாலை ஆறு மணிக்கு மேல் ஓட்ட மாட்டேன். வீட்டுக்குப் போனால் சமைப்பதற்கும், குழந்தைகளுக்கு ஹோம் ஒர்க் சொல்லிக் கொடுக்கவும் நேரம் சரியாக இருக்கும்" என்கிறார் வசந்தி. கணவர் ராமமூர்த்தியும் ஆட்டோ ஓட்டுகிறார்.

"பெண்கள் இந்தத் தொழிலுக்கு தைரியமாக வரலாமா?"

"ஏன் ஸார். நான் வந்திருக்கேனே! மனசில் சுத்தமும், தைரியமும் இருக்கிற பெண்கள் தாராளமாக இந்தத் தொழிலுக்கு வரலாம். ஆனால் என் கணவரிடம் உள்ளது போன்ற பரந்த மனப்பான்மையும், சந்தேகப்படாத குணமும், அந்த பெண்களின் கணவன்மார்களுக்கும் பெற்றோர்களுக்கும் இருக்க வேண்டும்; அவ்வளவுதான்!" என்கிறார் வசந்தி பெருமிதமாக!

ஆனால் வசந்தியின் இப்போதைய கவலை, சொந்தமாக ஓர் ஆட்டோ வாங்க முடியவில்லையே என்பதுதான். 'டிக்' (TIIC) கை அணுகினால் பங்குப் பணமாக (Margin Money) ஆயிரக்கணக்கில் கேட்கிறார்களாம். "வருகிற வருமானம், வாடகைக்கும், வயிற்றுக்குமே சரியா இருக்கு. அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போவேன்? எவ்வளவோ பேருக்கு உதவுற முதல்வர், இந்த விஷயத்தில் எனக்கும் உதவினால், மிகவும் நன்றியுடையவளாக இருப்பேன்" என்கிறார் வசந்தி.

வசந்தி போன்ற ஓட்டுனர்களின் எண்ணிக்கை பெருகினால் தமிழகமே வரவேற்று நன்றி சொல்லாதோ!

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**
படம் : **ராஜன்**

பரிசு ரூ.250!

இவர்கள் ஒன்று சேர்ந்தால்!...

அரசியலில் எதுவும் நடக்கலாம்; நாளைக்கே கலைஞரும் வை.கோவும் ஒன்று சேர்ந்து கொள்ளலாம். அப்படி வை.கோ. பழையபடி தி.மு.க.வுக்குத் திரும்பி வரும் போது கலைஞர் என்ன சொல்லிக் கட்சியில் சேர்த்துக் கொள்வார்? வை.கோ. என்ன சொல்லிக் கட்சியில் வந்து சேருவார்?

இருவரின் உரையாடலையும் ஒரு சில வரிகளில் அருகில் உள்ள வெற்றிடத்தில் எழுதி அனுப்புங்கள்.

நகைச்சுவைக்கே முதலிடம்! மிகச் சிறந்த நகைச்சுவைக்குப் பரிசு ரூ. 250/-. ஆறுதல் பரிசுகளும் உண்டு.

முடிவு தேதி : 6.7.94
ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.


பெயர் :

விலாசம் :





காலமெல்லாம் உழைத்துக் களைத்த நீங்கள் கவலையில்லாமல் இருக்க வேண்டாமா?



RPS PENSIONER'S BENEFIT DEPOSIT SCHEME

இதோ ஓர் அருமையான திட்டம்: **RPS** பென்ஷனர் பெனிஃபிட் டெபாசிட் திட்டம். நீங்கள் ஒரே தொகையாக ரூ. **12,000/-** முதலீடு செய்தால் போதும். (அல்லது அதன் மடங்குகளிலும் செலுத்தலாம்.) ஆண்டுக்கு **20%** என்கிற விகிதத்தில் மாத வட்டி பெறலாம். குறைந்தபட்ச டெபாசிட் காலம் ஒரு ஆண்டு. டெபாசிட் காலம் முழுவதற்குமான வட்டித் தொகை பின் தேதியிட்ட காசோலைகளாக முன்னதாகவே அளிக்கப்பட்டு விடுகின்றன. வேலையிலிருந்து ஓய்வு பெற்றால் என்ன? மாதா மாதம் வருமானம் பெற முடியுமே! **RPS** பென்ஷனர் டெபாசிட் திட்டம் — கவலையில்லாமல் இருக்க ஒரு நிச்சயமான வழி.

எக்சிக்யூடிவ் பிரசிடெண்ட்: **P.G.** சரண்யன்,
முன்னாள் தலைவர்,
கரூர் வைஸ்யா பாங்க் லிட்.


RPS
BENEFIT FUND LTD.
(Declared as 'Nidhi' by the Central Government)

தலைமை அலுவலகம்: 16, இராமநாதன் தெரு,
தி. நகர், சென்னை-17. போன்: 441554, 441346.
கிளைகள்: இராயபுரம்
(சென்னை) — போன்: 556164.
கோயம்புத்தூர் — போன்: 43576.
பாண்டிச்சேரி — போன்: 31859.
பெங்களூர் — போன்: 366433.

உறுப்பினர்களுக்கு மட்டும்

பாதுகாப்பான வழியில் விரைவான வளர்ச்சி

AKSHAR RPS/94122



கர்நாடக அரசின் 'தாய்மொழிக் கல்வித் திட்டம்' பெரிய பிரச்னை உண்டுபண்ணி விட்டது. ஜூன் ஒன்றாம் தேதி ஆரம்பிக்கப் பட வேண்டிய துவக்கப் பள்ளிகள் அனைத்தும் காலவரையின்றி மூடப்பட்டு விட்டன.

ஆரம்பக் கல்வி, தாய்மொழியில்தான் இருக்க வேண்டும் என்பது சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு. அதாவது நான்காவது வகுப்பு வரை தாய்மொழியில் மட்டுமே பாடம். உடனடியாக கோர்ட் தீர்ப்பை அமல்படுத்தச் சொன்னால் அதற்கான ஆசிரியர்களுக்கும், பள்ளியறைகளுக்கும் எங்கே போவது என்றெல்லாம் குழம்பிய முதல்வர் கொஞ்சம் தாமதித்தார்.

ஆனால் மொழி ஆதரவாளர்கள் பயங்கர நெருக்கடி தந்தார்கள். கன்னட எழுத்தாளர்களில் ஒருவர் 'சாகும் வரை உண்ணா விரதம்' - என்று அறிவித்து விதான் சௌதா முன்பு உட்கார்ந்தார்.

வேறுவழியில்லாத மொய்லி, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை உடனடியாக அமல்படுத்தவும் கண்காணிக்கவும் கமிட்டி ஒன்றை அமைத்தார். இந்தக் கமிட்டியின் அறிக்கையின்படி ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் - அதாவது ஆங்கிலோ இந்தியர்கள் மட்டும்தான் ஆங்கில மீடியம் படிக்கலாம். மற்ற குழந்தைகள் அவ்வளவு பேரும் தாய்மொழி மூலம்தான் கட்டாயமாகப் பயில வேண்டும். ஆங்கில மீடியம் கிடையாது. ஆனால் கன்னடியர் அல்லாத பல சமூகத்தினரின் குழந்தைகளுக்குத் தாய்மொழி மூலம் எப்படி கல்வி புகட்டுவது? இந்தப் பிரச்னையைச் சமாளிக்க ஒரு நூதன நடைமுறையை அறிவித்தார்கள்.

கன்னடம் அல்லாதவர்கள் படிக்கும் பள்ளிகளில் தமிழோ, தெலுங்கோ, மலையாளமோ மராத்தியோ தாய்மொழியாகக் கொண்ட குழந்தைகள் குறைந்தபட்சம் முப்பது பேராவது ஒரு வகுப்பில் இருந்தால் நான் குறிப்பிட்ட அந்தத் தாய்மொழியில் படிக்கலாம். அப்படி முப்பது பேர் இல்லாத வகுப்புகள் கன்னடத்தில் மட்டுமே நடக்கும்! உதாரணமாக, பெங்களூர் போன்ற காஸ்மாபாலிடன் நகரத்தில் ஒரு வகுப்பில், இருபத்தெட்டு தமிழ்க் குழந்தைகள்; பத்துப் பேர் தெலுங்கு; நான்கு பேர் மலையாளம்; ஐந்து கன்னடம்; மூன்று உருது... என்று அமைந்துள்ளதா? எல்லாப் பாடங்களையும் கன்னடத்தில்தான் படித்தாக வேண்டும்!


இதை அப்படியே திருப்பிப் போட்டு ஒரு வகுப்பில் முப்பது பேர் கன்னடமாக இருந்தால் மட்டுமே கன்னட மீடியம் - என்பதாக வைத்துக் கொள்வோமானால் பெங்களூர்ப் பள்ளிகளில் கன்னட மீடியமே துவங்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடுமே என்று யாரும் யோசிக்கக் காணோம்! அப்படி யோசித்தால் அந்தி புரிந்து விடுமே!

அரசாங்க உத்தரவை எதிர்த்தும், கமிட்டியின் விதிமுறைகளை எதிர்த்தும் கோர்ட்டுக்குப் போயிருக்கின்றன தனியார் பள்ளிகள். "எங்களுக்கு சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்கா விட்டால் வேறு வழியில்லை; நாங்கள் பள்ளிகளை மூடி விடுவோம்" என்று அறிவித்திருக்கின்றன சில தனியார் பள்ளிகள்.

இதற்கிடையில் காலவரம்பற்று பள்ளிகள் மூடி விட்ட சந்தோஷத்தில் விளையாடிக் கொண்டிருக்கின்றன துவக்க வகுப்புப் பிள்ளைகள்!

"ஜாலி டூர்!"

பெங்களூர் மாநகராட்சி உறுப்பினர்கள் சமீபத்தில் அகமதாபாத், கல்கத்தா, ஹைதராபாத், டெல்லி, பம்பாய் என்று ஒரு பெரிய 'ஸ்டடி டூர்' அடித்து விட்டுத் திரும்பியிருக்கிறார்கள். எதை 'ஸ்டடி' செய்தார்கள் தெரியுமா? துப்புரவுப் பணியாளர்களை எப்படி வேலைக்கு எடுப்பது என்பதைக் கண்டறிந்து வருவதற்காகத்தான் இந்த டூர்! இப்படி 'ஸ்டடி டூர்' சென்ற மாநகராட்சி உறுப்பினர்கள் கல்கத்தாவின் பெரிய ஆலமரத்தைச் சென்று பார்த்து வர விரும்பி, வாகனம் ஏற்பாடு செய்யச் சொல்லிக் கேட்



டார்களாம். "எங்களிடம் வாகனம் எதுவும் இல்லை" என்றார்களாம் கல்கத்தா மாநகராட்சி அதிகாரிகள். இவர்கள் கொஞ்சம் அதிகமாக வற்புறுத்தவே, அங்குள்ள உயர் அதிகாரி சொன்னாராம்: "எங்களிடம் வேறு வாகனம் எதுவும் இல்லை. உங்களுக்கு ரொம்ப அவசியம் என்றால் அதோ நிற்கிறது பாருங்கள், நாய் பிடிக்கும் வண்டி; அதை வேண்டுமானால் எடுத்துக் கொண்டு போய் வாருங்கள்."

உலக அழகியும் 'காட்' ஒப்பந்தமும்

'டில்லிவாசியான வங்காளிப் பெண் சுஷ்மிதாசென் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது வங்காளிகளுக்குப் பெருமகிழ்ச்சியளித்துள்ளது. ஆனால் இடதுசாரிக் கட்சிகள் மட்டும் இந்த மகிழ்ச்சிக் கோலாகலத்தில் கலந்து கொள்ளவில்லை. இடது கம்யூனிஸ்ட் பத்திரிகையான 'கணசக்தி'யில் அழகுப் போட்டிகளைக் கடுமையாக விமர்சித்தும் கேலி செய்தும் இரண்டு கட்டுரைகள் வெளியாயின. அழகுப் போட்டிகள் பெண்ணைப் போகப் பொருளாகக் கருதும் அநாகரிக மரபின் விளைவு என்று சாடுகிறது ஒரு கட்டுரை. "காட் ஒப்பந்தத்தின் விளைவாக அன்னிய நாட்டுப் பொருள்கள் ஏராளமாக நம் நாட்டில் இறக்குமதியாகி நம் நாட்டுத் தொழில்களை நசிக்கச் செய்யட்டும், பாதகமில்லை. நமக்கும் ஏற்றுமதி செய்ய ஒரு பொருள் இருக்கிறது. உலக அழகி! உலக அழகியின் விளம்பரங்களால் கிடைக்கவிருக்கும் அன்னியச் செலாவணி மூலம் காட் ஒப்பந்தத்தால் நேரக்கூடிய நஷ்டத்தை ஈடுசெய்து விடலாம்" என்று நையாண்டி செய்கிறது இன்னொரு கட்டுரை!

இனிய 'ஷாக்'!

'நோயாளி' ஆகி விட்ட அரசுத் துறை நிறுவனம் பிழைத்தெழுவது என்பது அபூர்வம்தான். இந்த அதிசயம் மேற்கு வங்காளத்தில் நிகழ்ந்துள்ளது. சாந்தால்டி அனல் மின் உற்பத்தி நிலையம், கடந்த இருபதாண்டுகளாக மூச்சு முட்டித் திணறிக் கொண்டிருந்தது. இப்போது மின் உற்பத்தியில் சாதனை படைத்து இந்த சாதனைக்காக மூன்றாண்டுகளாக மத்திய அரசின் பரிசைப் பெற்று வருகிறது. சாதனைக்குக் காரணம் மேற்கு வங்க மின்துறை மந்திரி சங்கர்சென். இவரது முயற்சிகளின் விளைவாக இப்போது மேற்கு வங்கத்தில் மின் பற்றாக்குறை இல்லை என்பதோடு அண்டை மாநிலங்களுக்கும் மின்சாரத்தை ஏற்றுமதியும் செய்கிறது! ஆண்டுக்கணக்கில் தினந்தோறும் பல மணி நேரம் பவர்கட்டுக்குப் பழகிப் போன மக்கள் ஆச்சரியத்தில் மூச்சுத் திணறுகிறார்கள்!

பெங்களூரிலிருந்து : **பெர்னாண்டஸ்**
கல்கத்தாவிலிருந்து : **சு. கிருஷ்ணமூர்த்தி**

"ஆஸ்பத்திரிக்கு போர்டு எழுதின ஆசாமிக்கு இங்கிலீஷும் புரியலே தமிழும் தெரியலே!"
"**Poly clinic**"னு இங்கிலீஷ்ல எழுதிட்டு அதுக்குக் கீழே 'போலி கிளினிக்'னு தமிழ்ல எழுதி வச்சுட்டானே!"



"ஹலோ...! எப்ப சார் கரண்ட் வரும்?"
"தெரியாது சார்."
"என்ன சார் இப்படி பொறுப்பில்லாமல் சொல்றீங்க?"
"போஸ்ட் ஆபீசுக்கு ஃபோன் பண்ணி எப்ப கரண்ட் வரும்னு கேட்டா வேற என்ன சொல்ல முடியும், சொல்லுங்க?"

-சீர்காழி வி.ரேவதி



வேதபுரத்து வியாபாரிகள்

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்பே, கையில் கால்-ஷீட்டுடன் தோன்றிய கதாநாயகிகளும்....... வேதபுரம்.'

(பழைய கல்வெட்டிலிருந்து.... நடுவில் எழுத்துக்கள் சிதிலமடைந் துள்ளன. காலம், ஜெ. மு. 20007.)

1

அபூர்வா படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். நேற்றிரவு வெகுநேரம் விழித்திருந்ததின் விளைவாக, விடியற் காலையில் வந்த தூக்கம், கண்களில் இன்னும் எச்சமாக ஒட்டிக் கொண்டு விலக மறுத்தது...

...வேதபுரம் வந்து மூன்று மாதங்களாகி விட்டன. அவள் எதற்காக இங்கு வந்தாளோ அந்தப் பணியை இன்னும் தொடங்கவேயில்லை. அவள் அம்மா, அவள் வெளிநாட்டிலிருந்து புறப்படும் போதே எச்சரித்தாள். நீ அங்கே போனதே கிடையாது. அந்த நாட்டைப் பற்றி என்ன எழுத முடியும்? இந்தப் பைத்தியக்கார யோசனையை விட்டுவிட்டு, ஏதாவது உருப்படியாக செய்வதைப் பார்...'

இதை அவள் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டாள். ஏன் எழுத முடியாது? வேதபுரத்தைப் பற்றி அவள் நிறையக் கேள்விப்பட்டிருந்தாள். அவளுக்கும் வேதபுரத்துக்கும் தொடர்பு உண்டு. அவள் பெற்றோர்கள், வேதபுரத்திலிருந்து வெளிநாட்டுக்குக் குடிபோனவர்கள்தாம். அவள் சின்னவளாக இருந்தபோது, ஓரிரண்டு தடவை வேதபுரத்துக்கு வர இருந்து, பிறகு சில காரணங்களினால், பயணம் தடைப்பட்டுப் போயிற்று. வேதபுரத்திலிருந்த அவள் பாட்டி (அம்மாவின் அம்மா) அவர்களுடன் இருக்க வெளிநாடு வந்து, வந்த நான்கு மாதங்களில் போய் விட்டாள். அவள் அப்பாவின் பெற்றோர்கள் அவளுடைய சிறு வயதிலேயே போய்விட்டார்கள். அம்மாவின் அப்பாவும் அப்படித்தான்.

ஆனால் பாட்டி அவர்களுடன் இருந்த அந்த நான்கு மாதங்களில் வேதபுரம் பற்றிய எத்தனை கதைகள் சொல்லியிருக்கிறாள்! அவள் வேதபுரத்து பாஷையைச் சரிவரக் கற்றுக் கொண்டதும், பாட்டியிடமிருந்துதான். அம்மா அப்பாவையும் வற்புறுத்தி, அவர்களுடன் சிறு வயதிலிருந்தே வேதபுரத்து மொழியில் - அவர்கள் தாய்மொழியில் அவள் பேசுவதுண்டு. ஆனால் அம்மொழியின் பல்வேறு சாயைகளை, உள் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தவள் பாட்டி.

பல்கலைக் கழகப் படிப்பின் போதுதான், அவள், மேற்படிப்புக்காக அங்கு வந்த, வேதபுரத்து இளைஞர்கள் சிலரைச் சந்திக்க முடிந்தது. அவர்கள் சொன்ன தகவல்களின்படி, வேதபுரம் 'ஆலிஸ் இன் வொண்டர் லாண்டில்' வருவது போன்ற ஒரு 'மாட் ஹாட்டர்ஸ்

இந்திரா பார்த்தசாரதி



கிங்டம்' (Mad Hatter's Kingdom)ஆக அவ ளுக்குப் பட்டது. பாட்டி சொன்ன கதைகளே வேறு. அவள் சொன்னது அக்காலத்திய கதை. அவள் சந்தித்த இளைஞர்கள் கூறியது இக்காலத்திய கதை. ஆனால் - இரண்டும் சுவாரசியமாக இருந்தன.

எந்த நாட்டில், பொய்க்கத்தியுடன் சண்டை போடும் பொம்மை ராஜாக்களைத் தங்களை ஆளும் தலைவர்களாக ஏற்றுக் கொள்வார்கள்? வேதபுரத்து மக்கள் மிகவும் 'ரொமான்டிக்' மனப்பான்மை உடையவர் களாக இருக்க வேண்டுமென்று அபூர்வா வுக்குத் தோன்றிற்று. அப்பொழுதுதான், அந் நாட்டுக்குச் சென்று, அவர்களுடன் பழகி,



"மாப்பிள்ளை ம. தி. மு. க. பிரமுகர்தான், அதுக் காக இப்படியா?"

"எதைச்சொல்றீங்க?"

"பத்திரிகையில, 'வைகோ'சி மாதிரி போட்டிருக் காங்களே!"

– கே. என். பாலகிருஷ்ணன்

அவர்கள் மொழியிலேயே, (அதுவும் அவளு டைய தாய்மொழிதான்!) ஒரு நாவல் எழுத வேண்டுமென்ற கருத்து அவளுக்கு உதய மாயிற்று.

அவள் பல்கலைக் கழகத்தில் படிக்க வந்த அந்த வேதபுரத்து இளைஞர்களிடமிருந்தும், பல்கலைக் கழகத்து நூல் நிலையத்திலிருந்த வேதபுர பாஷையில் பிரசுரமாகியிருந்த பல புத்தகங்கள் மூலமும், அவள் வேதபுர பாஷை யில் நல்ல தேர்ச்சி பெற்றாள்.

வேதபுரத்துக்கு வந்த பிறகு, அந்நாட்டு மக்களுடைய பாரம்பரியப் பண்பாட்டையும், இயல்பான குணாதிசயங்களையும் நன்றாக அறிய வேண்டும் என்பதற்காக அந்நாட்டு மொழி வல்லுநர் ஒருவரைத் தனக்கு ஆசிரிய ராக அமர்த்திக் கொண்டாள்.

அம்மொழிதான் உலகத்திலுள்ள எல்லா மொழிகளுக்கும் தாய் என்று சொன்னதும், அதைக் கேட்க அவளுக்குச் சந்தோஷமாக வுமிருந்தது, பெருமையாகவுமிருந்தது. நாற்பதா யிரத்துப் பாரம்பரியப் பண்பாட்டின் தொடர்ச்சி யாகத்தான் இன்றைய ஆட்சி நடந்து வரு கிறது என்று அவர் சான்று காட்டி நிறுவி யதும், அவள் தானும் கற்காலத்திலிருப்பது போல் பாவித்துக் கொண்டு, காட்டில் வேட்டை யாடச் செல்வது போன்ற ஒரு சித்திரத்தை மனக்கண் முன் நிறுத்தி மகிழ்ந்தாள். வேத புரத்து நாகரிகத் தோற்றம், தற்காலத்தியது போல், பிரமையை உண்டாக்கினாலும், பெரும்பான்மையான மக்கள் மனத்தளவில் அந்நாட்டின் ஆதி காலத்திய பாரம்பரியப் பண்பாட்டுச் சூழ்நிலையினின்றும் வெகு தூரம் விலகிப் போய் விடவில்லை என்பதை அவள் சுலபமாக உணர்ந்து கொள்ள முடிந் தது.

வேதபுரத்துக்கு வந்த புதிதில், அவள் இங்கு நடைபெறுவது முடியாட்சிதான் என்று நினைத்தாள். தலையில் கிரீடத்துடன் தெரு ஓரங்களை அலங்கரித்த ஆளும் தலைவரின் விசுவரூபப் படத் தோற்றங்கள் அவளை அவ்வாறு நினைக்க வைத்தன. மேலும் பழைய காலத்திலிருந்ததுபோல், ஆளுந் தலை வருக்குப் பலவிதமான பட்டங்கள். பிறகு, குடியாட்சி என்று தெரிந்ததும், அவளுடைய 'ரொமான்டிக்' கனவு கலைந்து, அவளுக்குச் சிறிது ஏமாற்றமாக இருந்தது. ஆனால், பெய ரளவில்தான் குடியாட்சியே தவிர, செயலள வில் முடியாட்சி முறைதான் என்று அவள் தன் அனுபவத்தில் தெரிந்து கொண்டதும், சற்று மனச்சமாதானமாயிற்று அவளுக்கு...


அபூர்வா, கட்டிலிலிருந்து இறங்கி, 'ஸ்லிப் பரை'ப் போட்டுக் கொண்டு, 'டாய்லெட்' டுக்குள் நுழைந்தாள். குழாயில் தண்ணீர் வரவில்லை. அவள் வெளியே வந்து, படுக்கை அறையைத் தாண்டி, பின்புறமிருந்த சிறிய வராந்தாவில் நின்று கொண்டு, கீழே குரல் கொடுத்தாள். கீழே வீட்டுக்காரர் குடியிருந் தார்.

"நம்ம வீடுதானே, கீழே வந்து குளியுங்க" என்றார் வீட்டுக்காரர்.

வீட்டுக்காரருக்கு ஐம்பது வயதிருக்கும். தொழில் அரசியல். இரண்டு சினிமாக் கொட் டகைகள், கள்ளுக் கடைகள் சொந்தமாக இருந்தன. அரசியலுக்கு வருவதற்கு முன் னால் பட்டாணி விற்றதாக யாரோ சொன் னார்கள். இது அவருடைய சொந்த மனைவி இல்லையென்றும், சொந்த மனைவியும் பிள்ளைகளும் வேறொரு இடத்திலிருக்கி றார்கள் என்பதும் ஒரு செய்தி. இந்த வீட்டி லிருக்கும் பெண்மணிக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். ஏதோ ஒரு திரைப்படத்தில் கதாநாயகி வேஷம் எதிர்பார்த்து வந்து, இவ ருடன் தாற்காலிகமாய்த் தங்கி, வேஷம் கிடைக்காததால் நிரந்தரமாகவே இருந்து விட்டாள் என்பதும் இன்னொரு தகவல்.

"மலர்ந்தும் மலராத..."





பத்து வயது கோபிக்கு வெளி உலகம் தெரியாது. படிப்பு, பாட்டு, விளையாட்டுமாய் இருந்த அப்பாவி கோபியை கடத்தி வந்து, கண்களை ஆசிட் கம்பிகளால் குத்தி குருடாக்கி பிச்சை எடுக்க துன்புறுத்தினான் ஒரு போலி சாமியார். 16.5.94 அன்று கோபியை காப்பாற்றும் போது சாமியார் தப்பி ஓடி விட்டான். கோபியின் கண்களிலும் ஒளி மறைந்து விட்டது. அவசர சிகிச்சையும், விரைவில் அறுவை சிகிச்சை தேவைப்படும் கோபிக்கு நிதி உதவி கிடைக்குமா?

ஆதித்தியன், வயது 1½. பெற்றோர் இல்லை. இப்போதுதான் நடக்கப் பழகுகிறான். சின்ன நடை போட்டு அவன் செல்லும் நெடிய பயணம் தொடருமா? பயமாக இருக்கிறது. காரணம், சமீபத்திய மருத்துவ பரிசோதனையில் ஆதித்தியனின் குட்டி இருதயத்தில் ஓட்டை இருப்பதாக டாக்டர் சொன்னார். உயிர் பிழைக்க உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். செலவு ரூ.80,000. கிடைக்குமா ஆதித்தியனுக்கு...? ஆப்பரேஷன் தேதி: 19 ஆகஸ்ட் 1994.

மலர்ந்தும் மலராத பாதி மலர்களாய், வாழப் பிறந்த இவர்களின் வாழ்வு ஒரு ?

கோபியின் கண்கள் பார்க்க, ஆதித்தியனின் இதயம் துடிக்க, உங்களால் முடிந்ததை கொடுத்து உதவுங்கள்.




இத்தகைய மருத்துவ நிதி உதவிக்காக உதவும் கரங்கள் உருவாக்கியுள்ள, "உதவும் கரங்கள் சேரிட்டபிள் டிரஸ்ட்" என்ற பெயருக்கு செக், டி.டி., எம்.ஓ. மூலமாக உங்கள் நன்கொடைகளை அனுப்பவும்.

முகவரி: உதவும் கரங்கள்,
460, என்.எஸ்.கே. நகர்,
சென்னை - 106.
போன்: 6216321,
6216421.
(நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு)

Space donated by well wisher.

''ஏன்யா கணக்குப்பிள்ளை, பைய னுக்குக் கணக்குக் கத்துக் கொடுன்னா, 'பத்து ரூபாயில ஐந்து ரூபாய்க்கு கணக்கு காண்பிக்காதே'ங்கிறியாமே... உம்...?''

- தேவா



அவன் அபூர்வாவுடன் பேசுவதேயில்லை. அபூர்வா பேச முயன்றாலும், ஓரிரண்டு வார்த்தைகளுடன் அவன் ஒதுங்கி விடுவான். வீட்டுக்காரர் பேசக் கூடாதென்று கட்டளை யிட்டிருக்கிறாரோ என்று அபூர்வா நினைத் தாள். இருக்கலாம். அவர் அந்தப் பெண் ணைத் தன் 'மனைவி' என்றுதான் முதல் தடவை அவள் பார்த்தபோது, அறிமுகம் செய்து வைத்தார்.

அபூர்வா கையில் சோப்புடன், துவாலை யுடன் கீழே இறங்கிச் சென்றாள்.

வீட்டுக்காரர் - அவர் பெயர் கலிய மூர்த்தி - முற்றத்தில் நின்று கொண்டிருந்தார். இடுப்பை ஒரு சிறு துண்டு அலங்கரித்தது. மற்றபடி, 'அல்லையாண்டு அமைந்து' திறந்த திருமேனி.

''மோட்டார் சரியில்லே...'' என்றார் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

"அப்படியா? எப்பொழுது சரியாகும்?"

"இரண்டு, மூணு நாளாகும்... இதுவும் உங்க வீடுதான். தாராளமாய்க் குளிக்கலாம்.. என் குளியலறை கொடுத்து வைத்திருக்க வேண்டுமே.."

அபூர்வா குளியலறையை நோக்கிச் சென் றாள். அவள் அதற்குள் நுழையும்போது, கொல் லைக்கட்டிலிருந்து வீட்டுக்காரர் 'மனைவி' வந்தாள்.

அவள் அபூர்வாவை ஏறிட்டு நோக்கி னாள். "மாடியில் தண்ணி வரல்லே. மோட் டார் சரியில்லையாமே.." என்றாள் அபூர்வா.

அவள் பதில் சொல்லவில்லை.

"நீங்க குளிச்சிட்டீங்களா?'' என்றாள் அபூர்வா.

"மோட்டார் சரியாக இருக்குது" என்று கீழ்க்குரலில் சொல்லிக் கொண்டே அவள் உள்ளே போனாள்.

அபூர்வாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. வீட்டுக்காரர் எதற்காகப் பொய் சொன்னார்? அல்லது வீட்டுக்காரர் 'மனைவி', கீழ்க்குரலில் சொன்னதுதான் தன் காதில் சரியாக விழ வில்லையோ?

கொல்லைப்புறம் மோட்டார் அறை இருந் தது. அது திறந்திருந்தது.

கொல்லைப்புறத்தில் நிறையத் தென்னை மரங்கள். திடீரென்று ஒரு மரத்திலிருந்து மட்டை கீழே விழுந்தது. அது விழுந்த சப்தத் தில் மிரண்டு, நாலைந்து அணில்கள் வேகமாக ஓடின.

அவளிருந்த நாட்டில் மிகப் பெரிய அணில்கள். முதுகில் வரிக்கோடு இல்லை. எந்தக் காவியத் தலைவனுக்கும் அவை உதவிய தாகப் புராணக் கதை கிடையாது.

அவள் மோட்டாரிருந்த அறைக்குள் சென் றாள். 'ஸ்விட்ச்' போடப்படாமலிருந்தது.

அவள் போட்டாள்.

ஆரம்ப முனகலைத் தொடர்ந்து, மோட் டார் வேலை செய்யத் தொடங்கியது.

எதற்காகப் பொய் சொன்னார் கலிய மூர்த்தி?

அவளுக்கு விளங்கிற்று. 'அயோக்கியன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

''வேலை செய்யுதா? ஆச்சர்யமா இருக்கே?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் வீட்டுக்காரர்.

அவள் பதில் சொல்லவில்லை.

"எல்லாம் உங்க கைபட்ட அதிர்ஷ்டம்."

கையைத் தொட்டார். அவள் உதறினாள்.

அவள் மாடியை நோக்கி நடந்தாள்.

"ஏன் இங்கேயே குளிக்கலாமே? மாடிக்குச் சென்று குளிச்சாத்தான் குளிச்ச மாதிரி இருக்குதா?''

"மோட்டார் சரியில்லேன்னு சொல்லறது, இது மூணாவது தடவை. முதல் ரெண்டு தடவை, நான் பரிசோதிச்சுப் பார்க்கலே. இப்போ சொன்னது பொய்," என்றாள் அபூர்வா.

"என்ன சொல்றீங்க?''

"நான் ஈரப்புடவையைக் கட்டிக்கிட்டு மாடிக்குப் போறதைப் பார்க்கிறதிலே, உங்க ளுக்கு ஏன் இவ்வளவு சுவாரஸ்யம், மிஸ்டர் கலியமூர்த்தி?''

"என்ன சொல்றீங்க?''

"உங்க வேதபுரத்து இலக்கிய மரபிலே என்ன சொல்வாங்க, 'களிறு தரு காமம்,' 'புனல் தரு காமம்'... எல்லாம் நான் படிச்சிருக் கேன் மிஸ்டர்... இது என்ன வகையைச் சேர்ந்தது, 'மோட்டார்தரு காமமா...?' "

அவள் உரக்கச் சிரித்தாள்.

"எங்க பண்பாட்டை அவமதிச்சா பேசறே? என்ன திமிர் உனக்கு?"

"உங்க பண்பாட்டை எங்கே அவமதிச்சேன்? ரெண்டு பெண்டாட்டிக்காரங்களுக்கு உங்க பண்பாட்டிலே இத்தகைய காமம் வரையறுத்துச் சொல்லப்படலையே?"

"வீட்டைக் காலி செய்..."

அபூர்வா ஒன்றும் கூறாமல் மாடிக்குச் சென்றாள். சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்ட சந்தோஷம் அவளுக்கு.

மோட்டார் நிற்கும் சப்தம் அவளுக்குக் கேட்டது. 'மறுபடியும் நிறுத்திவிட்டான் ராஸ்கல்'.

அவள் கீழே இறங்கி வந்தாள்.

கலியமூர்த்தி அவளைப் பார்க்காதது போல் நின்று கொண்டிருந்தார். அவள் வந்ததை உணர்ந்ததன் அடையாளமாக, துண்டை உதறி இடுப்பில் கட்டிக் கொண்டார்.

"மோட்டாரைப் போடுங்க."

அவர் பதில் சொல்லவில்லை.

அவள் வேகமாகக் கொல்லைப்புறம் நோக்கிச் சென்றாள்.

"ஏய்.. எங்கே போறே?" என்று குரல் எழுப்பிக் கத்தினார் கலியமூர்த்தி.

அவள் பதில் சொல்லவில்லை.

அவள் அங்கு மோட்டார் அறைக்குச் செல்வதற்குள், மோட்டார் இயங்கும் சப்தம் கேட்டது.

கலியமூர்த்தியின் மனைவி அங்கிருக்கிறாள் என்று அபூர்வாவுக்குத் தெரிந்தது.

ஆமாம், அவள்தான்.

அவளைப் பார்த்து, 'நன்றி' என்றாள் அபூர்வா புன்னகையுடன்.

"என்ன தைரியம் உனக்கு, புருஷனுக்குக் கொஞ்சங்கூட மரியாதை இல்லாம?" என்று கூவிக் கொண்டே வந்தார் கலியமூர்த்தி. அவர் கை, அவளருகில் சென்றதும் ஓங்கியது.

"சும்மாயிரு.. கை இறங்கட்டும், கொலை விழும். இரண்டு பெண்டாட்டி போதாதுன்னு மூணாவதா? சின்னப் பொண்ணு குளிச்சிட்டுப் போறதை அழகு பார்க்க வேணுமா உனக்கு? பாரம்பரியமாம், பண்பாடாம், நாட்டை ஏன் இப்படி நாற அடிக்கிறீங்க?" என்று கேட்டாள் அவர் 'மனைவி.'

கலியமூர்த்தி திகைத்து நின்றார். இவளுக்கு இப்படிப் பேச இவ்வளவு துணிச்சல் எங்கிருந்து வந்தது?"

"உன்னை அப்புறம் கவனிச்சுக்கிறேன். ஏ, கழுதை, நீ உடனே காலி செய்தாவணும். இல்லாட்டி உன்னோட சாமான்களையெல்லாம் வாசல்லே வீசி எறிவேன்..."

"போலீஸ்காரங்களைக் கூப்பிடுவேன், சும்மா பயமுறுத்தாதீங்க!"

"எந்தப் போலீஸ்காரன் வருவான், பார்க்கிறேன். கலியமூர்த்தி பேரைக் கேட்டா ஐ. ஜியே நடுங்குவான், தெரியுமா உனக்கு?"

"சரி, வீசி எறியுங்க, பார்ப்போம்."

அப்பொழுது அவருடைய வேலைக்காரன் கண்ணப்பனும், காரியஸ்தர் கணேசய்யரும் வருவதை அவர் கொல்லைப்புறத்திலிருந்து பார்த்தார்.

"டேய் கண்ணப்பா, ஐயரே.. இங்கே வாங்க..."

இருவரும் பவ்யமாக அவரை நோக்கி வந்தார்கள்.

"மாடிக்குப் போய் இந்தப் பெண்ணோட சாமான்களை எடுத்துத் தெருவிலே கடாசி எறியுங்க... காலி செய்யச் சொல்றேன், முடியாதுங்கிறா..."

"ஏம்மா, பெரியவர் சொல்றாரு, காலி செஞ்சுடேன்..." என்றார் ஐயர்.

கண்ணப்பன் மீசையை முறுக்கிக் கொண்டு மாடியை நோக்கிச் சென்றான்.

"ஏன், என்ன தகராறு?" என்றார் ஐயர்.

"என்ன தகராறாயிருந்தா உங்களுக்கென்ன ஐயரே, மாடிக்குப் போய் கண்ணப்பனுக்கு உதவி செய்யுங்க, ஹூம்.. போங்க...." என்றார் கலியமூர்த்தி.

"அழகான பொண்ணு குளிக்கிறதை இவரு பாக்க ஆசைப்பட்டாரு, பாவம்! இவ முடியாதுங்கிறா, என்ன அக்கிரமம்!" என்றாள் கலியமூர்த்தியின் மனைவி.

"குளிக்கிறதையில்லே, குளிச்சிட்டு வர்றதை.." என்றாள் அபூர்வா.

"இல்லே, குளிக்கிறதைத்தான். எங்க சமையலறைக்கும் குளியலறைக்கும் ஒரே சுவரு.." என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் கலியமூர்த்தி அவளை நோக்கி வேகமாகப் பாய்ந்தார்.


அபூர்வா குறுக்கே நின்றாள்.

"இன்னிக்கு உங்க கட்சி வட்டாரத் தலைவரைப் பார்க்கப் போறேன். அவர்கிட்டே, இதைப் பத்தியும் நான் பேசணும்னு விரும்பறீங்களா?" என்றாள் அபூர்வா. கலியமூர்த்தி சில விநாடிகள் மலைத்துப் போய் நின்றார். இவள் சொல்வது உண்மையா என்று யோசிப்பது போல் தெரிந்தது.

அப்பொழுது கூடத்தில் டெலிஃபோன் ஒலிப்பது கேட்டது.

கலியமூர்த்தி உள்ளே விரைந்தார்.

(தொடரும்)



கடவுள்
கவனித்துக் கொண்டிருக்கிறார்!

கண் புற உலகத்தைப் பார்க்கிறது,
மனம் கண்ணைப் பார்க்கிறது,
அந்தராத்மா மனத்தைப் பார்க்கிறது,
இது உண்மை; மாற்ற முடியாத உண்மை
மனசாட்சிக்கு ஏற்ப நாங்கள் சுத்தமான
ருசிகரமான இனிப்பு மற்றும் கார
வகைகளைத் தயாரிக்கிறோம்.

இனிப்பு வகைகள்:

1. மங்களூர் போளி
2. தேங்காய் போளி
3. ரஸ மலாய்
4. ஸோன் பப்டி கேக்
5. மாலாடு ரவாலாடு
6. இனிப்பு ஸோமாஸ்
7. முந்திரி கத்லி
8. கடலை உருண்டை
9. பொரிவிளங்காய் உருண்டை
10. தேங்காய் கோவா
11. அதிரசம்
12. வெல்ல சீடை
13. சூரத்காரி
14. கோதுமை ஹல்வா
15. ரஸகுல்லா
16. குங்குமபூ லட்டு
17. குங்குமபூ பாதம் ஹல்வா
18. குங்குமபூ வீட் ஹல்வா
19. ஃப்ரூட் ஹல்வா
20. சூரியகலா

கார வகைகள்:

1. தட்டை
2. தேன்குழல்
3. கைமுறுக்கு
4. சீடை
5. ஸ்பெஷல் மிக்ஸர்
6. நவரத்ன மிக்ஸர்
7. உருளைக்கிழங்கு சிப்ஸ்
8. வாழைக்காய் சிப்ஸ்
9. வறுபயறு
10. வெஜிடபிள் சமோசா
11. ரயில் கட்டிடம்
12. சீப்புச் சீடை

பொடி வகைகள்:

1. கருவேப்பிலைப் பொடி
2. பருப்புப் பொடி
3. இட்லிப் பொடி
4. சாம்பார்ப் பொடி
5. ரசப் பொடி
6. ஊறுகாய் மிளகாய்ப் பொடி

திருமண வைபவங்களுக்கு, பருப்புத் தேங்காய் அதிரசம், திரட்டுப்பால், சீர் முறுக்கு ஆகியவற்றை தயாரித்துக் கொடுக்கிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020 போன்: 412557

Ad-Ventures

நிலாவாய் ஒரு பரிசு

திருவாரூர் பாபு

தியாகராஜனுக்குத் திருவாரூர் நிரம்ப பிடித்துப் போயிற்று. நான்கு வருடங்களாக பாட்டி கோடை விடுமுறைக்கு வா என்று பலமுறை கடிதம் போட்டும் ஏதேதோ காரணம் சொல்லி, வேண்டுமென்றே வராமல் போனதற்காக இப்போது வருத்தப்பட்டான். காரணம், பொழுது விடிந்து, மிக லேசாக சூரியன் எட்டிப் பார்க்கத் தொடங்கியதி லிருந்து மாலை மெலிதான இருட்டுப் பரவும் வரை இடுப்பில் குடமும் தோளில் கயிறும் தாங்கி கோவிலுக்குத் தண்ணீர் எடுக்கச் செல்லும் பெண்கள்.

பேசிக் கொண்டே வேகமாகச் செல்லும் பெண்களைப் பார்க்க மனது குதூகலமடை கிறது. பொழுது சாய, கோவிலுக்குள் நடக்க, இனிமையாக இருக்கிறது. அவனையறியா மலேயே கால்கள் வலுக்கட்டாயமாக கோவில் கேணி நோக்கி இழுத்துச் செல் கின்றன.

தியாகராஜன் புல்தரையில் அமர்ந்து கால்களை கட்டிக் கொண்டு பையன்கள் கிரிக்கெட் விளையாடுவதைப் பார்ப்பது மாதிரி தண்ணீர் இறைக்கும் பெண்களைப் பார்த்தான்.

''ஆரூரா... தியாகேசா..'' ஒருவன் கத்தியபடி கார்க் பாலை வீச... பேட்ஸ் மேனாகப்பட்டவன் சற்று முன்னால் வந்து அதை ஆடினான். பந்து மட்டையில் படாமல் செல்ல... விக்கெட் கீப்பர் விரட்டிச் சென்று எடுத்து வந்தான்.

தியாகராஜன் ஐந்து நிமிடங்கள் பேட்டைத் தன்னிடம் கொடுத்தால் எப்படி இருக்கும் என்று நினைத்தான். பந்து நாலாபுறமும் பறக்கும். உடைந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. கொடுப்பார்களா?

சந்தேகத்தோடு எழுந்து நடந்தபோது அவள், அவனை தாண்டிக் கொண்டு போனாள். தியாராஜன் கடந்து செல்லும் அவளை உற்றுப் பார்த்தான். தினமும் வீடு தாண்டிதான் வருகிறாள். அழகாகவும் இருக் கிறாள். பார்க்கும்போது ஏனோ நெஞ்சு பட படவென இருக்கிறது. எச்சில் கூட்டி விழுங்க நேரிடுகிறது. யார் இவள்...?

தலையை உதறிக் கொண்டு, ''ஃபிரென்ட்ஸ்... நான் சிறிது நேரம் பேட்டிங் செய்யலாமா?'' சிரித்துக் கொண்டே கேட் டான்.

அவர்கள் தங்களுக்குள் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டு அவனை உற்றுப் பார்த்து விட்டுக் கொடுத்தார்கள்.

ஒல்லியான உருவம். பலமில்லாதது போல் தோற்றம். இவன் என்னத்தை அடித்து விடப்போகிறான் என்று பௌலராகப் பட்டவன் சற்றே அளவு குறைந்த பந்து வீச, தியாகராஜன் ஒரு தேர்ந்த பேட்ஸ்மேனின் லாகவத்தோடு அந்தப் பந்தை எதிர்கொண்டு விளாச...

பேட்டில் வசமாகப்பட்ட பந்து, பறந்து சென்று அப்போதுதான் குடத்தை இடுப்பில் தூக்கி வைத்த கமலவேணியின் கழுத்தைக் கடுமையாகத் தாக்கிவிட்டு குடத்திற்குள் விழ... கமலவேணி குடத்தோடு கீழே சரிந்தாள்.

பேட்டை போட்டுவிட்டு ஓடி வந்த தியாகராஜன், கீழே கிடந்த அவளையும் ''பாவிப்பயல்களா.. தெரியும்டா ஒரு நாளைக்கு இத மாதிரி பண்ணுவிங்கன்னு...'' என்று ஆத்திரமாய் ஓடி வந்த பெண்களையும் பயமாகப் பார்த்து மயங்கிச் சரிந்தான்.

தியாகராஜனுக்கு கமலவேணியைப் பார்க்கப் பார்க்க பாவமாக இருந்தது. மதியம் பாட்டி கண்ணயர்ந்த நேரம் பார்த்து சுவர் ஏறிக் குதித்து கல்யாண மண்டப வாசலில் கமலவேணியை எதிர்பார்த்துக் காத்திருந் தான். சிறிது நேரத்தில் அவள் அந்த வழியே வருவது தெரிய... அருகில் வந்ததும்... "ஹலோ" என்றான் சிரித்து, அருகில் சென்று.

கமலவேணி நின்று அவனைப் பார்த் தாள் கொஞ்சம் பயந்தாற்போல் இருந்தாள்.

"ஸாரி. ரொம்ப வலிச்சிட்டா?"

"இப்ப பரவால்ல."

"வேணும்னு அடிக்கலை."

"தெரியும்!" என்று வேகமாகப் போய் விட்டாள். லேசாகச் சிரித்தாளா என்ன?

அவள் கண்ணிலிருந்து மறையும்வரை அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண் டிருந்துவிட்டு, வீட்டு சுவர் ஏறிக் குதித்து திரும்ப வீட்டுக்குள் செல்லும்போது

சாலையின் எதிர்ப் பக்கத்திலிருந்து ரப்பர் பந்து வைத்து கிரிக்கெட் ஆடிய அந்தச் சிறுவன் அடித்த அடியில் , பந்து பாய்ந்து வந்து தியாகராஜனின் முதுகில் பட... திரும்பிய தியாகராஜன், பந்தைப் பார்த்ததும் மயக்கமாகச் சரிந்தான்.

"என்ன டாக்டர் இது? இப்படி திடீர்னு மயக்கமாறான். அன்னிக்கு அப்படித் தான் கோவில் கிணற்றடியில் மயக்கமாயிட்டான். இப்ப வெறும் ரப்பர்பால் பட்டு மயக்கமாயிட்டான்? பயமா இருக்கு டாக்டர்!" பாட்டி, டாக்டரிடம் பேசிக் கொண்டிருந்தாள்.



"ஏன் மயக்கமா விழுந்தான்னு ஒங்க ளுக்குப் புரியலையா?"

"ரப்பர் பந்து முதுகுல அடிச்சா மயக்கமா வரும் டாக்டர்?" டாக்டர் சிரித்தபடி தலை யாட்டினர்.

"ரப்பர் பந்தோ.. கார்க் பந்தோ.. அது முக்கியமில்ல. பந்தைப் பார்த்தால் உங்க பேரனுக்கு மயக்கம் வருது. அதாவது அன்னைக்கு கோவில்ல அந்தப் பெண் கழுத்துல பந்தால அடிச்சி, அது மயங்கி விழுந்ததில்ல? அது அவன் மனசுல ஆழமா பதிஞ்சிட்டு... அதான் இன்னைக்கு மயக்கம் வந்ததுக்குக் காரணம்... அவன் கண்ணுல இனிமே பந்து படாத மாதிரி பார்த்துக்குங்க. அது போதும்!"

"நான் பார்த்துக்கறேன் டாக்டர்" என்றவள் பயமாய் வெளியே வந்தாள்.

ஒரு பெண்ணோடு ஒரு வாரத்திற்குள் இத்தனை ஆழமாகப் பழக முடியுமா என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எத்தனை ஆழமாகத் தனக்குள் நிறைந்து விட்டாள் கமலவேணி?

ஆயிரங்கால் மண்டபம் இருட்டாக இருந்தது. ஒரு வாரமாக இந்த இருட்டுதான் சாதகமாக இருக்கிறது. ரகசியமாக கமல வேணியோடு பேசிக் கொண்டு காதல் செய்ய முடிகிறது. நாளை இந்த இருட்டு கிடைக்காது. கமலவேணியும் இருக்க மாட்டாள். வேகமாக விரைந்து கொண் டிருக்கும் பெங்களூர் எக்ஸ்பிரஸில் உட் கார்ந்திருப்பேன்....

"எப்ப ஊருக்குப் போறிங்க?"

"நாளைக்கு காலையில கிளம்ப றேன்."

"ஊருக்குப் போனதும் என்னை மறந்துடுவிங்களா?"

"ஒன்ன மறக்க முடியுமா வேணி?" அவளை அப்படியே இழுத்து, அணைத்து, சுருட்டி, ஒரு பெட்டிக்குள் வைத்து பெங்களூர் கொண்டு சென்று விடலாமா என்று தோன்றிற்று.

"இனிமே ஒங்கள எப்பப் பார்க்கலாம்?"

"அடுத்த வருஷம் லீவுல..."

"ஒரு வருஷம் காத்திருக் கணுமா?"

"ம்... மாட்டியா?"

தலையை மேலும் கீழுமாக ஆட்டி, காத் திருப்பேன் என்பதாய் அர்த்தம் செய்தாள். கண்களில் நீர் தேங்கி நின்றது.

"என்னை மறந்துடுவீங்களா?"

"சீச்சி! அப்படியெல்லாம் பேசாத வேணி. நீதான் எனக்கு. எப்பவும் ஒன் நினைப்பு இருக்கிறமாதிரி எனக்கு ஒன்னு கொடேன்" தவிப்பாய்க் கேட்டான்.

"ஒண்ணே ஒண்ணு இருக்கு. தரட்டுமா?"

"என்ன இருக்கு?" என்றான் ஆர்வமாய்.

கமலவேணி நிதானமாய் முந்தானையில் சுற்றி, அவன் கண்ணுக்குப் படாமல் வைத்திருந்த, அன்றைக்கு கோவிலில் அவன் அடித்து அவள் கழுத்தைத் தாக்கி குடத்தினுள் விழுந்த பந்தை எடுத்து அவன் முகத்தருகே நீட்டினாள்.

127% Growth in Net Profits. And we won't stop here...

DIVIDEND***

30%


BUSINESS DISBURSEMENTS (1993-94)

266 CRORES

AUDITED FINANCIAL RESULTS FOR THE YEAR ENDED 31st MARCH, 1994

PARTICULARS	(Rs./Lakhs) SIX MONTHS ENDED		(Rs./Lakhs) YEAR ENDED	
	31.03.94	31.03.93	31.03.94	31.03.93
GROSS INCOME	2973	1777	5004	3341
Total Expenditure	472	242	736	402
Interest & Finance Charges	1228	832	2223	1558
GROSS PROFIT	1273	703	2045	1381
Depreciation (including Special Lease Depreciation)	590	495	1118	972
Provision for Taxation	0	0	0	0
PROFIT AFTER TAX	683	208	927	409
Paid-up Equity Share Capital	1393	610	1393	610
Reserves (Excluding Revaluation Reserves)			3010	750
Weighted Average Paid-up Capital	855	610	855	610
EPS (Rs.)	15.98**	6.82**	10.84*	6.70
Cash EPS (Rs.)	29.78**	23.05**	23.92	22.64

NET PROFIT Rs. Crores



BOOKVALUE

Rs. 31.61

* The Capital of the Company increased from Rs.610 Lacs to Rs.1393 Lacs during the year ended 31st March, 1994 through a Right-cum-Preferential Issue. The shares allotted were fully paid on January 01, 1994. Hence fresh capital was available only for a part of the year 1993-94.

** Annualised on weighted average paid-up capital

*** Dividend: Interim 20% plus final (proposed) 10%.

Note: 1. The company continues to follow prudent and conservative accounting policies including writing off leased assets during the primary period of lease.

2. The above audited results were taken on record by the Board of Directors at its meeting held on 26th May, 1994.

New Delhi,
Dated:26th May, 1994

By order of the Board
(ARUN BHARAT RAM)
CHAIRMAN

SRF

SRF FINANCE LIMITED

6, Avenue Road, Nungambakkam, **Madras** 600 034. Ph: 8275272, 8251319
797/F, Sri Ram Mohan Complex, Sathi Road, **Coimbatore** 641 012. Ph: 448576.
Regd. Office: AB/4, Safdarjung Enclave Market, **New Delhi** 110029. Phone: 681159, 675869, 6874457

பழைய சமஸ்கிருத இலக்கியங்கள் முதல் சமீபத்திய கரகாட்டக்காரன் வரை சகலத்திலும் அடிபட்டு எழுந்துள்ள பெருமை வாழைப்பழத்துக்கு உண்டு! வேதங்களில் கூட இக்கனி குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாம்! எனவே இதன் பூர்வீகம் இந்தியாதான் என்பதில் ஆச்சர்யமொன்றுமில்லை. மாமன்னன் அலெக்ஸான்டர் தம் இந்தியப் படையெடுப்பின் போது வாழையைக் கண்டு அதிசயித்ததாகச் சரித்திரம் சொல்கிறது!

கடந்த சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழை ஒரு பயிராக வளர்க்கப்பட்டு வருகிறது. இன்று உலகின் வெப்பப் பிரதேசங்களி லெல்லாம் செழித்துக் கொண்டிருக் கிறது. சாகுபடி பயிர் என்ற நிலைக்கு உயர்வதற்கு முன், காட்டுத் தாவரமாக இருந்த வாழை மரங்களின் பழங்களில் அழகான பெரிய கொட்டை இருந்து வந்தது. இந்த 'ஒரிஜினல்' வடிவத்தைக் கொஞ்சம் கொஞ் சமாகச் 'சிதைத்து' (mutation என்கிற முறையில்) கொட்டை நெருடாத கனிகளை உருவாக்கியிருக் கிறார்கள் தாவரவியலார்.




இந்தியாவில் இமயம் முதல் குமரி வரை பயிராகிறது வாழை. கடல் மட்டம் தொடங்கிச் சுமார் 1600மீட்டர் உயரம் வரையில் உள்ள இடங்களிலெல்லாம் வளரும். வெப்பமும் நிறைய தண்ணீரும் இதற்குத் தேவை. வடிகால் வசதியுள்ள நிலமாய் இருக்க வேண்டும்.

உண்மையில் வாழை ஒரு பிரும்மாண்டமான மூலிகைச் செடி. (gigantic herb) என்கிறது என்ஸைக்ளோபீடியா பிரிட் டானிகா. இதன் மருத்துவ குணங்கள் பூ, காய், பழம், தண்டு என்று சகல பகுதிகளிலும் விரவியிருப்பது நமக்கே தெரியும். வாழைத் தண்டு என்று நாம் அழைக்கும் பகுதி உண்மையில் தண்டு இல்லை; இதைப் போலித் தண்டு (pseudo stem) என்கிறார்கள். நிஜ தண்டு - 'கிழங்கு' என்று நாம் சொல்லும் அடிப் பாகம் - பூமிக்கு அடியில் இருப்பது.

ஏற்றத் தாழ்வு, ஜாதி பேதம் ஏதும் இன்றி எல்லார் வீட்டு விசேஷங்களிலும் வாழைச் சீப்பு முக்கிய இடம் பெறுகிறது. இதற்குக் காரணம் அதன் மங்களகரமான மஞ்சள் நிறம் என்கிறார்கள். இந்த 'சென்டி மென்ட்'டுடன் கலை ரசனையும் சேர்ந்து கொள்ள பச்சை, மஞ்சள், செவ்வாழை என்று வண்ணக் கலவையில் பெண்மணிகள் (சீர்)வரிசைத் தட்டுகள் அடுக்கு வதைப் பார்க்க லாம். வாழைக் குலையோடு சீர் வரவில்லை என்று கோபித்துக் கொள்ளும் சில சம்பந்திகள் இன்னமும் இருக்கிறார்கள். உண்மை யில், வாழைதான் வருடம் முழுதும் கிடைக்கும்; விலை யும் சகாயம் என்பதால் எல்லா விசேஷங்களுக்கும் அதைப் பயன்படுத்தும் வழக்கம் உண்டாகியிருக் கிறது. 'கற்பூர தாம்பூலம் சமர்ப்பயாமி; கதலி பலம் நைவேதயாமி' என்று புரோகிதர்கள் நைவேத்தி யத்தின் போது குறிப்பிடுவது கவனமாகக் கேட்டால் காதில் விழும்.



வாழையில் நூற்றுக் கணக்கான வகைகள் இருந் தாலும் உலகம் முழுதும் விரும்பி உண்ணப்படுவது ரொபஸ்டா அல்லது பெரிய



வாழை:

அதிசயப்பட்டோர் அலைக்கொண்டார்!

பச்சை. ஆண்டொன்றுக்குச் சுமார் 100,000,000 வாழைக் குலைகள் உலகம் முழுவதிலும் அறுவடையாகிறது. இதில் 60 சதவிகிதத்தைச் சாப்பிட்டுத் தீர்ப்பவர்கள் அமெரிக்கர்கள்!

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து லாபம் அள்ளிக் கொள்ளும் நாடுகள் காஸ்டா ரிகா, குவாடி

மாலா, ஹான்டுராஸ், மேற்கிந்திய தீவுகள் மற்றும் மெக்ஸிகோ.

நாமும்தான் இமயம் முதல் குமரி வரை வாழை பயிரிடுகிறோமே... ஏன் ஏற்றுமதி செய்வதில்லை...? என்றால் இரண்டு காரணங்கள் : வாழைகளை ஏற்றிச் செல்ல, பிரத்யேக வடிவமைப்பில் குளிர்பதன வசதியுடைய கப்பல்கள் தேவை. உரிய நேரத்துக்குள் போய்ச் சேராவிட்டால் பழங்கள் நாசமாகி விடும். ஒரு பழம் பழுத்து விட்டால் கூட குலைகளெல்லாம் ஒரு சேரப் பழுத்துப் போகும்... (இதற்கு ஒருவித ஹார்மோன் சுரப்பே காரணம் என்று கருதுகிறார்கள்.)

ஏற்றுமதி செய்யவில்லையே என்று நாம் அதிகம் வருந்தத் தேவையில்லை. உற்பத்தியாகும் பழங்கள் உள்ளூரிலேயே செலவாகி விடுகின்றன. மாறாக ருசியிலும் வடிவத்திலும் மாறுபட்ட பல வகைகள் நம் நாட்டில் உற்பத்தியாவது குறித்துப் பெருமைப்படலாம்.

பூவன் - அதிகமாக விளையும் ரகம். மற்றவற்றைக் காட்டிலும் கூடுதல் காலத்துக்குக் கெடாது வைத்துக் கொள்ளலாம்.

ரஸ்தாளி - மெல்லிய வெளித்தோலுடன் வெண்ணெய் போல் சுவை.

பேயன் - மாயவரம் பக்கங்களில் மட்டுமே முன்பு கிடைக்கும். பார்க்க வாட்டமாய்த் தெரிந்தாலும் சுவையும் சத்தும் அதிகம்.

கற்பூரவல்லி - பேயனின் இரட்டைச் சகோதரன் போல் தோற்றமும் சுவையும்...!

செவ்வாழை : கேரளச் சொத்து; பார்க்கவும் அழகு, சுவையும் கூட. ஆனால் நீண்ட நாட்கள் வைத்துக் கொள்ள முடியாது.

நேந்திரன் : கேரள நம்பூதிரிகளால் நேந்திரன் ரக வளர்ப்பு திருத்தமடைந்தது என்றாலும் இன்றைக்கு மலையாள சகோதரர்களின் சிப்ஸுக்கு சப்ளை திருநெல்வேலி பக்கங்களிலுள்ள நேந்திரத் தோட்டங்களிலிருந்துதான். (செங்காய்கள் வறுவலுக்கு; முழுப் பழங்களை ஆவியில் இட்லி போல் வேகவைத்து, வெல்லம் சேர்த்துச் சாப்பிடுகிறார்கள்.)

சக்கர கனி : ஆந்திரத்தின் செல்வச் சீமான்கள் வளர்த்த ரகம்.

மொந்தன் : சமைக்கப் பயன்படும் 'காய்கள்' தரும் ரகம். பழம் இரண்டாம் பட்சமே!

பச்சை நாடன் : உலகமே விரும்பும் ரகம்.

மலைப் பழம் : முடிக் கொத்து என்ற கொடிய நோய்க்கு இந்த ரகத்தை ஏறத்தாழ காவு கொடுத்து விட்டோம். மிகக் கஷ்டப்பட்டு மீட்டுக் காப்பாற்றி வருகிறோம். விலை உயர்வுக்குக் காரணம் இதுதான்.

வாழைப் பயிருக்கு வரும் நோய்களை உண்டாக்கும் கிருமிகளிடம் ஒரு பிடிவாதம். அவை வாழை மற்றும் 'அபகா' (இதுவும் வாழை போலவே உள்ள தாவரம் - காய்க்காது. நார் ஒருவித துணி செய்யப் பயனாகிறது) என்ற தாவரங்களை மட்டுமே தாக்குகின்றன.

அல்ஸர் உள்ளவர்களுக்குப் பாலும் வாழைப் பழமும் அடங்கிய 'டயட்' சிபாரிசு செய்யப்படுகிறது. காரணம் வா. பழத்தில் 0.8 சதம் சாம்பல் சத்து உள்ளது. இந்தச் சத்தில் ஆல்கலைன் உப்புகள் அதிகம். வாழைப் பழத்தின் இதர சத்துக்கள். 75.3 சதம் தண்ணீர்; 1.3 சதம் புரதம்; 0.6 சதம் கொழுப்பு; 22 சதம் மாவுச் சத்து.

சீப்போடு வாங்கி, கடைகளில் தொங்க விடுவது போலவே வீட்டிலும் தொங்க விட்டால் பழங்கள் 'கொள கொளத்து'ப் போகாது. சீப்பிலிருந்து பழத்தைப் பிய்க்கும் போது சிரமமின்றி அது விடுபட்டு வர வேண்டும். பதமாகப் பழுத்த பழத்துக்கு இதுவே அறிகுறி.

தகவல்கள் :

டாக்டர் பி. டபிள்யூ. எக்ஸ். பொன்னையா.

(விவசாய/தோட்டக் கலைகள் வல்லுனர்)

படங்கள் : **கோபிநாத்**



''காலேஜ் பட்டி மன்ற விழாவில் ஒரே கலாட்டா.''

''ஏன்?''

''கொள்ளையடிப்பதில் சிறந்தவர் அரசியல்வாதியா? பூலான் தேவியா? என்பதில் தீர்ப்புச் சொல்ல முடியாதபடி நடுவர் எழுந்து ஓடிட்டார்!''

–பி.ஆர்.கண்ணன்

“பவித்ரன்

ஜி.வி



ஜி.வி.யுடன்
ஒரு
சந்திப்பு

புதுசாகக் கால்கட்டு போட்டிருந்தார் ஜி. வி. மாடிப்படியில் 'ஸ்லிப்' ஆகி விட்டாராம்.

"பவித்ரனை வைத்து 'ஹிட்லர்' எடுப்பதாக இருந்த இட்டத்தைக் கை கழுவி விட்டீர்களாமே?"



பேச்சு கா!"

"ஆமாம். 'இந்து' பார்த்தேன். உடன், அவரது மற்ற படங்களையும் மறுபடி ஒருதரம் பார்த்தேன். அவர் படங்களில் வன்முறை, செக்ஸ் டாமினேஷன் அதிகம் தெரிகிறது. என் தயாரிப்பில் வரும் படங்கள், குடும்பத்தோடு பார்க்கும்படியாக இருக்க வேண்டும் என்பதில் நான் தீவிரமாக இருக்கிறேன். அதான், அத்திட்டத்தைக் கைவிட்டு விட்டேன். தவிர, நாலு கோடி ரூபாய் பட்ஜெட் சொல்லுகிறார். கட்டுப்படி ஆகிற சமாசாரமா என்ன?"



"ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல்... ஸாரி, 'மே மாதம்' என்றொரு படம் பண்ணுகிறீர்கள் இல்லை?"

"ஆமாம். மணிரத்னத்தின் அசோசியேட் பாலு, அந்தக் கதை சொன்னதும் பிடித்து விட்டது. உடனே ஆரம்பித்து விட்டேன். இளமை துள்ளும் காதல் கதை! பம்பாயிலிருந்து சோனாலி எனற பெண்ணை அழைத்து வந்து பி.ஸி. ஸ்ரீராமை கேமரா டெஸ்ட் எடுக்கச் சொன்னோம். அவர்தான் இப்போது ஹீரோயின்."

"அதென்ன மே மாதம்?"

"மே மாதம் - விடுமுறைக் காலம். கல்லூரிப் பெண்ணின் ஒரு விடுமுறைக் காலம் எப்படிக் கழிகிறது என்பதுதான் கதை."

"உங்கள் தயாரிப்பில் சுகாஸினி டைரக்ட் செய்வதாயிருந்த 'இந்திரா' தள்ளிப் போகிறதா?"

"நோ, நோ. ஒரு ஷெட்யூல் முடிந்து விட்டது. அதற்குள் ஹீரோ அரவிந்த்சாமியின் கல்யாணம், 'பம்பாய்' ஷூட்டிங் என்று சில தவிர்க்க முடியாத விஷயங்கள். 'மே மாதம்' முடிந்ததும் இது மீண்டும் தொடரும். அப்புறம் இந்த டைட்டில் பற்றி ஒரு விஷயம். ஹீரோயின் பெயர் 'இந்திரா'. இந்திரா காந்தியின் கேரக்டரை சாறு பிழிந்திருக்கிறோம். ஆனால் நோ பாலிடிக்ஸ்!" என்று அழுத்தம்திருத்தமாகச் சொன்னார் ஜி.வி.

சந்திப்பு : **ஹர்ஷராஜ்**

ஒடிஸி நாட்டிய தாரகை ஜேன் லெஸ்லி, விஸிட்டிங் பேராசிரிய ராக ஹைதராபாத் ஸரோஜினி தேவி நுண்கலைக் கல்லூரிக்கு வந்திருக்கிறாள் எனக் கேள்விப் பட்டு கலைவிழா காரியதரிசி அவரைக் காணச் சென்றார்.

நாம்பல்லி அருகே நடுநாயக மாக ஒரு பெரிய கட்டடம். கவிக் குயிலின் மாளிகை. சென்ட்ரல் பல் கலைக் கழகத்திற்கு தானம் செய் யப்பட்டுள்ளது. நுண்கலைகள் கற்றுத் தரப்படும், புதிய கல்விக் கூடம் அது. ஜேன் கட்டாக்கி விருந்து பத்து நாட்கள் விஸிட்டிங் பேராசிரியராக வந்திருக்கிறாள்.


"வாருங்கள், உட்காருங்கள். பத்து நிமிஷம்; வகுப்பு முடிந்து விடும். பேசு வோம்" என்றாள் ஒடிஸி தாரகை. ஆந்திரப் பிரசித்தமான போச்சம்பல்லி காட்டன் சேலையில் ஜேன் இருந்தாள்.

ஹாலில் வரிசையாக டீன் ஏஜ் பெண் கள், எல்லாம் பைஜாமா குருத்தா அணிந்து. துப்பட்டாவை குறுக்காகவோ இடுப் பிலோ கட்டிக் கொண்டு, வளையல் களை ஒதுக்கிக் கொண்டு ஒன் டு த்ரி... தாதை... படக் படக் என்று தரையை உதைக்கும் பாத ஓசை, சுழுந் தசைவு, அபிநயம்...! இந்தியக் கலை யான ஒடிஸி விருக்ஷமாக வளர்ந்து, பாரதப் பெண்களுக்கு பரதம் பயிற்று விக்கும் விந்தைக் காட்சியை பாரதி கூட கனவு காணவில்லை. கடல் தாண்டி வந்து கலையைக் கற்பதல் லால் அதனோடு ஒன்றி விடும், அந்த ஈடுபாட்டை - உழைப் பைக் கண்நோக்கும் காரியதரி சிக்குப் பிரமிப்பாக இருக்கிறது. நாட்டியச் செல்வி, ஜேன், - அந்த ஆளை விழுங்கும் அதிசயம் சில நிலைகளை ஆடிக் காண்பிக்கிறது. "நாளைக்கு தேவதாசிகள் நடனம் பற்றிய தியரி க்ளாஸ்" என்று பாடத்தை முடித் தாள் ஜேன்.

"ராம நவமி விழாவா? அவசியம் வருகிறேன். ராமநவமி அன்றே என் நிகழ்ச்சி இருக்கட்டும்; அந்தப் புண்ணிய தினத்தில் ராமர் சம்பந்தப்பட்ட இட்டங் களையே தேர்ந்தெடுத்து நாட்டியம் புரி கிறேன்" - கலையைத்தான் கற்றுக் கொண் டாள். அந்த மேலை நாட்டுப் பெண் ணிற்குப் பக்தி எப்படி வந்தது? இசையும் மொழியும் இறை பக்தியும் கலந்ததல்லவா நமது கலை! கொஞ்சம் பேசிப் பார்த்தார் கலை விழாக் காரியதரிசி. லெஸ்லி பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது...

அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் 'தியேட்டரிகல் ஆன்தராபாலாஜி'யில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவள் ஜேன். போலந்து நாட்டு சார்புள்ள குழுவில் மேலை நடனம் கற்றாள். தந்தை ஒரு ஜர்னலிஸ்ட், இந்தியாவுக்கு வந்து சென்றவர். ஆகவே தந்தை வழியில் பாரத தரிசனம் மானசீக மாகக் கிடைத்து. தாய் ஓர் இசைக் குழுவில் வயலினிஸ்ட். கலை வித்து. ஜீன் தாய் வழி.

ஆனால் மேலை நடனங்களின் குதியும் ஆட்டமும் உடல் உணர்ச்சி வெளிப்பாடு களாக இருந்தனவே ஒழிய, இவளுக்கு உள்




ஆத்மதிருப்தியை அளிக்கவில்லை. இன்னும் தூய்மையானது - பரவசப்படுத்துவது - உள்ளத்தைத் தொடுவது போன்ற மென்மையான ஒன்றை வேண்டினாள். நியூயார்க்கில் ஜேன் பார்த்த நளினமான பரதநாட்டிய நிகழ்ச்சி, தனது தேடலுக்கு விடையாகவும் மனத்தின் ஈர்ப்பாகவும் அமைவதை உணர்ந்தாள்.

அப்பொழுதுதான் இந்தியாவிற்கு வருவதக்கு ஒரு வாய்ப்பு கூடிற்று. இந்தோ-அமெரிக்க கல்வி - கலை வளர்க்கும் ஸப்-கமிஷன் மூலம். கேரளாவில் கதக்களி, குடியாட்டம், பாவைக் கூத்து முதலிய புராதனக் கலைகளை நேரில் கண்டு ஆய்வு செய்ய மான்யம் கிடைத்து அவளுக்கு.

குரு குஞ்சன் சாக்கியாரின் கலை உலகம் தனித்தன்மை வாய்ந்தது. அவரது குடியாட்டத்திற்கு ஆடியன்ஸ் தேவை இல்லை. வெண்கல வரிக்குத்து விளக்கின் குமிழ்ச் சுடராம் சோதி போதும்; இருஞ்சில கூடா ஆலய மண்டபத்தில் அவர் தினசரி ஆடும்போது ஒரு மனிதப் பிராணி இல்லை. திரி விளக்கின் ஜ்வாலையே இறை ரூபத்தில் அவரது நடனத்தை ரஸித்ததாக எண்ணினார். அத்தகைய ஈசுவர சமர்ப்பணம்! கோயிலுக்குள் ஜேன் நுழைய முடியாது. சுவரில் இருந்த ஓர் இடைவெளி மூலம் ரசிப்பாள். நடன கைராளி ஆய்வு மையக் காரியதரிசி மாதவன் நாயர் அவளுக்கு ஆங்கிலத்தில் விளக்கி உதவினார்.

"எனக்கு நாட்டியத்தில்தான் ஈடுபாடு. குடியாட்டம் நாடகத் துறையின் ஓர் அங்கமாக இருக்கிறது. ஈசுவரனுக்கு அர்ப்பணிக்கப்படும் பக்திக் கலை. கதக்களி நடனத்தின் ஒரு கிளை என்பதை உணர்ந்தேன்..." என்றாள் ஜேன் குருவிடம்.



"உனது ஆர்வத்திற்கு நீ புவனேஸ்வர் சென்று ஒடிஸி கற்றுக் கொள். கிருஷ்ண மேத்தா மகாராஜ் உனக்கு உகந்த ஆசார்யா...!" என்று சாக்கியார் கூறினார்.

அமெரிக்கா திரும்பி ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து விட்டு, மற்றொரு 'உதவி' பெற்று கிருஷ்ண மேத்தாவைக் குருவாக அடைந்தாள் ஜேன்.

மேத்தாவை சந்தித்தபோது உயர்வற உயர் நலம் கண்ட பெருமாளைச் சேவித்த ஆழ்வார் போல, காலங்காலமாகக் காத்திருந்த ஒருவரைக் கண்ட பக்தி ஏற்பட்டது.

தனது தகப்பனாரின் நண்பர் மேஜர் ஒருவர் வீட்டில், கட்டாக்கில் பணம் தரும் விருந்தாளியாக இருந்து ஒரு மோபட்டில் பயணித்து, புவனேஸ்வரில் மகாராஜ் கிருஷ்ண மேத்தா இல்லத்தில் பயிற்சி. இரவுச் சாப்பாடு, உணவு மேடையில் அவளுக்காகக் காத்திருக்கும்.

எங்கிருந்தோ வந்தாள். சப்பாத்தி பூரி, பாஜி என இந்திய உணவு உண்பாள். எளிமை வாழ்க்கை மேற்கொண்டு பஸ்ஸிலும் மோபட்டிலும்

நீலக் கண்கள்

25 மைல் சென்று ஆதுரத்துடன் ஒடிஸி கற்றுக் கொண்ட தீவிரம் மகாராஜை பிரமிக்கச் செய்தது. புராதன ஒடிஸி நாட்டியத்திற்கு உயிரூட்டி அதனை வாழும் கலைக் கருவியாக்கிய புகழ் மிக்க மகாராஜின் கலை உற்சாகம் அவளையும் தொற்றிக் கொண்டது. ஓரிய மொழியும் ஜேன் வசமாயிற்று.

குருஜி பஞ்ச கச்ச வேட்டிக்கு மேல் இறுகிய அங்க வஸ்திரம் கட்டி, ஜெயதேவர் அஷ்டபதிக்கு நடனமாடுகையில் உடலும் உள்ளமும் ஒன்றாகித் தனி உலகம் அமைக்கிறார். ஆண்களும் அவாவும் பெண்மை லாகவத்துடன் எப்படி ஆடுகிறார்!

ஜேன், குருவின் அங்கங்களை ரசித்தாள். அபிநயத்தில் லயித்தாள். பாட்டின் பொருளில், ஊடாடும் பக்தியில் மனம் ஒன்றினாள். இறுதியில் குருஜி மறைந்து இசையும் அசைவும் மட்டும் எஞ்சின.

அவள் சலங்கை கட்டி வசந்தத்தின் வசீகரத்துடன் பல்லவி ஆடுகையில் சிருங்காரம் நளினத்துடன் அவள் அங்கங்களில், நரம்புகளில் அருவியாக ஓடிற்று. ஓர் அயல்நாட்டுப் பெண்மணி என்பதே தெரியாதபடி இந்த மண்ணின் பிறப்போ என்னும்படி கலைச் செல்வத்தை அப்படி சுவீகரித்திருக்கிறாள்.

மகாராஜ் கிருஷ்ண மேத்தா தமது குழுவுடன் பல இந்திய நகரங்களுக்கு அவளை அழைத்துச் சென்றார். ஜேன் புகழ் கூடிற்று. பிறகு ஜேன் மட்டும் பம்பாய் கல்கத்தா முதலிய இடங்களில் தனி நிகழ்ச்சிகள் தந்த போது ரஸிக உலகம் அவளை அடையாளங் கண்டு கொண்டது.

பத்து வருடங்களில் மூன்றுமுறை கோடையில் மட்டும் தந்தையகம் சென்று வந்த ஜேன், இந்தியாவைத் தாயகம் என்றே அழைத்தாள். இவளது கலைத் தீவிரம் அறிந்த அவளது அன்னை பிரிவு பற்றி உணர்ச்சி வசப்படாமல் தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள்.

"திருமணம் செய்து கொள்ளப் போவதில்லையா?" என டைம்ஸ் நிருபர் பம்பாயில் கேட்ட போது "ஒடிஸியை கைத்தலம் பற்றி நடக்கிறேனே, போதாதா? எனது நடன இலக்கிற்குத் தனிமைதான் சுதந்திரம் தருவது" என்றாள் முறுவலுடன். சல்வார் கமீஸ் அவளது வெண் மேனியில் அழகிற்கு அழகூட்டியது.

கழுத்தை ஒடுக்கிக் கூந்தலைப் பின்புறம் ஒதுக்கினாள் ஜேன்.

"மகாராஜ் எனக்கு ஓர் ஆசை, ஒரு குழுவுடன் அமெரிக்க கலை உலா சென்று பாரத நாட்டின் ஒடிஸி நடனத்தை பிரபலப்படுத்தி வரவேண்டும்" சலங்கைகளை அணிந்து கொண்டு ஜேன் பேச ஆரம்பித்தாள்.

"அவசியம். அந்த நாட்டுப் பெண்மணியாகிய நீ இந்தியக் கலையைப் பரப்பும்போது, அதற்கு ஒரு தனி மகத்துவம் ஏற்படுகிறது. தில்லியிலுள்ள இந்தியக் கலாசாரத் தொடர்பு கவுன்ஸிலுக்கு ஸ்பான்ஸர் செய்ய மனுச் செய்து கொள்..."

ஜேன் தனது ஒடிஸி கலைத்திறம், செள நாட்டிய ஆசார்ய பட்டம், மேலைநாட்டு டாக்டரேட், அனுபவங்கள், மகாராஜின் சிஷ்யத்வம்... குறிப்பிட்டு புகைப்படங்களுடன் தலைநகருக்கு எழுதினாள். டில்லியில் ஓரிஸா அரசு தொடர்பு அதிகாரியாகிய ஒரு டைரக்டருக்கும் கிருஷ்ண மேத்தா சிபாரிசுக் கடிதம் எழுதினார். ஒரு முறை ஜனாதிபதி முன் ராஷ்டிரபதிபவனில் ஆடியிருக்கிறாள், ஜேன். அங்கும் யாருக்கோ எழுதினாள்.

ஜேன் மத்திய அரசின் மான்யத்தை எதிர்பார்த்துக் கனவுகளுடன் காத்திருந்தாள்.

இறுதியாகக் கடிதம் வந்தது.

இந்தியக் குடியரசு அவளை அயல் நாட்டுப் பெண் என்று முத்திரையிட்டு ஒதுக்கி விட்டது. தகுதி இருந்தும் அயல் நாட்டுப் பெண்ணாகிய தங்களுக்கு நிதி உதவி செய்ய விதிகள் இல்லை என வருந்துகிறோம். இந்தியப் பெண்ணாக இருந்து இந்தியக் கலையைப் பரப்பும் அயல்நாட்டுப் பயணமாக இருந்தால் ஸ்பான்சர் செய்ய முடியும்...

குருஜிக்குத் தாளம் தவறிக் காதில் விழுந்தது போல இருந்தது.

அன்று அவரது முன்னாள் மாணவி அனுபமா சதுர்வேதியிடமிருந்து கடிதம் வந்தது.. அதிக சிரத்தை இல்லாது, நடனக் கலையை கல்யாணச் சந்தைக்கு ஓர் உதவுபடி அணியாக இருக்கட்டும் என்று பயின்றவள். அவள் விரும்பியபடி ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி



"இதோ பார் கமலா... எங்கம்மா உங்கப்பா கிட்ட கொஞ்சம் நகை நட்டு அதிகம் கேட்டிருக்கலாம்! அதுக்காக எங்கம்மாவை 'துப்பாக்கியில்லா பூலான்தேவி'ன்னு நீ சொல்றது நல்லா இல்லை!"

– பி. ஆர். கண்ணன்

சதுர்வேதியை மணந்து டில்லி சென்று விட்டான்.

அவனுக்கு இந்தியக் கவுன்சில் உதவி கிடைத்திருக்கிறதாம். மூன்று வாரங்கள் அமெரிக்காவில் கடற்கரை நாடுகளில் கலைச் சுற்றுலா, குருஜி தகுந்த பக்வாஜ், சாரங்கி வாத்யக்காரர்களை ஏற்பாடு செய்து தர வேண்டுமாம்!

ஒரு ரத்தினத்திற்கு இல்லாத அதிர்ஷ்டம் ஒரு கல்சர் கல்லுக்குக் கிடைத்திருக்கிறது. தலைநகர் வாசமும் அதிகாரிகளின் அண்மையும் 'வேலை' செய்திருக்கின்றன.

ஜேனின் நீலக் கண்களில் நீர் முட்டியது.

நாட்டை விட்டு, நாடு வந்து, குடும்பத்தைப் பிரிந்து இந்திய மண்ணில் வாழ்ந்து, இந்திய உணவை ஏற்றுக் கொண்டு, ஒரு பிடிவாதமான லட்சியத்துடன் ஒடிஸி கற்றுக் கொண்டாள். அதில் குருவே வியக்கும் வண்ணம் தேர்ச்சி பெற்ற ஜேனுக்கு இல்லை என்ற சொல்! ஆடுகையில் நீலக் கண் மட்டும் இல்லாவிட்டால் இந்தியப் பெண்மணிதான் என்று வியக்கத் தோன்றும் அளவிற்கு மனம் ஒன்றிய நாட்டியம். அவள் புரிந்தது ஒரு கலைத் தவம் அல்லவா? கன்னி நோன்பு கூட.

இந்தியா சென்று இந்தியக் கலையை ஆய்வதற்கு அவளுக்கு அமெரிக்க ஸ்தாபனங்கள் உதவிக் கரம் நீட்டின. ஆனால் பாரதக் கலையை மேலை நாட்டில் பரப்ப இந்தியா மான்யம் அளிக்க மறுத்துவிட்டது.

ஒடிஸி நடன அமைப்பை ஒரு தருவாக உருவகப்படுத்துகிறார்கள். பல்லவி அம் மரத்தின் மணம் வீசும் மலர்கள். ரஸத்துடன் இருக்கிற அபிநயம் அதன் கனிகள். இறுதியில் காய்ந்த இலைகள் பூமியைச் சரணடைவது 'மோக்ஷா' என்னும் கடைசி மங்கள ஐட்டம். அவளது ஆசைகளின் முடிவு, சருகாகி உதிர்ந்து விட்டன போலும்.

பூஜை அறையிலிருந்து பட்டு உடையுடன் திரும்பினார் மகாராஜ். முழங்கால்களைக் கட்டிக் கொண்டு தலைகுனிந்து சிறையிருந்த சீதை போல சோகத்துடன் அமர்ந்திருந்த ஜேன் அருகில் சென்று, தலையைக் கோதி - 'கவலைப்படாதே... அதிர்ஷ்டம் அடுத்த முறை வரும்.'

நீலக் கண்களில் ஆர்வம் ததும்ப கழுத்தை அழகுடன் சாய்த்து ஜேன், கிருஷ்ண மேத்தா மகாராஜை நோக்கினாள்.

"குருஜி, என்னைக் கல்யாணம் செய்து கொண்டு விடுங்கள்... நான் இந்தியனாகி விடுவேன்."

சொற்கட்டுகளுடன் நட்டுவாங்கம் புரியும் அவரது நாவில் பேச்சு எழவில்லை.

அருள்வாக்கு



“ராமேச்வரத்துக்குப் போ, அரச மரத்தைச் சுற்று, பிள்ளை பிறக்கும். ஸூர்ய நமஸ்காரம் பண்ணு, நேத்ர ரோகம் ஸரியாகப் போகும். கனகதாராஸ்தவம் சொல்லு, ரூபாய் வரும்” என்றெல்லாம் லௌகிக பலன்களுக்காகவே பல காரியங்களை சாஸ்திரம் சொல்கிறது. இந்தப் பலனில் உள்ள பற்றினாலேயே பெரும்பாலான ஜனங்கள் இதுகளைப் பண்ணுகிறார்கள். இவர்கள் வாஸ்தவத்தில் உயர்ந்த அறிவு பெறாத “அவித்வான்கள்”தான். இவர்களைத்தான் “ஸக்தா : கர்மண்ய வித்வாம்ஸோ” என்கிறார். இவர்களிடம் “இப்படி அல்ப பலனையெல்லாம் நினைக்காதீர்கள், ஈச்வரானுபவம் என்ற உயர்ந்த லக்ஷ்யத்தையே நினையுங்கள்” என்று உபதேசம் பண்ணினால் எடுபடாது. அவர்களுடைய ஸம்ஸ்காரக் குறைவு காரணமாக, அவர்களை இப்போது இருக்கிற இடத்திலிருந்தே, அவர்களுடைய மனஸை அனுசரித்துக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மேலே கொண்டு போக வேண்டும். இதற்கு அவர்களைப் பக்குவப்படுத்துவதற்காகத்தான் சாஸ்திரங்களே அவர்களுக்கு இப்படிப்பட்ட ஆத்ம ஸம்பந்தமில்லாத காரியங்களையும் கொடுக்கிறது. பலனுக்காகத்தான் அவர்கள் இவற்றைப் பண்ணுகிறார்கள். பண்ணிவிட்டுப் போகட்டும். ஆனால் இப்படிக் காரியம் பண்ணுவதால் என்ன ஏற்படுகிறதென்றால் இவர்கள் உத்தேசித்த பலன் உண்டாவதோடு கூட, இவர்கள் உத்தேசிக்காமலே கொஞ்சம் கொஞ்சமாகச் சித்தசுத்தி என்ற பெரிய பலன் உண்டாக ஆரம்பிக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



• வழிபடும் சிறுவர்கள்

விருத்தாசலத்தில் கோயில் கொண்டுள்ள பழமலைநாதருக்குப் பாதுகாப்பளிக்கிற மாதிரி, நான்கு திசைகளிலும் முருகனே எழுந்தருளியிருப்பதாக ஒரு கதை வழக்கில் உள்ளது. வேடப்பர், வெண்மலையப்பர், கரும்பாயிரம் கொண்ட அப்பர், கொளஞ்சியப்பர் என்று நால்வரும் தனித்தனியே எழுந்தருளியிருக்கிறார்கள்.

நூறாண்டுகள் பழமைவாய்ந்தது கொளஞ்சியப்பர் திருக்கோவில். இப்பகுதியில் இயங்கும் அரசாங்கக் கலைக் கல்லூரிக்குக் கூடக் கொளஞ்சியப்பர் கல்லூரி என்றுதான் பெயரிட்டிருக்கிறார்கள். இந்தக் கல்லூரி ஏற்படக் கொளஞ்சியப்பர் உதவியது மட்டும் இரண்டு லட்ச ரூபாய். இந்தப் பகுதி மக்களிடையே புழங்கும் பெயர்கள் பெரும்பாலும் கொளஞ்சி, கொளஞ்சிநாதன், கரும்பாயிரம், பழமலை - என்றே அமையும்.

கொளஞ்சியப்பர் கோயிலில் மூல விக்கிரகம் என்பது ஏதுமில்லை. வெறும் பீடம்தான். அதைத்தான் முருகனாக, கொளஞ்சியப்பராக வழிபடுகிறார்கள். பெயர்க் காரணம் என்று பல கூறப்பட்டாலும் ஒன்றுதான் பொருத்தமானதாகப்படுகிறது.

கொளஞ்சி என்பது ஒருவகை நாரத்தைச் செடி. ஒருநாள் காட்டுப் பகுதியில் (மணவாள நல்லூர்) கொளஞ்சிப் புதர்களின் இடையே இந்த 'மூலவர்' வெளிப்பட்டார். சிறுவர்கள் மேய்ச்சலுக்கு ஓட்டிப் போன பசுக்களில் ஒன்று மட்டும் மந்தையை விட்டு எங்கோ ஒதுங்கியிருப்பதைக் கவனித்துப் பின் தொடர்ந்து போயிருக்கிறார்கள். அந்தப் பசு, நாரத்தைச் செடிப் புதரில் மறைந்து கிடந்த இந்தக் கருங்கல் பீடத்தின் மீது பால் பொழிந்திருக்கிறது. பெரியவர்களை அழைத்து விவரம் சொல்லி - அவர்களும் வந்து பார்த்து - அபிடேகப் பிரியனான முருகனே அது என்பதை உணர்ந்து, சிறு கொட்டகை அமைத்துக் கோவிலாக்கி விட்டார்கள். எங்கோ ஒதுக்குப்புறமாய் இருந்த சிறு கிராமமான மணவாளநல்லூர் இப்போது கொளஞ்சியப்பர் அருளால் மிகப் பெரிய புகழ்பெற்று விட்டது.

ஆலயத்துத் தலபுராண நூல் குறிப்பின்படி, 'தன் அடையாளமாக நடப்பட்ட கல் நிற்கும் இடத்தில் முருகன் வீற்றிருப்பான்' என்று உறுதி செய்திருக்கிறார்கள். நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் முருகன் விரும்பி உறையும் இடங்கள் என்பதாய்க் கூறும் போது

"....காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்" என்கிறார். கந்துடை நிலை என்பதே இந்தக் கொளஞ்சியப்பரின் தோற்ற நிலை.

வழிபாட்டுக்குத் தோற்றங்கள், வரலாறு, ஆதாரம் என்பனவெல்லாம் பொருட்டே இல்லை. மக்களுக்கு நம்பிக்கையளிப்பனவாக, குறைதீர்க்கும் அருமருந்தாக விளங்கும் தெய்வங்களே மிகவும் கொண்டாடப்படுகிறார்கள். அந்த அளவில் பெரும்பாலும் வேளாண் பெருங்குடியினரையே கொண்டுள்ள விருத்தாசலம் வட்டார மக்கள் இந்தக் கொளஞ்சியப்பரைப் போற்றிப் புகழ்ந்து வழிபடுவதில் வியப்பதற்கு ஏதுமில்லை.

பங்குனி உத்திரத் திருவிழாவின் போது வயல்கள் தரும் அனைத்துப் பலன்களையும், நெல் என்றும் கரும்பு என்றும், இவ்வட்டாரத்துக்கே உரிய முந்திரி, பலா என்றும், வாழை, மஞ்சள், காய்கறிகள், ஆடு மாடுகள், கோழிகள் என்றும் இந்த ஆண்டவனுக்கு நேர்த்திக் கடன் தருகிறார்கள். தானிய வகைகளுக்காகவே தனித்தனியான களஞ்சியங்கள் வைத்து, ஏலத்தில் விடுகிற வருமானமே நாலு லட்சம் ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது!

உருவமில்லா முருகர்!

வைகாசி உற்சவம் பத்து நாட்கள்! தவிர, மாதந்தோறும் 'பருவம்' என்று இங்கே குறிப்பிடப்படும் பௌர்ணமி தினம், கார்த்திகை நாள் என்று விழாச் சிறப்புக்களில் கொளஞ்சியப்பர் திக்குமுக்காடுகிறார்.

கருவறை என்பது இந்த முருகன் எழுந்தருளியுள்ள பீடமும், வலப்புறம் எழுந்தருளியுள்ள சித்திவிநாயகரும்தான். சந்நிதியின் எதிரே ஐயனார் கோவில்களில் உள்ளது போல் சுதை வேலையில் குதிரைகள், நான்கு சேவகர்கள், இடும்பனுக்கும் கடம்பனுக்கும் தனியே சிறு கோவில்கள் அமைத்துள்ளார்கள். மக்களின் குறைகளைப் பிராது வடிவில் வாங்கிக் கொண்டு தீர்த்து வைக்கும் முனியப்பர், வீரனார் சந்நிதிகளும் உண்டு.

இரண்டு திருமணக் கூடங்கள், திறந்த வெளிக் கலையரங்க மேடை, விருந்தினர் தங்கும் விடுதிகள் எல்லாம் உருவாகியுள்ளன. ஐந்து நிலை இராஜகோபுரம் உள்ளிட்ட அனைத்துக் கோபுரங்களுக்கும் ஓராண்டுக்கு முன்னர் மிகச் சிறப்பான முறையில் குடமுழுக்கு நிறைவேற்றினார்கள். அமைத்திருந்த யாக குண்டங்களின் தோற்றமே பிரமிப்பை ஊட்டின.

அறப்பணிகளுள் குறிப்பிடப்பட வேண்டியது, ஆதரவற்ற நூறு குழந்தைகளுக்கு உணவளித்துக் கல்வியும் பண்பாடும் கற்றுத் தருகிற ஏற்பாடு.

தினமும் காலை வேளைகளில் நீராடித் திருநீறணிந்து வரிசையாக வந்து கொளஞ்சியப்பர் சந்நிதியில் நின்று கைகூப்பி அவர்கள் வழிபடுவது காண்பதற்கு இனிய அனுபவம்.

படங்கள் : **யெஸ்பால்**

கமலமனராஜன்



• மூலஸ்தானம் : உருவமில்லாதவனுக்கு உருவ ஒப்பனை

ஓம் என்று சொல்லுவோம்

வண்ணத்துப்பூச்சி வேட்டை

"அர்ஜுனை அப்பப்ப ஆபீசில பார்க்க வருவா. ஆனா இவ்வளவு இன்வால்வ் மெண்ட்னு தெரியவே தெரியாது ரேகா!"

"பொய். உங்க எல்லாருக்கும் தெரியும். அர்ஜுன் அப்பா, அம்மா, அக்காவுக்குக் கூடத் தெரியும்!"

நான் போட்ட கூச்சல் பக்கத்து ஃப்ளாட் காரர்களுக்குக் கேட்டு, அவர்கள் சரசரவென்று ஓடி வந்தார்கள். அர்ஜுனைக் குத்தின இடத்தில் கத்தி நீக் கப்பட்டபின், அந்த இடம் லேசாக மூடிக் கொண்டு விட அர்ஜுன் அதை அமுக் கிப் பிடித்துத் தடுமாறிப் பக்கத்தில் சாய, அர்ஜு னுக்கு அருகேயே தன்னை அமெச்சூர்த்தனமாக குத்திக் கொண்டு அந்த ரஞ்சனிப் பெண்ணும் கிடக்க, "என்ன ஆச்சு! என்ன ஆச்சு!" என் றேன்.

"கத்தியால் குத்திட்டா, குத்திண்டுட்டா!"

"செத்துப் போய்ட் டாரா? உயிர் இருக்கா?"

"யாராவது ஆஸ்பத் திரிக்கு, டாக்டருக்கு போன் பண்ணுங்களேன்! யாராவது யாராவது..." என்று அலறி னேன்.

யாரோ ஒருவர் எங்கள் போனை எடுத்து, "பக்கத்திலே தானே தேவகி ஆஸ்பத்திரி... அங்கே கொண்டு போய்ட லாமே? முரளி காரை எடு."

"ரெண்டு பேரையும் மாருதில கொண்டு போக முடியுமா?"

அவள் தன்னை அழுத் திக் கிறிக் கொள்ள முயற்சி

26

செய்திருக்கிறாள். இருவரும் அரை மயக்கத்தில்தான் இருந்தார்கள். அர்ஜுன் அவிழ்ந்த வேஷ்டியைத் தடுப்பது போல் இடுப்பை பிடித்துக் கொண்டு என்னைப் பரிதாபமாகப் பார்த்து, "தாகம் தண்ணி..." என்றார். யாரோ அவரைத் தலைமாட்டில் தூக்க, நான் அருகில் செல்ல, "ஸாரி" என்றார்.

உதவி செய்பவர்களை விட வேடிக்கை பார்க்க வந்தவர்கள் கூட்டம்தான் அதிக மானது. பக்கத்து ஃப்ளாட்காரர்கள் பேருக் குப் பேர் எட்டிப் பார்த்தார்கள். நான் காயத்ரியின் போன் நம்பரைத் தேடினேன்.

"எஸ்.டி.டி. பார் பண்ணிருக்கு போல இருக்கே. 'திஸ் பெஸிலிட்டி நாட் அவெய்ல பிள்'னு சொல்றதே!"

அர்ஜுனால் எழுந்திருக்க முடிந்தது ஆச்சரியம். ஆனால் எழுந்த உடனே சரிந்து விழுந்தார்.

"இந்தம்மா பேர் என்ன?"

"ரஞ்சனி."

"ரஞ்சனி ரஞ்சனி" என்று அவள் கன்னத்தில் தட்ட, காயத்ரிக்கு மின்னல் டிரங்க் கால் புக் பண்ணி, அது கிடைத்து எனக்குக் கொடுத்தார்கள். "காயத்ரி, நான் ரேகா பேசறேன். உடனே ஃப்ளைட்டை பிடிச்சு வாங்க!"

"என்ன ஆச்சு ரேகா?"

"உங்க அண்ணனுடைய வப்பாட்டி அவரைக் கத்தியால குத்திட்டு தன்னையும் குத்திக் கொண்டாள்."

"அய்யய்யோ உயிர் இருக்கா?"

"கேட்டுச் சொல்றேன்" என்றேன். என் குரலில் இருந்த வெறுப்பை அவள் உணர்ந் திருக்க வேண்டும். "உடனே வரேன் ரேகா! உடனே வரேன்!"

"அப்பா அம்மாவுக்குத் தகவல் கொடுத் திடு" என்றேன்.

போனை வைத்ததும் டில்லி நம்பர் கொடுத்து மற்றொரு டிரங்க்கால் புக் செய் தேன்.

ஆம்புலன்ஸ் வண்டியிலிருந்து வந்தவர் கள் அர்ஜுனின் காயத்துக்கும் ரஞ்சனியின் காயத்துக்கும் தாற்காலிகமாக முதலுதவி செய்து, "உடனே எடுத்துப் போகணும் காஷு வாலிட்டிக்கு. என்ன ஆச்சு?" என்றார்கள்.

"சண்டைல ரெண்டு பேரும் குத்திக் கிட்டாங்க."

"இந்தம்மா சம்சாரமா?"

"இது சம்சாரம். அது சின்ன வீடு. இல்லை அதான் சம்சாரமோ."

"இல்லை இவங்கதான்! இவங்களை நான் அடிக்கடி வினாயகர் கோயில்ல பார்த்

திருக்கேன்..."


"போலீஸ் கேஸ் ஆயிடுமோ?"

"ஏம்மா போலீசுக்கு போன் செய்துர லாமா?"

"அதெல்லாம் அவங்க அக்கா காயத்ரின்னு கோவைல இருந்து வருவாங்க. அவங்க தீர்மானிக்கட்டும். அப்பா அம்மாவும் வருவாங்க!"

எனக்கு இத்தனை கோர சம்பவத்தின் மத்தியில் மனசில் இருந்த தெளிவு, எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அர்ஜுன் என் கணவர் கத்திக் குத்துப்பட்டு உயிருக்குப் போராடுகிறார். அதனால் ஏற்படும் சஞ்சலத்தையும் வருத்தத்தையும், வெறுப்பு உணர்ச்சி மறைத்து ஆட்கொண்டிருந்தது. 'வேணும் இந்த ஆசாமிக்கு' என்கிற விகார எண்ணம்தான் பெரும்பான்மை பெரு திருந்தது.

சுஜாதா



நான் கதவைப் பூட்டிக் கொண்டு, ஆம்புலன்சின் பின் சீட்டில் ஏறிக் கொண்டேன். அர்ஜுன் ஆபீசிலிருந்து சீதா, அவன் அண்ணன், அர்ஜுன் பார்ட்னர் எல்லாருக்கும் தகவல் போய், அவர்கள் வந்திருந்தார்கள். அர்ஜுன் முழுவதும் படுத்துக் கொள்ளாமல், சாய்ந்த வாக்கில் இருந்தார். நினைவு தப்பியும் திரும்பியும் கொண்டிருந்தது. அந்தப் பெண் ரஞ்சனி ஆம்புலன்சின் எதிர்ப் பக்கத்தில் முழுவதும் படுத்திருந்தாள். கழுத்தின் காயத்தில் ரத்த பாண்டேஜ் முழுவதும் நனைந்திருந்தது. எனக்கு மெய்சிலிர்த்தது.

அவர்களை அருகே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று, உடனே எமர்ஜென்சி வார்டுக்குக் கொண்டு சென்றார்கள். சீதா என் அருகில வந்து என் தலையைத் தடவி "எப்படி ஆச்சு?" என்றாள். நான் மௌனமாக இருக்க, "அந்தப் பெண்தான் தாக்கியிருக்க வேண்டும். அவள் குணம் அப்படி!" என்றாள்.

"உங்களுக்கு எல்லாருக்கும் தெரியும்

தாம்லே சீதா!"

"எதும்மா?"

"இந்த மாதிரி ரஞ்சனியைப் பத்தி."

"அர்ஜுனை அப்பப்ப ஆபீசில பார்க்க வருவா. ஆனா இவ்வளவு இன்வால்வ்மெண்ட்னு தெரியவே தெரியாது ரேகா!"

"பொய். உங்க எல்லாருக்கும் தெரியும். அர்ஜுன் அப்பா, அம்மா, அக்காவுக்குக் கூடத் தெரியும்!"

"இல்லை ரேகா! என்னை நம்பு."

"போடி! என்னோட பேசாதே!"

அவள் என்னைக் கடிந்து பார்த்தாள். "கொஞ்ச நாள் போன பிறகு தெரியும் உனக்கு."

காயத்ரியும் அர்ஜுனின் அப்பா, அம்மாவும் அவசரமாகக் கையில் ஏர்பேகுடன் வந்து, "என்ன ஆச்சு கீதா?" என்றார்கள்.

கீதா தாழ்ந்த குரலில் சொல்ல, என்னை நோக்கி ப்ரேமா மாமி வந்து "என் கண்ணே! என் செல்லமே! உயிருக்கு ஆபத்து இல்லை தானே?" என்றாள்.

"என் உயிருக்கு ஆபத்தில்லைம்மா. உங்க பிள்ளையைத்தான்... உள்ள போய்ப் பாருங்க."

"வாட் ஹாப்பன்ட்?"

"ரஞ்சனின்னு ஒரு பொண்ணு..." என்று கீதா ஆரம்பிக்க, "ஒல்லியா, உசரமா, சித்த மாதிரமா... இருப்பாளே?"

கீதா என்னை அவசரமாகப் பார்த்தாள். எனக்குத் தலைவலி மண்டையைப் பிளந்தது. நிறைய ரத்தம் இழந்ததால் ரத்த பாட்டில்கள் தேவைப்பட்டன இருவருக்கும். இரண்டு பேரும் மயக்க நிலையில்தான் இருக்கிறார்கள் என்று செய்தி வந்தது. சாயங்காலம் வரை கிரிட்டிக்கல் என்றார்கள். நான் அந்த நீண்ட காரிடாரில் சுவரோடு பொருத்தப்பட்ட ப்ளாஸ்டிக் நாற்காலியில் உட்கார்ந்து காத்திருந்தேன். என் எதிர்காலம் என்ன என்று யோசிக்க முடியவில்லை. இந்த இடத்தை விட்டுப் போய் விடலாமா என்று யோசித்தேன். எங்கே போவது, எனக்கென்று நண்பர்கள் யாருமே இல்லாத இந்தப் பெரிய நகரில் எங்கே எனக்குப் புகலிடம்? நான் இருக்க வேண்டிய ஒரே இடம் இந்த ஆஸ்பத்திரி தாழ்வார அறைதான்.

சாயங்காலம் ஆறு மணிக்கு வார்டுக்கு என்னை அழைத்தார்கள். இடையில் என் அப்பா நாளைக்குக் காலை ப்ளைட்டை பிடித்து வருவதாகச் செய்தி வந்திருந்தது.

நான் வார்டுக்குச் சென்றிருந்த போது, அர்ஜுன் கண்ணை மூடியிருந்தார். சட்டை கழற்றப்பட்டு மார்பையும் வயிற்றையும் மறைக்கும் அளவுக்குப் பெரிசாக பாண்டேஜ் போட்டிருந்தார்கள். ஒரு பக்கம் ரத்த பாட்டிலும், மற்றொரு பக்கம் ஸலைன் பாட்டிலும், ஆஸ்பத்திரி மணமும், நீலவண்ணத் திரையும்...

நான், கீதா, அவருடைய பெற்றோர்கள் நாலு பேரும் சுற்றியும் நின்று கொண்டோம். ப்ரேமா அழுதார். எனக்கு அழுகை வரவில்லை. அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, "நினைவு இருக்கா?" என்றார்.

"ம்! பேசறாரு. மிஸ்டர் அர்ஜுன் இவங்கல்லாம் பாருங்க."

அர்ஜுன் கண்ணைத் திறந்து சுற்றிலும் பார்த்து, என் கண்களைச் சந்தித்ததும் நிறுத்தி விட்டு,

"வா!" என்றார் மிகத் தாழ்ந்த குரலில்.

"கிட்டப் போம்மா."

நான் அருகில் செல்ல, அர்ஜுன், "என்னை மன்னிச்சுடு... என்னை... மன்னிச்சுடு" என்றார் சிரமத்துடன்.

"அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்."

"மன்னிச்சேன்னு சொல்லு" என்பதற்குள் நாக்கு உலர்ந்து விட அவுன்ஸ் கிளாஸில் தண்ணீர் ஊற்றிக் கொடுத்தாள்.

நான் அவர் வாயில் நீர் ஊற்றினேன்.

துண்டைக் கொடுக்க துடைத்து விட்டேன். அர்ஜுனின் கண்களில் நீர் பெருக, "எல்லாம் எல்லாம் ஓவர்! தீர்ந்து போச்சு. இனிமே இனிமே புதுசா... புதுசா" என்று அதற்கு மேல் குழற, நர்ஸ், "இங்க பாருங்க, அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம் என்ன, ரெஸ்ட் எடுத்துக்கங்க..."

"அவ கட்டின பெண்டாட்டி." என்றார்.

"சரி சரி ரெஸ்ட் எடுத்துக்கங்க."

"தாலி..."

"சரி. அம்மா நீங்க கொஞ்சம் ஒதுங்கிக்கங்கம்மா!" என்றாள் நர்ஸ். அர்ஜுனின் தாயார் படுக்கையருகில் உட்கார்ந்து விபூதி, குங்குமத்தை நெற்றியில் தடவ, நான் மெல்லப் படுக்கையை விட்டு - அறையை விட்டு வெளியே வந்தேன். "சிஸ்டர் அந்த ரஞ்சனிங்கறவங்களை எங்க வெச்சிருக்காங்க!"

"இவங்க கூட அட்மிட் ஆனவங்களையா?"

சிஸ்டர் என்னை வியப்புடன் பார்த்தாள்.

"அவங்க சர்ஜிக்கல் வார்டில இருக்காங்க. வீன் கட்டாயிருச்சு தெச்சிருக்காங்க!"

"பிழைச்சுட்டாங்களா?"

"தெரியாதும்மா. அந்த வார்டு வேற."

"பார்க்க முடியுமா?"

"கீழே என்கொயரில கேளுங்க. வார்டு நம்பர், பெட் நம்பர் சொல்வாங்க."

சிஸ்டர் என்னுடன் வரட்டுமா என்றாள். 'வேண்டாம்' என்று சொல்லி, லிப்ட்டில் இறங்கிக் கீழே வந்தேன்.

ரஞ்சனியைப் படுக்க வைத்திருந்த வார்டின் விவரங்கள் கேட்டேன்.

"டிஸ்சார்ஜ் ஆயிருச்சே... நேரம் இல்லையே... சிஸ்டர், அஞ்சாம் நம்பர்ல ஒரு பெண்ணை... கழுத்து வெட்டு... செத்துட்டாங்களா?"

நான் பதறிப் போய் நின்றிருக்க, "இல்லையாம், கூட்டிட்டுப் போய்ட்டாங்களாம்; ப்ரைவேட் நர்சிங்ஹோமுக்கு!" என்றார்கள்.

(தொடரும்)

● அ. முஸ்தபா, தக்கோலம்.

? அண்மையில் தங்களை அசர வைத்த சம்பவம்?

! அமெரிக்காவில் பிட்ஸ்பார்க் அருகே வசித்த ஸ்வான்சன், தாம் இறந்தால், தாம் மிகவும் நேசித்த காரிலேயே தம்மை வைத்துப் புதைக்க வேண்டும் என்று உயில் எழுதி வைக்க, அவ்வாறே நடந்ததுதான்!

● எம். ராஜேந்திரன், லால்குடி.

? உலக கால்பந்து போட்டியில் இந்தியாவின் பங்கு என்ன?

! ஜலந்தரிலிருந்து தயாரித்து அனுப்பிய கால் பந்துகள். கால்பந்து இல்லாமல் உலகக் கோப்பை ஆட்டம் ஏது? மற்றபடி கோளம்தான்!

● ந. குணசேகரன், கவுந்தப்பாடி.

? தமிழ் திரைப்படப் பாடல்களின் தரம் குறைந்து வருவது பற்றி...?

! படங்கள் எவ்வழி, பாடல்களும் அவ்வழி!

● எஸ். சசிகுமார், செங்குன்றம்.

? பாண்டிச்சேரி தி.மு.க.வில் பிளவு ஏற்பட்டது பற்றி?

! நல்லவேளை 'அ.தி.மு.க.வில் சேரப் போவதில்லை' என்று கூறியிருக்கிறார் டி. ராமச்சந்திரன். 'லபக்'கென்று இழுத்து ஃபெவிகால் போடுவது நல்லது. இட ஒதுக்கீடு பிரச்னையில் இணைந்த எதிர்க்கட்சிகள் தேர்தலுக்காகவும் இணையலாம் என்பது மெய்தான். ஆயினும் அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதையாகி விடக் கூடாது. தி.மு.க.வின் ஒற்றுமை என்ற பலத்தின் அடிப்படையில்தான் கூட்டணி அமைக்கப்பட வேண்டும்.

● எஸ். நாரம்புநாதன், காஞ்சிபுரம்.

? நமது முதல்வர் புத்திசாலியா, திறமைசாலியா? தந்திரசாலியா?

! புத்திசாலியான தந்திரசாலி!

● எம். பிரபு, குமராட்சி.

? நாகரிகம் என்ற பெயரில் பெண்கள் உடுத்தும் உடைகளைக் கண்டீரா?

! 'ஆள் பாதி ஆடை பாதி' என்பதைத் தப்பர்த்தம் செய்து கொண்டவர்கள் சினிமாக்காரர்கள்தாம். என் கண்களுக்குப் பெண்கள் பொதுவாகக் கலை அழகுடன் அலங்கரித்துக் கொள்வதாகத்தான் தோன்றுகிறது.

பாண்டி தி.மு.க.வில் பிளவு

● கே. பாரதி, மணலூர் பேட்டை.

? உலகத் தமிழ் மாநாட்டு வேலைகளைக் கவனிக்க அமைச்சர் எஸ்.டி.எஸ். பஸ்ஸில் சென்றாராமே?

! ஞாபகமறதியாகக் கம்பியைப் பிடித்துக் கொண்டு ஃபுட்போர்டில் நின்று டிராவல் பண்ணாமலிருந்தால் சரி!



• சிக்கலில்....

● கு. இலக்கியன், ரெட்ஹில்ஸ்.

? சென்னை மாநகராட்சியில் இருபது வருஷமாக ஊழல் நடந்து வருகிறதாமே?

! முன்பு மஸ்டர் ரோல் விவகாரம் என்பதாக ஒன்று தலைதூக்கியது. (அண்மையில்தான் தீர்ப்பு கிடைத்தது.) அப்போது ஊழல் என்று சொல்லி நகரசபையைக் கலைத்தார்கள். அப்புறம் தேர்தலே கிடையாது. இந்த ஜனநாயக விரோதப் போக்கு மஸ்டர்ரோல் விவகாரத்தை விடப் பல மடங்கு ஊழலைத்தான் பெருக்கியுள்ளது.

● அ. அப்துல்காதர், சிங்கப்பெருமாள்கோயில்.

? கேரள நிதி அமைச்சர் உம்மன்சாண்டியின் ராஜினாமா பற்றி?

! வேறென்ன, எல்லாம் உட்கட்சிப் பூசல்தான். ராஜ்ய சபைத் தேர்தலில் ஆளும்



• மனிதநேயம்?

கூட்டணி வெற்றி பெறக்கூடிய இரண்டு இடங்களில் ஒன்றை வயலார் ரவிக்குக் கொடுத்து விட்டு, மற்றொன்றை முஸ்லீம் லீகுக்கு விட்டுக் கொடுத்ததில் அந்தோணி கோஷ்டியைச் சேர்ந்த சாண்டிக்குக் கோபம். நியாயமாக அந்தோணி கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் அந்த இடத்துக்கு வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் என்கிறார். சாண்டியை சமாதானப்படுத்த அந்தோணியே டில்லியிலிருந்து பறந்து வந்தும் முடிய வில்லை. "கலந்து ஆலோசித்தேன்" என்கிறார் கருணாகரன். "இல்லை" என்கிறார் சாண்டி. ஆக மொத்தும், அந்தோணி கோஷ்டி மீது அந்தோணிக்கே ஆதிக்கம் செலுத்த முடிய வில்லை! முன்பு ராவ் தர்மசங்கடத்தில் நெளிந்த போதெல்லாம் கருணாகரன் டில்லி விரைந் தார். இப்போது கருணா கரன் சிக்கலில் இருக்கும் போது ராவ் வரவா போகிறார்?

பற்றி..?

● எஸ். எஸ். பூங்கதிர், திருவெண்ணெய்நல்லூர்.

? தமிழன் பிரதமராக வர வாய்ப்புண்டா?

! தமிழன் பிரதமராக வந்து, அவன் போதிய திறமையற்றவனாக இருந்து விட்டால் நமக்குத் தான் அவமானம். தமிழனோ, தெலுங்கனோ, குஜராத்தியோ யாராயிருந்தாலும் திறமை சாலியாக இருந்து விட்டால் இந்தியன் என்ற முறையில் நமக்குப் பெருமை. எனவே தமிழ னாய் இருப்பதோடு இந்தியனாகவும் இருப் போமே!

● வைத்யா, திருவெண்ணெய்நல்லூர்.

? அசிங்கம், அநாகரிகம் - என்ன வேறுபாடு?

! அநாகரிகம், பல விஷயங்களில் ஜெ. நடந்து கொள்வது. அசிங்கம், ஆதரவாளர்கள் அதெல்லாவற்றுக்கும் 'சிங்சக்' போடுவது.

● பாளை பசும்பொன், மகாராஜநகர்.


? "காவல்துறை மனிதநேய முறையில் செயல்பட்டு வருகிறதென்றால் அது அ.இ. அ.தி.மு.க. ஆட்சியைச் சாரும்" என்று தமிழக முதல்வர் கூறியுள்ளாரே?



• ஃபிலிம்கால் தேவை!



• மறதியாக...



• ஆதிக்கமிழப்பு!



• கண்ணாடி மாளிகை...

! மனித நேயம்னா அவங்க அகராதியிலே காவல் நிலைய கற்பழிப்பு, காவல் நிலைய வன்முறையால் மரணம் முதலிய எல்லாம் உள்ளடங்கியது போல! போலீஸ் கொடுமை தாங்காம ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் தற்கொலை செய்துக்கிட்டாங்களே, அதையும் சேர்த்துத்தான் சொல்றாங்க காட்டியும்!

● மங்கை, பாளையங்கோட்டை.

? "இப்போது வரும் சில சினிமாக்களை டார்ச் லைட் அடிச்சுத்தான் பார்க்க வேண்டி யிருக்கிறது" என்ற பானுமதி ராமகிருஷ்ணா வின் டீவி கமெண்ட் பற்றி...?

! கிண்டல், அந்த வினாடியில் கேட்க நன்றா யிருக்கும். ஆனால் 'கண்ணாடி மாளிகையிலி ருந்து எறியப்பட்ட கல்' என்பது யோசித்தால் புரியும். அந்த நாளைய தராதரப்படி படு ஆபாசமாகத் தோற்றமளித்து நடித்தவர் என்று அவர் மீதே குற்றம் சுமத்தப்பட்டதுண்டு. மோசமான ஒளி-ஒலிப் பதிவுகளும் அந்நாளில் இருந்ததுண்டு. பணத்துக்காக எடுக்கப்பட்ட படங்களோ ஏராளம்!

● எஸ். குமார், காரைக்குடி.

? அரசியல்வாதிகள் அயல்நாடுகளுக்கு யார் செலவில் செல்கிறார்கள்?

! நிச்சயமாகச் சொந்தச் செலவில் அல்ல. வாய்ப்புக் கிடைத்தால் மக்களின் வரிப்பணத் தில். அதை விட்டால் வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன!

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம். ❑

? பேருந்துகளில் சினிமா பாடல்கள் ஒலி பரப்பப்படுவது பற்றித் தங்கள் கருத்து?

! விரும்புகிறவர்கள் மட்டும் கேட்க வசதியாக ஹெட் ஃபோன்ஸ் வசதி செய்து கொடுக்காத வரை, பிறருக்குத் துன்பம். அப்படி துன்பம் அளிப்பது தனிமனிதனின் சுதந்திரத்தில் தலையிடுவதும் ஆகும்.

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கே. என். பாலகிருஷ்ணன்,
279, பெரிய கடைத் தெரு,
கும்பகோணம் - 612 001.

ராஜேந்திர வர்மா ஃபோர் ஸ்கொயர் சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் ஒட்டினார். பாக்கட் தடவி, லைட்டர் எடுத்து, சிகரெட்டைக் கோபமடையச் செய்தார். அந்த சிகரெட் அவருடைய வாழ்க்கைக் காலத்தின் நொடிப் பொழுதுகளைக் கழிக்க ஆரம்பித்துப் புகை விட்டது! பங்கஜ் குமாரைப் பார்த்தார் வர்மா. "வாங்க, பிரகாஷைப் போய்ப் பார்ப்போம்."

"பிரகாஷின் கன்னங்களெல்லாம் கன்றிப் போயிருந்தன. டி.ஸி.பி தட்டிய போது கரீரென்றது."

"பிரகாஷ்... தப்பு உன்னோடது இல்லை."

"சார்...."

"நாங்க நம்பறோம். நீ ஒரு அப்பாவி. உன்னை அந்த ஷில்பா ஆசாமிங்க ஒரு வாகனமா பயன்படுத்தி, போதை மருந்து கடத்தியிருக்காங்கன்னே வச்சுக்குவோம். பதினைஞ்சு நாள் வேலை செய்தாய். இதில் எத்தனை நாள் இதே போல் உன்னைப் பயன்படுத்தினாங்க?"

12



"மூன்றே நாட்கள், சார்! ஒரு டிரிப், ஜுஹு பீச் ஹோட்டல் ஹாரிஸனுக்கு. அப்புறம் அந்த கோகுல் கொலையான அன்று இதே ஹோட்டல் பானுவுக்கு. இன்னிக்கு..."

"மூன்று நாளும் உனக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் ஏற்படலையா?"

"ஏற்பட்டது சார்... ஆனா இப்படி மாட்டிக்குவோம்னு எண்ணலை..."

"விபரீதமா ஆயிட்டுதே. உடல் நார் நாரா நைஞ்சு... சரி... இப்போ... நீ சொன்னதுக் கெல்லாம் சாட்சியம் ஏதாவது உண்டா?"

"ஷில்பா அலுவலகத்தில் ஒரு ஃபைல் இருக்குது! 'ஓபியம்' பற்றிய ஃபைல். அதை எடுத்தால் போதும்!" - உற்சாகமாகக் கூவினான் பிரகாஷ்.

"ஓபியம்' பற்றிய ஃபைலா?" சுவாரஸ்யமாய் நிமிர்ந்தார் டி.ஸி.பி.

"அங்கே அஜய்க்கு என்று தனி கேபின், பாலேகருக்கு ஒரு தனி கேபின் உண்டு. அஜய் எங்கோ வெளியே போயிட்டான். அப்போ என்னைப் போய் ஒரு ஃபைல் எடுத்து வரச் சொன்னார் பாலேகர். அப்போ இந்த ஃபைலும் என் கண்ணுல பட்டது. மேலோட்டமா படிச்சேன். என்னவோ ஒரு பார்முலாவில் ஹைட்ரோ-க்ளோரைடை மிக்ஸ் பண்ணினால் அது ட்ரக்-யூசருக்கு எக்ஸ்ட்ரா-கிக் கொடுக்குதுன்னு போட்டிருந்தது!"

பங்கஜ் குமார் நாற்காலி விட்டே எழும்பினார். "ஸார்! அந்த ஃபைலைக் கைப்பற்றிட்டால் போதுமே..."

"பிரகாஷ்! இது மட்டும் பொய்யாக அமைந்து... நீ எங்களை ஏமாளியாக்க முயற்சி செய்கிறாய் என்றால்... இதைவிடக் கொடுமையான உபசாரம் நடக்கும்!"

"ஐயோ! வேண்டாம் சார்! நான் ஏன் பொய் சொல்லப் போறேன்! இன்னும் கேட்டா கோகுலோட கொலைக்கும் இவங்களுக்கும் கூட சம்பந்தம் உண்டுன்னு நினைக்கிறேன்!"

"எப்படி?"

"கோகுலோட கொலைக்குப் பின்னால என்னை ஷியாம் சுந்தர் அணுகி 'பழைய படியே செய்வோம்... லட்சம் லட்சமா பணம்'னு சொன்னான். அவனோட தப்புக் குறி போடப்பட்ட போட்டோ கூட அஜய் யோட அறையில் பார்த்திருக்கேன்! அதாவது அவனையும் தீர்த்துக்கட்ட நினைக்கிறாங்க..."

டி.ஸி.பி. உற்சாகமானார். "பங்கஜ்! தப்பு

பண்ணிட்டோம். இந்த லைனை நாம் தப்ப விட்டிருக்கோம்..."

"எஸ்... சார்."

"பிரகாஷ்! இப்போ... கிளம்பினால்.. உன்னால் அந்த ஃபைலை அடையாளம் கண்டு எடுத்துத் தர இயலும் தானே?"

"நிச்சயமா."

"கிளம்பு!"

டி.எஸ்.பி. ராஜேந்திரவர்மா, உடன் வரச் சொல்லி பங்கஜ் குமாருக்குக் கையைக் காட்டி



விட்டு நடந்தார். போகும் போதே சொன்னார்:

"ஷில்பா ஆசாமிங்க ட்ரக் கடத்தல் பண்றாங்கன்னு ஷியாம் சுந்தருக்கு ஏற்கெனவே தெரிஞ்சிருக்கு. புதுசு புதுசா சேல்ஸ் ரெப்களை நியமிச்சு, மாலை 'இங்கிருந்து அங்கே கொண்டு போ.. அங்கிருந்து இங்கே கொண்டுவா'ன்னு அழகா பயன்படுத்தியிருக்காங்க. இப்படி மால் கைமாறும் போது வழியில் அவங்களை மடக்கி, அசல் மாலுக்குப் பதில் போலியான மாலை மாத்திட்டால், அப்புறம் நிஜ மாலை லட்சக்கணக்கில் வித்துப் பணம் பண்ணலாம். இது ஷியாம் சுந்தர் திட்டம். பிரகாஷுக்குத் தான் போதைப் பொருள் கொண்டு போறதே தெரியலை. ஆனால் பிரகாஷ் விஷயம் தெரிஞ்சுதான் போதை மருந்து கடத்திறான்னு ஷியாம் சுந்தர் எண்ணி வியாபாரம் பேசிட்டான்...!"

"சரியான விளக்கம் சார்... அதோட இன்னொண்ணு... 'ஷில்பா' ஆபீஸ் போய் எல்லாரையும் விசாரிச்சா 'இன்னிக்குப் பிரகாஷ் அலுவலகமே வரலைன்'னு பாலேகர் சொன்னானே, அது எவ்வளவு தூரம் உண்மைன்னும் தெரிஞ்சுடும்."

சில நிமிடங்களில் ஒரு போலீஸ் படை தயார் ஆனது. நர்கோட்டிக் செல்லுக்கென உள்ள தனிப்பட்ட அதிகாரிகள்.

பிரகாஷ் கான்ஸ்டபிள்கள் சூழ நீல நிற போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டான். அவனோடு மூன்று கான்ஸ்டபிள்கள் ரைஃபிள்களோடு வந்து அமர்ந்தார்கள். நீல நிற வேன் தெப்பமாக அசைந்து கிளம்பியது!

எப்ஸிட்டோ குமார்

"ஆண்டவனே, ஃபைல் அகப்பட வேண்டுமே!" என்று துப்பாக்கிகளைக் கண்ட நடுக்கத்துடன் பிரார்த்தித்துக் கொண்டான் பிரகாஷ். டி.எஸ்.பி. ராஜேந்திரவர்மா, பங்கஜ் குமார், இன்னும் இரண்டு அதிகாரிகள் அம்பாசிடரில் ஏறிக் கொள்ள, மற்றொரு காரில் மஃப்ட்டி உடையில் சில அதிகாரிகள்.

'ஷில்பா ஃபார்மசூடிக்கல்ஸ்' இருந்த வர்ஷா பில்டிங் எதிரே நீல நிற வேன் சற்று முன்னே போய் நின்று கொள்ள... டி.எஸ்.பியின் கார் கட்டட முகப்பில் நின்றது! அப்போது நேரம் ஐந்தைத் தாண்டிவிட்டது.

ராஜேந்திரவர்மாவும், பங்கஜ்குமாரும் மெதுவாக நடந்து லிஃப்ட்டுக்குள் நுழைய... பின் காரில் வந்த அனைத்து மாற்று உடை அதிகாரிகளும் படிகளில் நாலுகால் பாய்ச்சலில் ஏறினார்கள்.

'ஷில்பா ஃபார்மசூடிக்கல்ஸ்' கண்ணாடித் தடுப்புகளுக்குப் பின்னால் சுவாரஸ்யமில்லாமல் தென்பட்டது. கதவின் அருகில் வாட்ச்மேன் நின்றிருந்தான். ஒருசேர இத்தனை ஆட்களைப் பார்த்தவுடன் விழித்தான்.

> ● ஒரு பூனை திருட்டுப் போனதற்காகச் சட்டத்தின் உதவியை நாடினால் ஒரு பசுவை விற்கும்படி நேரிடும்.
>
> - சீனப் பழமொழி
>
> தொகுப்பு : வயலூர் இரா. பார்த்திபன்

"உள்ளே யார் இருக்கிறது?"

"யாரும் இல்லை..."

"எங்கே எல்லோரும்...?"

"லீவு விட்டாச்சு; நீங்க.. யார்?"

அவனை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஓர் அதிகாரி உள்ளே போய்விட்டார். ராஜேந்திர வர்மா பின் தொடர... அனைவரும் அடியொற்றி நடந்தார்கள்.

திமுதிமுவென ஆட்கள் நடமாடும் ஒலிகள் அஜய்யைத் தாக்கியிருக்க வேண்டும். அவனுடைய கேபினைவிட்டுப் பரபரப்புடன் வெளியே வந்தான். அவனுக்கு உடனே விளங்கி விட்டது, ரெய்ட் நடக்கிறது என்று. அவசரமாக உள்ளே போய் டயலைச் சுழற்றினான். பின்னாலேயே வந்து விட்டார், பங்கஜ் குமார்.

"எங்கே ஃபோன்?"

"அந்தேரி ஃபேக்டரிக்கு."

"எதுக்கு?"

"ஆர்டர் விஷயமா பேசணும்."

"யாரிடம் பேசப் போறீங்க?"

"பாலேகர் ஸாஹிப்பிடம்..."

"இங்கே டிபார்ட்மென்ட் வந்துள்ளது அங்கே தெரியக்கூடாது."

"அப்போ.. நான் அப்புறம் பேசிக்கறேன்."

அஜய் 'டபக்'கென ரிஸீவரை வைத்து விட்டான்! "கெட்டிக்காரன்தான்!" என்று கூறிக் கொண்டே டி.எஸ்.பி. ராஜேந்திர வர்மா நெருங்கினார். நான்கைந்து திசைகளிலிருந்து வரும் ஸ்பீட் போலிங்கைச் சந்திக்கும் ஒரே பாட்ஸ்மன் போல் தவித்துப் போனான் அஜய்.

"பாலேகர் எங்கே?" டி.எஸ்.பி. கேட்டார்.

"அந்தேரி ஃபேக்டரியில் இருக்கிறார்."

"ஆபீஸ் ஸ்டாஃப் எல்லாரும் எங்கே?"

"இன்னிக்கு லீவு விட்டுட்டோம்."

"ஏன்?"

"வேலை இல்லை..."

"வேலை இல்லைன்னு லீவு விடுவீங்களா.. நம்பக் கூடியதாத் தெரியலியே? இப்போ யாரெல்லாம் இருக்கீங்க?"

"நானும் வாட்ச்மேனும்.."

"வாட்ச் மேனைக் கூப்பிடுங்க."

ஒரு அதிகாரி வாட்ச்மேனைத் தோளில் கைபோட்டுத் தள்ளிக் கொண்டு வந்தார். மிரண்டிருந்தான்.

"இன்னிக்கு பிரகாஷ் ஆபீஸ் வந்தானா?"

"எந்த பிரகாஷ்?"

"சேல்ஸ் மேன்..."

"நான் அஞ்சு மணிக்குத்தான் டூட்டிக்கு வந்தேன்..."

அப்போது அஜய் அறையில் ஃபோன் 'ட்ரிங்', ட்ரிங்' என்றது!

அஜய் வெடுக்கென செயல்படப் பார்க்க, டி.எஸ்.பி. அவன் தோளை எட்டிப் பிடித்து நிறுத்தினார்.

"பங்கஜ்... ஃபோன் எடுங்க..."

"ஹலோ..." எதிர் முனையில்.

"ஹலோ..." இது பங்கஜ். அஜய் திடுக்கிட்டு நிமிர்ந்தான். அசல் வாட்ச்மேன் குரலையே எப்படி காப்பி அடிக்கிறார் இவர்!"

"கோன்?"

"வாட்ச்மேன்...." என்றார் பங்கஜ்குமார்.

"அஜய்க்கோ புலாவ்..."


"ஏக் மினிட் ஸாஹிப்..." பங்கஜ் குமார் ரிஸீவரை அணைத்துக் கொண்டு டி.எஸ்.பி. யிடம் கூறினார். "சார்... பாலேகர். அஜய்யிடம் பேசணுமாம்!"

டி.எஸ்.பி. ரிஸீவரை வாங்கிக் கொண்டார்.

"அஜய் பேசறேன்" என்றார். அஜய் எதிரில் திகைத்தான். 'மிமிக்ரியில் எல்லாரும் பட்டம் வாங்கி வந்திருக்கிறார்களா!"

ஸ்ரீ கந்தசுவாமி பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால்
அங்கீகரிக்கப்பட்ட
நிதி நிறுவனம்
துவக்கம் 1990
பதிவு அலுவலகம் :
60, சாமிபண்டாரம் தெரு
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
கிளை அலுவலகம் :
36, ஜீனிஸ் ரோடு,
சென்னை - 600 015.



கந்தகோட்டம் ஸ்ரீ முத்துகுமார சுவாமி

கனகதார முதலீட்டுத் திட்டம்

உங்கள் குழந்தை
செல்வங்களை
கோடீஸ்வரனாக்குங்கள்!
ரூ. 50,000/-
செலுத்துவீர்.
10 ஆண்டுகளில்
ரூ. 50,000/-ஐ திரும்ப
பெறுவீர்!
மீண்டும் 20ம் ஆண்டு
நிறைவில் **ஒரு**
கோடியை பெறுவீர்!


வெகுமதி முதலீட்டுத் திட்டம்

ஒரே ஒரு முறை ரூ. 580/- செலுத்துவீர். 252 மாதங்கள்
நிறைவில் ரூ. 40,000/- பெறுவீர்!

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	**14%**	**15%**	**17%**	**18%**	**18.5%**	**19%**	**20%**

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும்.
உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது
90 மாதங்களில் 4 மடங்காகிறது





பென்ஷனர் நலத் திட்டம்-வட்டி 19.5%

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி
மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.


கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ. 300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விதம்
ரூ. 1.85

H.O.: Friday Holiday
B.O.: Tuesday Holiday
Business Hours
Week Days 9.00 a.m-1.00 p.m. &
2.00 p.m. - 6.00 p.m.
பங்குதாரர்களுக்கு மட்டும்

சேர்மன் **P. பாலசுப்பிரமணியம்**, B.Sc.,
சீனியர் டிரஸ்டி
ஸ்ரீ கந்தகோட்டம்
சென்னை - 3.



சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

பாதுகாப்பு பெட்டகம் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்

Suresh

ஏதோ, என்னமோ?

சூட்மார்னிங் மேடம்...
சும்மா இருங்க மச்சான்!
பாடி. கார்டு...
ஆம்பிள்ளையாடா நீங்க?
கண்ணுக்குள் கருப்பாயி -
இவதான் என் பெண்டாட்டி!
மடிசார் மாமி -
ஹலோ மேடம்!
பிளே கேர்ல்ஸ்...
நவீன காமசூத்திரம்!
மிஸ்டர் கருப்புப் பூனை...
மிலிட்டரி இன்டலிஜென்ஸ்!
நோ பாலிடிக்ஸ்...
டைம் பாம்!

ஏதோ புதுக்கவிதை என்று
எண்ணாதீர்கள். பிலிம்
சேம்பரில் பதிவு
செய்யப்பட்டுள்ள சினிமா
டைட்டில்கள்தாம். முதல்
பதினொன்று தமிழ். அப்புறம்
மலையாளம், தெலுங்கு,
ஹிந்தி. - ஜூலி



"அஜய்... மால் எல்லாம் க்ளீன் பண்ணிட்டேன். வேன் ஃபுல்லா, மறைவா அடுக்கிட்டேன். நீ வந்தவுடன் பயாந்தர் கொண்டு போயிடலாம். எப்ப வர்றே?"

"எப்போ வரணும்?"" புன்னகைத்தார். டி.எஸ்.பி.

"ஏழு மணிக்குள் வந்துடு. வச்சிடறேன்."

அஜய் கோபப்பட்டான். "சார்.. இது அத்து மீறல். டைரக்டருக்குத் தெரிந்தால் உங்கள் நிலை மோசமாகிடும்."

"அச்சா... ஷில்பாவோட நிலைமையே மோசமாயிடுத்தே!... பிரகாஷ்! ஃபைலை எடு."

"பிரகாஷ் அஜய்யின் அறைக்குள் புகுந்தான். சரியாக அறுபத்தி மூன்றாம் நம்பர் ஃபைலை எடுத்தான். உள்ளேயிருந்து அந்த பிரத்யேகமான ஃபைல் எட்டிப் பார்த்தது. தன் வாழ்வை மீட்டுத் தரப் போகும் அந்த ஃபைலை டி.எஸ்.பி.யிடம் கொடுத்தான்.

அவர் அவசர அவசரமாகப் படித்தார். 'ஓபியம்' என்ன ஆதாரப் பொருள் எப்படியெல்லாம் உருமாறி போதை ஏற்றுகிறது! ஏகப்பட்ட இரசாயன வேலைப்பாடுகள்...

டி.எஸ்.பி. பிரகாஷைத் தோளில் தட்டிக் கொடுத்தார். கொடுத்த அடிக்கெல்லாம் மன்னிப்புக் கேட்பதுபோல் அன்பான பார்வை பார்த்தார். அஜய் அகப்பட்டுக் கொண்டதை உணர்ந்தான். தரையைப் பார்ப்பது தவிர அவன் வேறு எதுவும் செய்யவில்லை.

"பங்கஜ்... எல்லாரும் அந்தேரி புறப்படுங்க. பாலேகரை சாட்சியங்களோடு அமுக்கலாம்."

அந்தேரி வீர்தேசாய் சாலையில் 'ஷில்பா' தொழிலகம் முன் வேனை நிறுத்தி வைத்துக் கொண்டு, நிலை கொள்ளாமல் அலைந்து கொண்டிருந்த பாலேகர், போலீஸ் பெருமக்களைப் பார்த்தவுடன் வியர்த்தார். ஸர்ச் லைட் ஒளிகளும், ஆகாயத்தை நோக்கிச் சுடப்பட்ட பிஸ்டல் ஒலியும் தப்பியோடப் பார்ப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்த்தின.

வேனைப் பரிசோதித்த போது கோணிப் பைகளிலும் கண்ணாடிப்பாத்திரங்களிலும் குடுவைகளிலும் தடயமான சமாசாரங்கள் நிறையக் கிட்டின.

டி.எஸ்.பி. ராஜேந்திர வர்மா தலைமையில் போலீஸ் அணி, பாலேகர், அஜய் என்ற சுறா மீன்களோடும் பிரகாஷ் என்ற அப்பாவியோடும், ஆர்தர் ரோடு ஸ்டேஷனுக்குத் திரும்பி வந்து சேர்ந்த வேளையில்....

அமைச்சர் கொண்டேகர் பொக்காடியா, இருபுறமும் கிருஷ்ணராவ், கன்ஷ்யாம், நிஷா ஆகியோர் சூழ அமர்ந்திருந்தார்.

பிரகாஷ் புன்னகையோடு இறங்க, நிஷா அவன் விடுதலையைப் புரிந்து கொண்டு துள்ளி ஓடி அணைத்துக் கொள்ள, அனைவரும் சங்கடமாக நகைத்தார்கள்.

பின் தொடர்ந்த நாட்களில் அமைச்சர் பொக்காடியா தலைமையில் நிஷா, பிரகாஷ் திருமணம் இனிதே நடந்தேறியது.

"உன்னை விடுவிக்க முடியுமான்னு விசாரிக்க வந்தேன். இப்போ திருமணச் சிறையிலே அடைக்கிறேன்" என்று ஜோக் அடித்து ஆசி வழங்கினார். போதாக்குறைக்கு மெட்டல் கம்பெனியின் பொறுப்பு வேறு அவன் தலையில் கட்டப்பட்டது, நிஷாவின் அப்பாவினால்.

பாலேகரும், அஜய்யும் போலீஸ் உபசரிப்பைப் பொறுக்க மாட்டாமல் கோகுலைக் கொலை செய்ததை ஒப்புக் கொண்டார்கள். ஷ்யாம் சுந்தருக்கு வலைவீசிக் கொண்டிருக்கிறார்கள் டி.எஸ்.பி.யின் ஆணைக்குட்பட்ட அதிகாரிகள்.

(முற்றும்)

கல்வி பெற உதவுங்கள்; வாழ்க்கை மலரச் செய்யுங்கள்!



• க.இந்து



• மணிக்கண்ணன்

ராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி முதல்வர் எழுதுகிறார்:

"மதுரை காமராஜர் பல்கலைக் கழக ஏப்ரல் 93 தேர்வில் இளங்கலை வரலாற்றுப் பாடத்தில், இக்கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மணிக்கண்ணன் பல்கலைக்கழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் பார்வையற்ற மாணவர் என்பதோடு, கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக் கட்டளை மூலம் ஏழை மாணவர்களுக்கான உதவித் தொகை பெற்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கது."

அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை செய்து வரும் நற்பணிக்கு மேற்படி கடிதம் போதிய சான்று.

ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கில் மாணவ, மாணவியர் உதவி கோரி உருக்கமாக எழுதுகின்றனர். ஓர் உதாரணம்:

"எனது தந்தை சமையல் வேலையில் கை வேலை செய்கிறார். வருடத்தில் ஆறு மாதம் மட்டுமே வேலை கிடைக்கிறது. எங்கள் குடும்பத்தில் உள்ள ஐந்து பேருக்கு அவர் வருமானம் போதுமானதாக இல்லை. என்றாலும் எப்படியோ கஷ்டப்பட்டு அம்பா சமுத்திரம் அம்பை கலைக் கல்லூரியில் சேர்ந்து விட்டேன். பன்னிரண்டாம் வகுப்பில் கல்லிடைக் குறிச்சி திலகர் வித்யால யாவில் மூன்றாவது ரேங்க் பெற்றுள்ளேன். தயவு செய்து எனது கல்லூரிப்படிப்புக்கு உதவித் தொகை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

-க.இந்து, கல்லிடைக்குறிச்சி.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை நிறுவப்பட்டபோது முதல் ஆண்டில் ரூ.10.000/- மட்டுமே உதவித் தொகை வழங்கியது. படிப்படியாக அதிகரித்து நடப்பு ஆண்டுக்கு ரூ.45,000/- அளிக்கிறது. விண்ணப்பங்களின் பரிசீலனை முடியும் போது இது மேலும் உயரக் கூடும். மாணவர்கள் படிப்பில் சிறந்தவர்களாகவும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனை. இதற்குப் பள்ளி அல்லது கல்லூரி முதல்வரின் சான்றிதழ் கோரிப் பெறப் படுகிறது. அறங்காவலர்கள் விண்ணப் பங்களைப் பரிசீலித்து, விவாதித்து, உதவித் தொகை பெற ஒவ்வொரு மாணவனையும் மாணவியையும் கருத்துடன் தேர்ந்தெடுக் கின்றனர்.

வாழ்க்கையுடன் போராடி வெற்றி பெறத் துடிக்கும் இளம் மாணவர்களுக்கு உதவும் ஆர்வம் உங்களுக்கு இருக்குமானால் இயன்ற அளவு நன்கொடையைக் கல்கி நினைவு அறக்கட்டளைக்கு அனுப்பி வைக்கலாம்.

டிராஃப்ட் அல்லது எம்.ஓ. அல்லது காசோலை மூலம் KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST என்ற பெயருக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும். நன் கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு.

விலாசம்:

கி.ராஜேந்திரன்,
(நிர்வாக ஆசிரியர்: கல்கி)
நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
நெ.1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை-600 034

லங்கா நகரத்தின் மாட மாளிகைகளின் அழகையும் ஐசுவரியத்தையும் ராமன் பார்த்து, "ஐயோ, கால பாசத்தால் தூண்டப்பட்ட ஒருவனுடைய மகா பாப காரியத்தின் பயனாக இவ்வளவு ஐசுவரியமும் இந்த ராக்ஷசக் குலமும் அழிய வேண்டியதாயிற்று. நற்குலத்தில் பிறந்த இவன் தன் ஜன்மத்தின் பெருமையை அறிந்தும் இப்படி மூர்க்கனாகப் போய்த் தன் மரணத்தைக் கூப்பிட்டழைத்துத் தன்னைச் சேர்ந்தவர்களையும் அழிக்கிறானே!" என்று இரங்கினான்.

கோட்டை மதிலைக் காத்து நின்ற ராக்ஷச சேனையின் வரிசை மற்றொரு மதிலைப் போல் காணப்பட்டது.

ராமனும் வீரர்களை ராக்ஷசச் சேனையை எதிர்ப்பதற்குப் பிரித்து விட்டான். "நீலன் கிழக்குக் கோட்டை வாயிலில் பிரஹஸ்தனை எதிர்க்க வேண்டியது. தெற்கே மகோதரனையும் மகா பாரிசுவனையும் அங்கதன் எதிர்க்க வேண்டியது. மேற்கு

சக்கரவர்த்தித் திருமகன்

வாயிலைக் காத்து வரும் மாயாவியான இந்திரஜித்தை ஹனுமானே எதிர்க்க வேண்டியது. உலகத்தை உபத்திரவம் செய்யும் ராவணனை நானும் லக்ஷ்மணனும் எதிர்த்து, லங்கையில் பிரவேசிப்போம். சுக்ரீவனும் ஜாம்புவானும் விபீஷணனும் நம்முடைய சேனையுடன் இருக்கலாம்" என்று அணிவகுத்தான்.

"நடத்த வேண்டிய யுத்தத்தைச் சரியாக நடத்தி இந்த துஷ்டனை அழிப்பதில் மனத்தைச் செலுத்துவோம். போரில் பெருங் குழப்பமுண்டாகும். ராக்ஷசர்கள் பல மாய வேஷம் போடுவார்கள். நம்முடைய சேனையிலுள்ள வானரர்களும் கரடிகளும் தம் சொந்த வடிவத்திலேயே நின்று யுத்தம் செய்யட்டும். ராக்ஷச ராஜன் தம்பியும் அவன் நண்பர்கள் மட்டும் என்னோடும் லக்ஷ்மணனோடும் மானிட உருவத்தில் இருக்கலாம். அரக்கர்கள் எந்த வேஷம் போட்டாலும் மனித உருவத்தையாவது வானர உருவத்தையாவது எடுக்க மாட்டார்கள். அவர்களுடைய கர்வம் அதற்கு இடந்தராது. ஒழுங்காக எதிர்த்து நின்றோமானால் வதம் செய்ய வேண்டியவர்களை வதம் செய்யலாம். துணை செய்ய வேண்டியவர்களுக்குத் துணை செய்யலாம்" என்று ராமன் சொல்லி முடித்தான்.

சேனையுடன் சுவேலா மலையிலிருந்து இறங்கி லங்கா நரகரத்தை அடுத்த வனத்தில் பிரவேசித்தார்கள். கடலைப் போன்ற வானர சேனை வனத்தில் இறங்கியதும் அவ்விடம் வசித்து வந்த நானாவித மிருகங்களும், பட்சிகளும் பயந்து இங்கு மங்குமாய்ச் சென்றன. வனத்தின் அழகை முனிவர் தம் தனிப்பாணியில் வர்ணிக்கிறார். மேலே மலைச்சிகரத்தில் மிக பத்திரமாகக் காக்கப்பட்டு வந்த லங்கா நகரத்தையும் வர்ணிக்கிறார். மலைக் கோட்டையையும் விசுவகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்ட திவ்விய சௌந்தர்யமான நகரத்தையும் கீழிருந்து பார்த்து ராமன் 'என்ன அழகு! என்ன செல்வம்!' என்று வியப்பில் மூழ்கினான். ராக்ஷச வீரர்களின் பலத்தையும் யுத்தப் பசியையும் கோட்டை வாயிலையும் மதிலையும் யந்திரங்களையும் பார்க்க வானரங்களின் உற்சாக வேகம் மேலும் மேலும் பொங்கிற்று.



யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் சுக்ரீவன் திடீர் என்று ஒரு பாய்ச்சல் பாய்ந்து லங்கா நகரத்தின் ஒரு கோபுர மேடையில் இறங்கினான். அங்கே ராவணன் தன் பரிவாரத்துடன் திவ்விய ஆசனத்தில் உட்கார்ந்திருந்ததைக் கண்டு இவ்வாறு குதித்துப் பாய்ந்தான். கருத்த மேகக் கூட்டத்தைப் போலவும் சந்தியா கால செவ்வானம் போலவும் ராவணன் சிவந்த வஸ்திரம் போர்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். ஐராவதத்தின் தந்தங்களால் குத்திக் காயப் படுத்தப்பட்ட வடு அவனுடைய அகன்ற மார்பில் சந்திர பிம்பத்தைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

"ராவணா! சிக்கினாய்! ராமனுடைய தோழனும் அடிமையுமான சுக்ரீவன் நான். இன்று நீ முடிந்தாய்!" என்று அவன் மேல் பாய்ந்து அவன் கிரீடத்தைக் கீழே தள்ளி ஓர் அறை அறைந்தான். பிறகு இருவருக்கும் பெரும் மல்யுத்தம் நடந்தது.

இருவரும் மல் யுத்தத்தில் நிபுணர்கள். அந்த சாஸ்திரத்தில் கண்ட எல்லா வித்தைகளையும் ஒருவர் மேல் ஒருவர் காட்டினார்கள். ராவணன் வெகு கஷ்டப்பட்டுப் போனான். அதனால் அவன் மாய வித்தைகளில் இறங்கினான். அப்போது சுக்ரீவன் அவனை விட்டு விட்டு ஒரே பாய்ச்சலாக ராமன் இருந்த இடம் மறுபடி வந்து குதித்தான்.

இவ்வாறு சூரிய புத்திரன் அற்புத காரியம் செய்து விட்டு வந்ததைக் கண்ட வானரத் தலைவர்கள் தங்கள் அரசனைப் புகழ்ந்து பெரும் ஆரவாரம் செய்தார்கள்.

சுக்ரீவன் க்ஷேமமாகத் திரும்பி வந்ததைப் பார்த்த ராமன் சந்தோஷமடைந்தான். வானர ராஜாவின் உடம்பின் பேரில் காயங்களையும் ரத்தத்தையும் பார்த்து ராமன் சொன்னான்:

"சுக்ரீவனே! உன் வீரத்தைப் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தோம் என்பது உண்மை. ஆயினும் இது சரியான காரியமல்ல. அரசனானவன் இப்படி சாகசம் செய்யக் கூடாது. யாருடனும் யோசிக்காமல் இப்படிப்பட்ட அபாய காரியத்தில் திடீர் என்று புகுந்து விட்டது சரியல்ல."

இவ்வாறு கண்டித்ததை சுக்ரீவன் கேட்டு, "உண்மை; உங்களைக் கேட்காமல் நான் பாய்ந்து யுத்தம் செய்தது முறை தவறே. சீதைக்கும் தங்களுக்கும் அபராதம் செய்த அந்தப் பாவியைப் பார்த்ததும் எனக்குப் பொங்கிய கோபத்தால் மெய்மறந்து போனேன். அதனால் இப்படிச் செய்தேன்!" என்றான்.





'கார்டை'ப் பொருத்துங்கள்; காசை எண்ணுங்கள்!

திரும்பின பக்கமெல்லாம் இன்று ஃபைனான்ஸ் கம்பெனிகள். வங்கிகளை விட அதிக வட்டி கிடைக்கிறது என்பதால் அங்கே டெபாசிட் குவிகிறது. ஃபைனான்ஸ் கம்பெனிகளில், தம் சேமிப்பைப் போட்டு வைக்கிறவர்களுக்கு, அவசரத் தேவை என்றால், டெபாசிட்டிலிருந்தே கடன் பெற வசதி உண்டு. ஆனாலும் அதற்குரிய சம்பிரதாயங்களைப் பூர்த்தி செய்து கடன் செக்கை வாங்கிக் கொண்டு போய், பாங்க்கில் போட்டு, அது கலெக்ஷனுக்குப் போய், கைக்கு வந்து சேர குறைந்த பட்சம் இரண்டு நாளாவது ஆகுமில்லையா? பணம் மிக மிக அவசரம். என்ன செய்ய?

"அதற்கும் எங்கள் கம்பெனி வழி செய்துள்ளது" என்கிறார் எஸ்.ஆர்.எஃப். பைனான்ஸ் கம்பெனியின் மானேஜரான ரங்கராஜன். (ஸ்ரீராம் ஃபைபர்ஸ் குரூப்பின் ஓர் அங்கம்தான் இந்த எஸ்.ஆர்.எஃப். பைனான்ஸ்.)

"எங்களிடம் குறைந்தபட்சம் பதினைந்தாயிரம் ரூபாய் டெபாசிட் செய்பவர்களுக்கு, டெபாசிட் தேதியிலிருந்து மூன்று மாதம் கழிந்து, தானியங்கி டெல்லர் இயந்திரத்தில் பயன்படுத்தக் கூடிய ATM (Any Time Money) கார்டு தரப்படும். இந்த அடையாள அட்டையைப் பயன்படுத்தி மூவாயிரம் ரூபாய் வரை (எவ்வளவு டெபாசிட் செய்திருந்தாலும் அதிக பட்சம் மூவாயிரம்தான்.) பணம் பெற வசதி உண்டு. இதற்காக, இந்தியன் வங்கியின் மைலாப்பூர் கிளையில் ஏற்பாடு செய்திருக்கிறோம். அங்கு தானியங்கி டெல்லர் இயந்திரம், 24 மணி நேரமும் செயல்படுகிறது. டெபாசிட்தாரர்கள் இந்தியன் வங்கியில் கணக்கு வைத்திருக்க வேண்டியதில்லை. பணம் எடுத்துக் கொள்ளஎங்களிடம் முன் அனுமதி பெற வேண்டாம். கார்டை இயந்திரத்தில் பொருத்தி காசை எண்ணிக் கொள்ளலாம்! இந்தத் திட்டத்தை இந்தியாவில் செயல்படுத்தி வரும் ஒரே ஃபைனான்ஸ் கம்பெனி எங்களுடையதுதான்" என்கிறார் ரங்கராஜன்.

- மௌலி

பிறகு வானர சேனை ராமன் கட்டளையிட்ட முறையில் லங்கையை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டது. அங்கதனை அழைத்து, ராமன், "ராவணனிடம் தூது போய் அவனுக்குச் சொல்லுவாய்: 'மகா பாபியே! உன் காலம் நெருங்கி விட்டது. கோட்டை வாயிலில் ராமன் யுத்தத்துக்குக் காத்திருக்கிறான். தேவர்களிடம் பெற்ற வரத்தைக் கொண்டு கர்வங்கொண்டு துஷ்டனாகிப் போனாய். பெரும் பாப காரியங்களைச் செய்து வந்தாய். உலகம் க்ஷேமமடையும் காலம் இப்போது வந்தது. வெளியில் வந்து யுத்தம் செய்து கொல்லப்பட்டாயானால் பாபங்களினின்று பிராயச்சித்தம் அடைந்து, வீரர்களுக்குரிய சுவர்க்கம் அடைவாய். உயிரின் மேல் ஆசையிருந்தால் அக்கிரமமாகத் தூக்கிப் போன சீதையைத் திரும்பி ராமனிடம் சமர்ப்பித்து விட்டு சரணம் அடைவாய். உயிருடன் பிழைத்துப் போகலாம். எவ்வாறாயினும் பாபியான நீ இனி அரசனாக இருக்கத் தகுந்தவனல்ல. லங்கா ராஜ்யம் இனி விபீஷணனுடையதாகும். அரசனாக இருப்பதற்கும் ஜனங்களை ரக்ஷிப்பதற்கும் அவன் தகுதி பெற்றவன். சரணமடைந்து உயிர் தப்பும் எண்ணமில்லா விட்டால், உடனே உத்தரகிரியைகளை முன்னதாகச் செய்வித்துக் கொண்டு உன் அருமைச் சொத்தாயிருந்த லங்கையைக் கடைசித் தடவையாக நன்றாகப் பார்த்து விட்டு விடைபெற்றுக் கொண்டு மரணத்துக்குத் தயாராக வெளியே வந்து ராமனோடு யுத்தம் செய்வாயாக!' இவ்வாறு அரக்கனுக்குச் சொல்வாய் அங்கதனே!"என்றான்.

உடனே அங்கதன், "அப்படியே!" என்று குதித்துக் கிளம்பி மந்திரிகளால் சூழப்பட்டு உட்கார்ந்திருந்த ராவணன் முன்னிலையில் இறங்கினான்.

ராமன் சொன்ன வண்ணம் கம்பீரமாக, "வாலியார் என்பது உமக்குத் தெரிந்திருக்கலாம். நான் வாலியின் புத்திரன், ராமனுடைய தூதனாக வந்திருக்கிறேன். உம்முடைய பாபங்களுக்கு விமோசன காலம் நெருங்கி விட்டது. யுத்தம் செய்து வீர சுவர்க்கம் அடைவீர். ராமனும் வானர சேனையும் கோட்டை வாயிலில் காத்திருக்கிறார்கள். செய்த பாபங்களையெல்லாம் தீர்த்துக் கழுவிக் கொள்ளலாம். அப்படியில்லை, உயிரின்மேல் ஆசையிருந்தால் ராமனிடம் சரணாகதியடைவீர். இல்லையேல் யுத்தத்துக்கு எழுந்து செல்வீர். யம



பாலே படத்துக்குப் புதுக் கவிதை - போட்டி முடிவு

ரூ. 250 பரிசு பெறுபவர் :

டி. கலைவாணி, A-4, வீட்டு வசதி வாரியம், தாந்தோணிமலை, கரூர் - 5, திருச்சி (மாவ)

ஆறுதல் பரிசுகள்
(நபர் ரூ. 25) பெறுபவர் :

1. இரா நடராஜன், 38, நாகப்பா நகர், குரோம்பேட்டை, சென்னை - 600 044.
2. கே. டி. சம்பந்தமூர்த்தி, E-24, அரசு நகர், அரியலூர் சிமெண்ட் ஆலை, - 621 729.

எதைத் தேடுகிறாய்?

பறந்து பறந்து ஒயிலாய் ஆடி
எதைத் தேடுகிறாய் அங்கே, நீ?
இரத்தக் கறையிலா நாட்டினையா?
ஊழல் இல்லா ஆட்சியையா?
உண்மை பேசும் அரசியல்வாதியையா?
உயரே போகாத விலைவாசியையா?
தன்னலம் இல்லா மனிதனையா?
தாமதம் அற்ற நீதியையா?
எதைத் தேடுகிறாய்?
ஒற்றைக் காலில் தவமிருந்தாலும்
நீ தேடுவதெங்கும் கிடைக்காது.
உன்னைப் போலவே ஒருவன் அம்பலத்தில்
ஆடித் தவமிருப்பது தெரியாதோ!

- டி. கலைவாணி.

அசைவுகள் - இசைவுகள்

ஒற்றைக் காலில் ஓர்
ஒயிலான மாதவம்!
இரு கைகள் இங்கே
இறக்கைகளாய் இயங்குவதால்
உயரே கொண்டு செல்லும்
உல்லாச வாகவம்!
அசைவுகள் அனைத்தும் - இங்கே
இசையின் இசைவுகள்.
நுனிக்கால் எழுதுகின்ற
நுட்பமிகு கவிதை!

- இரா. நடராசன்.

சுந்தரிகள் ஊர்வலம்

பறவையின் சிறகுக்கு பாவையர் சவாலா
காற்றுக்கும் ஒத்துடம் கொடுக்கும்
கலையழகா
பாதத்திற்கும் பூமிக்கும் ஏற்பட்ட பகையா
பூத்த மலர்களின் புதுவகை
அலங்காரமா
சொர்க்கத்தின் ராஜபாட்டையில்
சுந்தரிகளின் ஊர்வலமா
நீர்க்குமிழி மேல் நின்று நிரந்தர
நாட்டியமா
காம்போடு மலர்கள் ஆடிவரும்
காட்சியா?

- கே. டி. சம்பந்தமூர்த்தி.

விடம் போய்ச் சேரத் தயாராகப் புறப் படுவீர். பந்துக்களிடம் விடைபெற்று உத்தர கிரியைகளையும் முடித்துக் கொள்வீராக. குலத்தோடு அழிந்து போகும் காலம் நெருங்கி விட்டது. லங்கையைக் கடைசி யாகக் கண்ணால் பார்த்து அனுபவித்துத் திருப்தி யடைவீர்!" என்றான்.

ராவணனுக்கு நெருப்பைப் போல் பொங்கியது கோபம். "பிடி! கொல், துஷ்டனை!" என்றான்.

உடனே இரண்டு ராக்ஷசர்கள் அங்க தனை இரு பக்கத்திலும் பிடித்துக் கொண் டார்கள். அவன் அந்த இரண்டு பெரும் பூதாகாரமான அரக்கர்களுடன் உயரக் கிளம்பி, இருவரையும் உதறித் தள்ளி, அதற்கும் மேலே கிளம்பி மாளிகையின் விமானத்தை ஓர் உதை உதைந்து உடைத்து விட்டு, ராமன் இருந்த இடத்தை ஒரே தாவாகத் தாவி வந்தடைந்தான்.

அங்கதனுடைய காரியத்தைக் கண்டு ராக்ஷசக் கூட்டத்துக்குப் பெருந் திகில் உண்டாயிற்று. ஆனால் தங்களுடைய பயத்தை மறைத்துக் கொண்டார்கள். விமானம் உடைந்ததைக் கண்டு ராவணன் பெருமூச்சு விட்டான். அதை ஒரு துர்நிமித்தமாகக் கண்டான்.

அங்கதன் திரும்பி வந்ததும் ராமச் சந்திரன் சேனைக்கு உத்தரவு கொடுத்து விட்டான். யுத்தம் ஆரம்பித்தது.

(தொடரும்)

பொறுப்பானவரா இப்படி...?

வட்டமேஜை



குளேஸ்வரன்பட்டி,
குவைகுண்டராமன்.

♦ இயக்குநர் சிகரம் பாலசந்தரின் கண்டனக் கடிதத்தைப் படித்ததும் நானும் அதிர்ச்சி அடைந்தேன். வரிசையாகப் படங்கள் வெள்ளி விழா கண்டு, பாரதிராஜாவின் ஐந்தாவது படமும் நன்றாக இருந்ததும் பாரதிராஜாவிற்கு HATS OFF சொல்லி மாலை அணிவித்து மேளதாளத்துடன் வெற்றி பவனி வருகிற மாதிரி கல்கி கார்ட்டூன் போட்டுப் பாராட்டியது இன்னும் பசுமையாக என்னைப் போன்ற எறும்புகளுக்கு நினைவில் இருக்கும் போது, சிகரத்திற்கு எப்படி மறந்து போயிற்று என்று ஆச்சர்யமாக இருக்கிறது!
சென்னை-92,
கே.ராஜகோபால்.

♦ "பட்டினி கிடப்பவன் அவ்வப் போது கிடைக்கும் இலவச மிட்டாயின் இனிப்பில் மயங்குவது போல்தான் மக்கள் நிலை!"- மக்களின் இன்றைய நிலையைச் சரியாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள் தலையங்கத்தில்! இலவச, மானிய திட்டங்களுக்குக் காரணமே மக்கள்தான். இவர்கள் எதிர்பார்ப்பதால் தான் ஆட்சியாளர்கள் கொடுத்து 'காரியம்' சாதித்துக் கொள்கிறார்கள். ஆகவே, மாற வேண்டியது மக்களின் மனோ நிலை தான்!
திருவெண்ணெய்நல்லூர்,
வைத்யா.

♦ கட்சி தொடங்கிய சில மாதங்களிலேயே கோஷ்டி சண்டையா? உருப்பட்டாற் போலத் தான்! எதற்கும் கோஷ்டிச் சண்டை வரும் போதெல்லாம் தமிழ்நாடு காங்கிரஸை வைகோ. நினைத்துக் கொண்டால் சரி.
சிதம்பரம்-2, ஸ்ரீவித்யா
காளிதாஸ்.

♦ வை.கோ. வைப்பற்றி "கூடாரம் கலைகிறது?" என்ற தலைப்பில் எழுதப்பட்டிருப்பது எலியை மலையாக்கிக் காட்ட முயற்சி செய்யும் வித்தை. தனி வாழ்விலும் பொது வாழ்விலும் முற்றிலும் களங்கப்பட்டுப் போன வேஷதாரிகளின் அடாவடி அரசியலால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியோடு இருந்த நிலையில் புரட்சிப் புயலாகப் புறப்பட்டார் வை.கோ. காலம் தலைவனை இனம் காட்டியது. சின்னா பின்னப் பட்டுப் போன பொது வாழ்க்கையைச் சீர்திருத்தத் துடிக்கும் அவரது ஆவேசத்தைக் கல்கி பாராட்ட வேண்டாமா?
அருப்புக்கோட்டை,
சு.ரெங்கசாமி.

♦ நடிகர் அர்ஜுனின் தன்னம்பிக்கையைப் பார்க்கும்போது அவர் நிச்சயம் சாதிப்பார். வாழ்த்துக்கள் அர்ஜுன்.
நெல்லிக்குப்பம், தமிழ்ப்பரிதி.

♦ 'நான் ஓர் இந்தியன்.. எனக்கென்று பொறுப்பு உள்ளது..' என்று அர்ஜுன் சொல்கிறார். சரிதான். இத்தனை பொறுப்பான அவர், குடும்பத்துடன் பார்க்கும்போது 'கண்களை உறுத்துமாறு' ஜெய் ஹிந்த் படத்தில் ரஞ்சிதாவை உரித்த கோழியாகக் காட்டுவது ஏனாம்..!
மதுரை-20, எ.சாமுவேல்
ராஜ்குமார்.

♦ "ஒரு கத்தரிக்காய் கார் ஓட்டுகிறது" கட்டுரை ஆச்சரியமும் பிரமிப்பும் ஏற்படுத்தியது.
சென்னை-4, சி.சாந்து
உஸ்மானி.

♦ திரைப்படங்களுக்காக அரசு அளித்த மானியம் குறித்துத் தயாரிப்பாளர்கள் பற்றிக் கவலைப்படாமல் மிகவும் நியாயமான முறையில் வீரத்துடனும், விவேகத்துடனும் எழுதியுள்ள கட்டுரை இந்த அரசின் மரத்துப் போன உடலில் உரைக்காது என்றாலும் ஏழை, நடுத்தர ஏன் பணக்கார நல்ல மனிதர்களின் மனதில் ஒரு தெளிவான சிந்தனையை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.
சிதம்பரம்,
டி.எஸ்.ராஜ்.

♦ கல்கி 27.3.94 இதழில் திருரங்கராஜன் ஸ்ரீரங்கம் கோயிலில் தமது வீணை இசை மூலம் தினமும் பெருமாளைப் பள்ளி எழுப்பி, பள்ளி கொள்ள வைப்பதாக எழுதப்பட்டுள்ளது. இது தவறு. ஸ்ரீரங்கராஜாவுக்குக் காலையில் வீணை சேவிக்கும் கைங்கர்யம், விஸ்வரூபம் நடைபெறும் நாட்களில்தான் உண்டு. பள்ளி கொள்ள வைக்கும் போதும் அநேக நாட்களில் வீணை வாசிக்கும் வழக்கம் இல்லை.
ஸ்ரீரங்கம்,
எஸ்.நாதமுனி அய்யங்கார்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4302
Registered as Newspaper in Srilanka

We are proud to announce that our deposit crosses more than one crore with the valuable support of our shareholders

சுலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

பதிவு அலுவலகம் : 8, கற்பகாம்பாள் நகர்,
மைலாப்பூர், சென்னை - 600 004. போன் : 4993241/4990953
கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு,
பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003. போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8.30 முதல் மாலை 5.30 வரை
ஞாயிறு காலை 8.30 முதல் பகல் 12.30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுடன் மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)

கடன் நகைகள் பேரில் கிராம் 10க்கு ரூ. 3000/- வழங்கப்படும்.

இயக்குநர்கள்

பெயர்	விலாசம்	தொழில்
திரு T.V. சீனிவாசன்	15 லஸ் அவின்யூ சென்னை - 4	நிதி ஆலோசகர் Formerly SBI
திரு P.K. சந்திரசேகரன்	89 போயஸ் கார்டன் சென்னை- 86	P.K. வடுவெம்மாள் குரூப் இரும்பு வியாபாரம்
திரு ப்ரவின் கோவிந்தராவ்	22 போயஸ் கார்டன் சென்னை - 86	Architect P.S. Govind Rao, Madras.
திருமதி P.C. சுந்தரவதனி	89 போயஸ் கார்டன் சென்னை - 86	சுந்தரவதனி கல்யாண மண்டபம், எழும்பூர், சென்னை-7 ☎ 8281078
திரு P.K.C. ரமேஷ்	89 போயஸ் கார்டன் சென்னை - 86	பிரசாந்த் ஸ்டீல்ஸ்
திரு D. தனுஷ்கோடி	21/1A பழைய குயவர்பாளையம், மதுரை - 625 009	Nippon Furniture, Madurai.
திரு P.C. பாஸ்கர்	89 போயஸ் கார்டன் சென்னை - 86	Annamalai Steels
திரு K.R. நிரஞ்சன் குமார்	1 பின்னி ரோடு சென்னை - 86	K.V.R. பஸ் சர்வீஸ் சென்னை.
திரு P.C. சியாம் சுந்தர்	89 போயஸ் கார்டன் சென்னை -86	Deepu Steels
திரு K.G. கிருஷ்ணன்	Y-210, 2வது அவென்யூ சென்னை - 40.	ஜெனரல் ஃபாப்ரி கேட்டர்ஸ் (பி) லிமிடெட்

First Anniversary

AVAIL

Sullivan Garden Benefit Fund Lockers